
www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

அஃதவரின் பரணி அறி!
சென்று குடாநாட்டில் சிங்கக் கொடிநாட்டி
வென்று வந்த வீரன் வீறலுக்கு – நன்றிதர
சப்புமால் குமரபுரம் சமைத்ததிலே தப்பென்ன?
தப்பில்லைத் தம்பி தணி!

– ஈழமோகம்

இதழ்-121 மே.8 - மே.21. 1997 விலை ரூபா.10.00




# அன்று: யாப்பா பட்டுண!
# இன்று: சப்புமல்புர!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சரிநிகர்

இரு வாரங்களுக்கொருமுறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை-ரூபா.300
வெளிநாடு-U.S.$.50
(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE
என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு-05

தொலைபேசி-593615, 584380
தொலைமடல்-594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக
கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி
வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென அனுப்பப்படும்
படைப்புகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.


# அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம்!

— வாசு

காணாமற் போனோர் தொடர்பாக விசாரித்து நீதியை நிறைவேற்றுவதாகப் பொறுப்பெடுத்தவர்கள் இன்று அவ் அநியாயங்களைச் செய்த படுகொலைகாரர்களுக்கு பாதுகாப்பு அளிப்பார்களானால் நீதியை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வற்புறுத்த முழுச் சமூகத்தை கிளந்தெழச் செய்ய வேண்டி ஏற்படுமென இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காணாமற் போனவர்களின் பெற்றோர்கள், பிள்ளைகளின் சங்கத்தின் ஏழாவது வருட நிறைவையொட்டி 29.04.1997 அன்று கொழும்பு பொது நூல் நிலைய கேட்போர் கூடத்தில் உரையாற்றுகையில் அவர் அவ்வாறு தெரிவித்தார்.

காணாமற் போன பிள்ளைகள், பெற்றோர் சார்பாக நாம் எவ்வளவு காலமாக அழுது புலம்பி வருகிறோம் என இந்நிறைவு விழாவின் மூலம் தெளிவாகிறது. காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரித்து அறிய இவ்வரசு ஆணைக் குழுக்களை அமைத்தது. ஆனாலும் அவற்றின் செயற்பாட்டுக்கு வசதிகள் போதியளவு இருக்கவில்லை. இவ் ஆணைக் குழுக்களின் காலக் கெடு நீடிக்கப்படவும் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டியதாயிற்று.

இப்போது ஆணைக் குழுவினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள தகவல்கள் முக்கியமானவையாதலால் அவற்றை எழுத்தில் அறிக்கைப் படுத்தி வைப்பது எதிர்காலத்தில் அவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்க அவசியமானதாகும். ஆணைக் குழுவின் முன்னிலையில் வெளிவராத காணாமற் போதல் சம்பவங்கள் இன்னும் பெருமளவு உள்ளன. இவ்வாறு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் பற்றி விசாரிக்க இப்போதுள்ளதை விட வசதிகளும், ஆட்பலமும் ஆணைக் குழுக்களுக்கு அரசால் வழங்கப்பட வேண்டும்.

பொலிஸ் மட்டத்திலும் இப்பிரச்சினை இழுத்தடிக்கப்படுகிறது. இப்பிரச்சினை பற்றி நான் பாராளுமன்றத்தில் 1989, 1990, 1991களில் பேசியுள்ளேன். ஆனாலும் அரசாங்கம் நான் நடத்திய ஆர்ப்பாட்டத்தை ஒடுக்கியது. காணாமற் போனவர்களின் பெற்றோர், பிள்ளைகளின் மனதில் எழுந்த வேதனை கடந்த அரசைத் தோல்வியடையச் செய்யக் காரணமானது.

ஆனாலும் நீதியை நிலைநாட்ட அதிகாரம் பெற்றவர்கள் அதற்கு மாறாகச் செல்கின்றனர். அது பற்றியும் இன்று தனியான குற்றப் பத்திரிகையொன்றை முன்வைக்க வேண்டியுள்ளது. மக்கள் எதிர்ப்பு வெடித்துச் செல்வதால் கிளர்ச்சி ஏற்படுகிறது. அரசு அதனை ஒடுக்கப் படுகொலை செய்கிறது. தத்தமது இடங்களின் பாரம்பரியத்தைப் பாதுகாக்க முன்வந்த நுரைச்சோலை கிராமத்தவர்கள் அனுபவிக்க வேண்டியிருந்த தலைவிதியை நாம் மறக்கக் கூடாது. அனல் மின்நிலைய அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த அக்கிராமத்தவர் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார்.

மக்கள் தீயை அணைக்கவெனப் பதவிக்கு வந்தவர்கள் இன்று, அதனைச் செய்யாவிடின் அதற்கு எதிராகப் பேசவோ, அதற்கு அப்பால் நடவடிக்கை எடுக்கவோ முன்வர வேண்டும். தவறு செய்தவர்களுக்கு இவ்வரசாங்கம் பாதுகாப்பு அளிப்பதானால்.... நாம் அன்று நீதி கோரி நடத்திய போராட்டத்தை மேலும் நடத்திச் செல்ல வேண்டி ஏற்படும். அவ் அநியாயம் வெளிவரும் வரை மக்கள் தீ அணையும் வரை அப் போராட்டத்தை நடத்திச் செல்ல வேண்டும்.

கடந்த யுகத்தில் ஏற்பட்ட பயங்கரவாதத்தையும், அதனை ஒடுக்க நடத்தப்பட்ட அரச பயங்கரவாதத்தையும் சமப்படுத்தும் விதத்தில் காட்ட ச் சிலர் முயற்சிக்கின்றனர். தமது உரிமைகளைப் பாதுகாக்க முறையான விதத்திலோ அன்றி முறையற்ற விதத்திலோ நடவடிக்கை எடுக்கலாம்.

மக்கள் உரிமைகளைப் பாதுகாக்க, வாழும் உரிமையை வழங்க ஆட்சியாளர்கள் தயாரில்லாவிடின் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டி ஏற்படுகிறது. அதற்காக மக்களைத் தயார் படுத்த வேண்டும்.

# வெற்றி!

ஒலிபரப்பு அதிகார சபை மசோதாவை எதிர்த்து தொடர்பூடகவியலாளர்கள் 'கடந்த திங்கட்கிழமை தொடர்பு சாதன, சுற்றுலாத்துறை, விமானச்சேவை அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இம்மசோதா கடந்த ஐ.தே.க. அரசில் தயார் செய்யப்பட்டு இவ்வரசால் அமுல்படுத்தப்பட இருந்தது. இம்மசோதா தொடர்பூடகவியலாளர்களைப் பெருமளவில் பாதிக்கும் என்பதாலும், இரகசியமான முறையில் பாராளுமன்ற வாக்கெடுப்புக்கு விடாமல் அமுல்படுத்தப்பட இருந்தாலும் பரவலாக எதிர்புக் கிளம்பின.

(இந்த எதிர்ப்பின் ஓர் அங்கமாகவே குறித்த ஆர்ப்பாட்டம் நடந்தது.)

ஆர்ப்பாட்டம் முடிந்த மறுநாளே இம்மசோதா பாராளுமன்ற வாக்கெடுப்புக்கு விடப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படும் பட்சத்தில் மட்டுமே அமுல்படுத்தப்பட முடியும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இது தமக்குக் கிடைத்த வெற்றியெனவும் எப்படியும் இது பெரும்பான்மையைப் பெறாது எனவும் ஊடகவியலாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.

(இம் மசோதா தொடர்பான கட்டுரை வேறோரிடத்தில் பிரசுரமாகி யுள்ளது)

# எஞ்சியிருப்பது ஒண்ணே ஒண்ணு!

விமானப் படைக்குச் சொந்தமான விமானிகளற்ற தன்னியக்க யூ.ஏ.வீ. ரகத்தைச் சேர்ந்த மூன்றாவது விமானமும் காணாமற் போன தன் பின்னணியில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருக்கக் கூடும் என்ற சந்தேகம் ஒன்று விமானப் படையின் மத்தியில் நிலவுவதாக விமானப் படைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 01.05.1997 அன்று மு.ப. 9.00 மணியளவில் வவுனியா விமானப் படை முகாமிலிருந்து மேலெழுந்த இவ் விமானம் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான ஓமந்தைப் பிரதேசத்தின் மேல் வானத்தில் வேவுபார்த்துக்கொண்டிருக்கையில் மர்மமான முறையில் காணாமற் போயுள்ளது.

''கேலமா'' என்ற பெயரில் அறியப்படும் இந்த யூ.ஏ.வீ.இன விமானம் தொலைக்கட்டுப்படுத்தி (Remote Control) மூலம் இயக்கப்படும் ஒன்றாதலால் அதி சக்தி வாய்ந்த தொலைக் கட்டுப்படுத்தியொன்றைப் பயன்படுத்திப் புலிகள் இயக்கம் இவ்விமானத்தைத் தமது பகுதியொன்றினுள் தரை இறக்கியிருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அப்பேச்சாளர் கூறினார். காணாமற் போகும் போது அது நிலத்திலிருந்து 10,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்ததாகவும், அதனால் அதனை சுட்டு அழிப்பது இலகுவான காரியமல்லவென்பதால் இதனை அதி சக்தி வாய்ந்த தொலைக் கட்டுப்படுத்தி ஒன்றின் மூலமாக தரையிறக்கியிருப்பதே கூடியளவு சாத்தியமானது என்று நம்பப் படுகிறது.

ஏற்கெனவே இவ்வருடம் ஜனவரி 18ஆம் திகதி யூ.ஏ.வீ. இன விமானமொன்று பூநகரி பிரதேசத்தில் நிலத்தில் விழுந்து நொருங்கியது. இன்னுமொரு யூ.ஏ.வீ. இன விமானம் இதே வருடம் பெப்ரவரி 12ஆம் திகதி அனுராதபுரத்தில் விழுந்து நொருங்கியது.

விமானப்படையிடம் இப்போது இந்த ரக விமானத்தில் எஞ்சியிருப்பது இன்னும் ஒரு விமானமே என்று விமானப்படையைச் சேர்ந்த அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

# ஐ.தே.க.விடம் யோசனைகள்!

வட - கிழக்கு மாகாணங்களில் தனித்தனியாக முஸ்லிம், தமிழ்ச் சபைகளை அமைக்கும் யோசனையொன்றைத் தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும், பிரதான அரசியல் கட்சிகளிடம் முன்வைக்கத் தயாராகி வருவதாக நம்பத் தகுந்த உயர்மட்ட அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதில் தமிழ்ச் சபைக்கு வட - கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களின் வீகிதாசாரம் அதிகமான பகுதிகளை உள்ளடக்குமாறும், முஸ்லிம் சபைக்கு கிழக்கு மாகாணத்தையும், கல்முனைப் பிரதேசத்தையும் ஒன்றிணைக்குமாறும் யோசனை தெரிவிப்பதுடன், இம்மாகாணத்தின் சிங்களப்பிரதேசத்தை ஊவா மாகாணத்துடன் ஒன்றிணைக்குமாறு யோசனை தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான யோசனைகள் இப்போதே ஐக்கிய தேசியக் கட்சியிடம் முன்வைக்கப்பட்டிருப்பதாக அத்தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

யோசனைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 06.05.1997 அன்று இவ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளதாகவும் அதில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அத்தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# தமிழ்ப்படை வேண்டாம்!

யாழ்ப்பாண மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.இராமமூர்த்தியும், இரா.இராமேஸ்வரனும் 06.05.1997 முதல் அக்கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்காது சுயாதீன உறுப்பினர்களாகப் பாராளுமன்றத்தில் செயற்படத் தீர்மானித்துள்ளதாகச் சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் "தமிழ்ப் படைப்பிரிவு" (Tamil Regiment) என்ற பெயரில் ஆயதப் படையொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென முன்வைக்கப்பட்டுள்ள யோசனையைத் தாம் எதிர்ப்பதாலேயே இக் கருத்து முரண்பாடு தோன்றியதாக அவர்கள் தெரிவித்திருந்தனர். ஆயினும், ஈ.பி.டி.பி இயக்கத்திடம் இது தொடர்பாகக் கேட்டபோது இப் பா.உக்கள் இருவரும் அவர்களது தனிப்பட்ட ஒழுங்கீனங்கள் காரணமாக கட்சி நடவடிக்கையிலிருந்து நான்கு மாதங்களுக்கு முன்பே இடை நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டதாகவும் அவர்களை அப் பதவிகளிலிருந்து அகற்ற ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் தமிழ்படைப்பிரிவு விடயத்தில் தாம் இன்னமும் உறுதியாகவே இருப்பதாகவும் அவ்வியக்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

### திருத்தம்

இதழ் 119இல் (ஏப்ரல்.2-23) வெளியான அலிசாகிர் மௌலானாவின் பேட்டியில் *'நிரந்தர சமாதானத்தை உறுதிப்படுத்தக் கூடிய நியாயமான தீர்வொன்றுக்கு புலிகள் ஒரு போதும் எதிராக இருக்க மாட்டார்கள்"* என்று அமைந்திருக்க வேண்டி வரிகள் தவறுதலாக *தயாராக இருக்க மாட்டார்கள்* என்று பிரசுரமாகியுள்ளது. இத்தவறினால் வாசகர்கட்கும் மௌலானா அவர்கட்கும் ஏற்பட்டிருக்கக் கூடிய அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

-ஆ-ர்

# அமெரிக்கா பாதுகாப்பு!

அரசாங்க உயர்மட்டத்தினரைப் பாதுகாப்பது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக அமெரிக்க உயர் மட்டத்தினர் பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்த வல்லுனர்கள் இருவர் இப்போது இங்கு வந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

உலகின் மிக உயர் அரசியல் தலைவர்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்புக்கு ஒப்பான பாதுகாப்பை இலங்கை அரச தலைவர்களுக்கும் வழங்குவதற்காக இவ் வல்லுனர்கள் இருவரும் செயற்படுவதுடன் இப்போது நடைமுறையிலிருக்கும் உயர் மட்டப் பாதுகாப்பு முறை, விதிகளில் தேவையான மாற்றங்களைச் செய்யவும் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவ் வல்லுனர்கள் இருவரும் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவுக்கும் விஷேட ஆலோசனை வழங்கவுள்ளனர்.


## கலந்துரையாடல்

'இலங்கையின் இனப்பிரச்சினை'

அதிகாரப் பகிர்வு, இரு தரப்புப் பிரவேசம், மூன்றாவது தரப்பு மத்தியஸ்தம் மற்றும் பிலிப்பைன்ஸின் அனுபவங்கள் குறித்த கருத்துப் பகிர்வுக்கான அழைப்பு...!

**இடம்:**
மகாவலி கேந்திர நிலைய மண்டபம்,
கொழும்பு – 7, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,

**காலம்:** 08.05.1997

**நேரம்:** பி.ப.3.30 – 6.30 வரை

**தலைமை:** சார்ள்ஸ் அபேசேகர

**கருத்துரைகள்:**
1.சரத் அமுனுகம (பா.உ),
2.டலஸ் அலஹப்பெரும (பா.உ.)
3.ரவுப் ஹகீம் (பா.உ)
4.ஜோசப் பரராஜசிங்கம் (பா.உ)

**ஏற்பாடு:**
இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மணி ஐயரின் மணிக் கதை!

"தந்தை செல்வாவின்" நூற்றாண்டு விழாவுக்கான முயற்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி இறங்கியிருப்பது பற்றி ஏற்கெனவே இந்தப்பத்தியில் எழுதியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்த விழாவையொட்டி கொழும்பில் அண்மையில் நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் இந்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மணி சங்கர ஐயர் ஆற்றிய உரையொன்று த.வி.கூ. தலைவர் சிவசிதம்பரம் அவர்களுக்கே எரிச்சலூட்டும் விதத்தில் அமைந்து விட்டது ஒரு சுவாரஸ்யமான விடயம்.

கொழும்பு ஜயவர்தன கலாசார மண்டபத்தில் சபாநாயகர் ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மணி சங்கர ஐயர் பல 'மணியான' கருத்துக்களை உதிர்த்திருந்தார். அவரது அந்த மணியான கருத்துக்களை கேட்டு சகிக்க முடியாததாலோ என்னவோ நன்றியுரையின் போது அவரை மறுத்துப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் த.வி.கூ. தலைவருக்கு ஏற்பட்டு விட்டது.

ஆம்! மணி சங்கர ஐயரின் பேச்சுக்கள் அவ்வளவுக்கு எரிச்சலூட்டும் விதத்தில்தான் அமைந்திருந்தன! த.வி.கூ. வினையே எரிச்சலடையச் செய்யும் அளவுக்கு அமைந்த வருகை தந்த இந்தியாவின் முன்னாள் பா.உ.வும், இந்திய வெளிநாட்டுச் சேவையில் பணியாற்றிய வருமான மணிசங்கர ஐயர் இவ்வாறு கூறத் துணிந்ததற்கு காரணம் இல்லாமல் இல்லை.

கூட்டத்தினை ஒழுங்கு செய்த த.வி.கூ.வினரின் அண்மைக்கால அரசியற்போக்கு, அவர்களின் அரசாங்கத்துடனான ஒட்டு கூட்டத்திற்கு தலைமை ஏற்க சபாநாயகரே வந்திருந்தமை போன்ற விடயங்கள் அவருக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும். ஒரு இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதி போல அவர் தனது உரையை ஆற்றியிருந்தார். இந்தக்கருத்துக்கள் த.வி.கூ.வுக்குப் பிடிக்காது என்று அவர் நினைத்திருக்க எந்த நியாயமும் இல்லையே! எனவே அவர் தனது நிலைப்பாட்டை தயக்கமின்றி தெளிவாகக் கூறி விட்டார்.

மாட்டுப்பட்டு விழித்தது த.வி.கூவினர்தான். இப்படி தமது 'அடிமடியில் கைபோடும்' விதத்தில் அவர் பேசுவார் என்பதை அவர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. விருந்தினரை எதிர்த்துப் பேசுவதா அல்லது தமது மானத்தைக் காப்பதா என்ற பிரச்சினையில், தமது மானத்தை பெரிதாக நினைத்தார் தலைவர். நன்றியுரையின் போது, அவரது கூற்றுக்களை மறுத்துப் பேசிவிட்டார்.

கூட்டம் கொஞ்சம் சலசலத்துத்தான் போய்விட்டது!

எப்படியோ, இதற்குப்பிறகு இந்திய ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற விருந்தொன்றின்போது கலந்து கொண்ட த.வி.கூ. உறுப்பினர்கள், ஐயர் தம்மை வகையாக மாட்டி விட்டுவிட்டார் என்று குறைப்பட்டதுடன், அவரை தாஜா பண்ணிக்கொண்டதாகவும் கேள்வி.

மணி ஐயர் வேறு ஒரு செய்தியையும் தெரிவித்திருக்கின்றார். சபாநாயகர் ரத்நாயக்க அவர்கள் அளித்த விருந்துபசாரம் ஒன்றின் போது அவர் இந்தியாவின் பிராந்திய அரசுகள் குறித்த தற்போதைய நிலைப்பாட்டைத் தெரிவித்தார். அதாவது பிராந்திய அரசுகள், தமக்கு அயலிலுள்ள நாடுகளுடன் நல்லுறவை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். தமிழ்நாடு இலங்கையுடன் நல்லுறவைக்கொண்டிருக்க வேண்டும் என்பது இதன் பொழிப்பு!

ஐயர் அவர்களின் அபிப்பிராயத்தில் இலங்கை அரசாங்கம் இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வருவதில் அக்கறையாக இயங்கி வருகிறது. தமிழரையும் சிங்களவரையும் ஒன்று சேர்க்கும் நல்ல ஒரு முயற்சியில் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டு வருகிறார். எனவே இங்கு விரைவில் சமாதானம் ஏற்பட்டு விடும்.

இது அவரது நம்பிக்கை.

இலங்கையின் இனப்பிரச்சினையை வெறும் மொழிப்பிரச்சினையாகவும், வாய்ப்பு வசதிகள் குறித்த பிரச்சினையாகவும் கருதுகின்ற பாமரத்தனமான அரசியல் நம்பிக்கையே பொதுவாக இவ்வாறான பேச்சாளர்களின் கருத்தாக இருக்கிறது. இந்திய அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, இலங்கையின் இனப்பிரச்சினை அவர்களது பிராந்திய நலன்களுக்கும் உள்நாட்டு அரசியல் நிலைமைகளைப் பாதிக்காத விதத்திலும் தீர்க்கப்பட வேண்டும் என்று கருதுவதால் இலங்கைப் பிரச்சினையை வெறும் மேலோட்டமான பிரச்சினையாகக் காட்டுவதில் கவனமாக இருக்கிறார்கள்.

மொழிப்பிரச்சினை ஏற்கெனவே அரசியலமைப்பு ரீதியாக தீர்க்கப் பட்டு விட்டது. வாய்ப்பு வசதிகள் பிரச்சினை, யுத்தம் நின்றால் தானாகவே தீர்ந்துவிடும் என்ற விதத்தில் தான் அரசாங்கமும் கூட இதை அணுகுகிறது.

நமது பல அரசியல் தலைவர்களுக்கு கூட இப்பிரச்சினை இதற்கு மேல் ஆழமானதாகத் தெரியவில்லை.

ஆனால், யதார்த்த நிலை இதைவிட ஆழமானதாக, மிகவும் பாரதூரமானதாக இருக்கிறது. இது ஒரு இனத்தின் தேசிய இருப்பு, பாதுகாப்பு என்பன குறித்த அச்சத்துடன் பிணைக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. தேசிய அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை என்ற மட்டத்திற்கு கோரிக்கை வளர்ந்து விட்ட நிலையில் அதற்காக ஆயுதம் ஏந்திய போரில் இறங்கிய ஆயிரமாயிரம் போராளிகள் உயிரைக்கொடுத்தும், பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப் பட்டும், லட்சக்கணக்கில் மக்கள் அநாதைகளாகியும் விட்ட நிலையில், போராட்டம் நடந்து கொண்டிருக்கும் ஒரு நிலையில் இதனை வெறும் அற்ப பிரச்சினையாக கருதிக்கொண்டிருப்பது வெறும் முட்டாள் தனமல்ல, சுத்தமான அயோக்கியத்தனம் ஆகும்; அரசியல் அயோக்கியத்தனம்!

அவரது மணி மொழிகள் இவைதான்:

1. இலங்கையில் இரண்டு தேசங்கள் என்ற கோட்பாட்டை நீக்கி, ஒரு இணைந்த கூட்டான தேசியம் (Composite nation) என்ற ே..ாட்பாடு இருப்பதே பொருத்தம னது என்பதை தமிழர்கள் புரிந்து கொள்ள வேள ம.

2. ,ாந்திய அமைப்புக்களை கலைக்கும் அதிகாரம், இந்தியாவில் உள்ளதுபோல மத்திய அரசாங்கத்திடம் இருக்க வேண்டும். இந்தியாவின் அரசியலமைப்பில் உள்ள இந்த கலைப்பதற்கான அதிகாரத்தை வழங்கும் சரத்துதான் அதை இன்னமும் ஒற்றுமையாக வைத்திருக்கிறது.

3. இலங்கையின் பல்லினங்கள் வாழும் பகுதிகளான மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களைப் பொறுத்தவரை சிக்கல் இல்லை. ஆனால் குடாநாடு போன்ற ஒரு மொழி பேசும் பிரதேசங்களே சிக்கலை தருகின்றன. (வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஒரு மொழி மட்டும் பேசும் பிரதேசங்களை இல்லாமல் செய்யும் விதத்தில் அங்கு குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படின் பிரச்சினைகள் குறையும்.)

4. இந்திய சமாதானப்படை வடக்கு கிழக்கில் வந்து போரிட்ட காலத்தில் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்த ஒரு விடயம் என்னவென்றால், வடக்கிலுள்ள மக்கள் எதற்காக போராடுகிறார்கள் என்பதாகும். அங்கிருந்த வாய்ப்புகளையும், வசதிகளையும் பார்த்த அவர்களுக்கு இவர்கள் ஏன் போரிட வேண்டும் என்று தோன்றியது நியாயம்தானே!

மணி சங்கர ஐயரின் இந்த மணியான வாக்குகள் 'தந்தை செல்வா'வின் நினைவு விழாக் கூட்டத்தில் தெரிவிக்கப் படுவதை ஜீரணிப்பது இலேசான ஒன்றல்ல என்பது வெளிப்படை.

ஒருவகையில், த.வி.கூ. வின் இக் கூட்டத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்ற என்று இந்தியாவிலிருந்து

இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிப் பேசுபவர்கள், அவர்கள் இந்திய அரசியல்வாதிகளாயினும் சரி, வேறெந்த நாட்டு அரசியல்வாதிகளாயினும் சரி, இங்குள்ள மக்களின் போராட்டம் அவர்களது அரசியல் உரிமைக்கான சுய அங்கீகாரத்துக்கான தேசியப் போராட்டம் என்பதை மறந்து விட்டுப்பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

செல்வாவின் நூற்றாண்டு விழாவைக்கொண்டாடுபவர்கள், அவரின் அரசியல் உரிமை குறித்த கருத்துக்களுக்கு ஓரளவுக்காவது மதிப்புக்கொடுப்பவர்களாக இருந்தால், இனப்பிரச்சினை பற்றிய இத்தகைய புரிதல் உள்ளவர்களை பேச அழைப்பது நல்லது.

வரலாறு பின்னோக்கி ஓடுவதில்லை. தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்று அனைத்து மக்களும் சேர்ந்த ஒரு தேசியம் என்பது, பரஸ்பர அங்கீகாரம், கௌரவம், சமத்துவம் என்பன இல்லாமல் இனி ஒரு போதும் சாத்தியப்படப்போவதில்லை என்பதையும், அவையற்ற ஒற்றுமை என்பதைவிட அவற்றைத் தரவல்ல பிரிவினையையே அம்மக்கள் விரும்புவார்கள் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதைப்புரிந்து கொள்ளாதவரை, மிஞ்சப்போவது வெறும் கூச்சல்தான்.

விளைவு, நாடு இன்னும் ஒரு சில தசாப்தங்களுக்கு தொடர்ச்சியான இரத்தக்காடாகவே இருப்பதுதான்!

நிரேஜப்பார்:

# அனல் மின் நிலையம்: அனல் தெறிக்கிறது!

– தர்ஷி –

புத்தளம் களப்பும் இந்து சமுத்திரமும் சூழ அமைந்துள்ள கற்பிட்டிப் பிரதேசம், ஒரு லட்சம் மக்கள் வசிப்பதற்கான தாராள இடவசதியைக் கொண்டதாகும். விவசாயம் செய்வதற்கு ஏற்ற வளமான மண் கொண்ட இப்பிரதேசத்தில் வெங்காயம் 40 சதவீதம் உற்பத்தியாகின்றன. இவ்வாறான செழிப்பான பிரதேசத்தில் மின்சக்தி நிலையம் அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை அப்பிரதேச மக்கள் தெளிவாக அறிந்திருக்கவில்லை எனலாம். எனினும் நடக்க விருக்கும் விபரீதம் புரிந்தவுடன் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். கடந்த ஏப்ரல் 25ம் திகதி மக்கள் மனங்களில் பொங்கிக்கொண்டிருந்த அவ்விடயம் பெரும்போராட்டமாக வெடித்தது. சுமார் 5000 மக்கள் புத்தளம் பாலாவியிலிருந்து கற்பிட்டி நுரைச்சோலை வரை வீதியை வழிமறித்து சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் போரராட்டத்தில் ஈடுபட்டனர். பொலிசாரும் கடற்படையினரும் 'காவலுக்கும்' போடப்பட்டிருந்தனர். எனினும் அசம்பாவிதம் எதுவும் இடம் பெறவில்லை. மாலை 5-6 மணியளவில் இச்சூழ்நிலை முற்றிலும் முரண்பட்டு, பொலிசார் கண்ணீர் புகையையும் ரப்பர் குண்டுகளையும் பாவித்து மக்களை தாக்கத்தொடங்கியுள்ளனர். மக்களும் எதிர்த்தாக்குதலாக கற்களை எடுத்து பொலிசாரை நோக்கி வீசியுள்ளனர். இச்சம்பவத்தின் காரணமாக எஸ். சோமசிறி (55) எனும் ஐந்து பிள்ளைகளின் தகப்பன் அவ்விடத்திலேயே மரணமடைய, கிறிஸ்டோபர் டேவிட், ஷலிப், யாசிர் ஆகிய நால்வர் காயமடைந்தனர். பொலிஸ் தரப்பில் ஐவர் காயமடைந்தனர். பொலிஸ் ஜீப்பும் தாக்குதலுக்குள்ளானது.

இவ்வாறானதொரு துக்ககரமான சம்பவத்துக்கான முழுப்பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும்.

900 மெகாவொட் கொள்ளளவு கொண்ட அனல் மின்சக்தி நிலையம் ஒன்றை ரூ. 10 இலட்சம் செலவுடனும் ஜப்பான் நாட்டின் ஆதரவுடன் பிரதேச மக்கள் குறிப்பிடுவதைப்போன்று, அரசாங்கம் எதுவித ஆரவாரமுமின்றி கற்பிட்டி நுரைச்சோலைப் பிரதேசத்தில் ஆரம்பித்திருந்தது. இவ்வாறானதொரு அனல் மின்சக்தி நிலையம் அமைக்க தெரிவு செய்யப்பட்ட 32வது பிரதேசம் இதுவாகும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.ஐ.எச். இலியாஸ் குறிப்பிட்டார். அத்துடன் கற்பிட்டி நுரைச்சோலைப் பிரதேசத்தில் மின்சக்தி நிலையம் அமைப்பது பொருத்தமற்றது என ஐ.தே.க. அரசாங்கம் தீர்மானித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.க. பொருத்தமற்றதென தீர்மானித்த பிரதேசத்தில் மீண்டும் துரிதமாக பொ.ஐ.மு. அரசாங்கம் நிலையத்தை அமைக்க விளைந்தமை மக்களுக்கிடையே பயத்தை தோற்றுவித்திருந்தது. அத்துடன் துரிதமாக இயந்திரங்கள் பொருத்தப்படுவதால் ஏற்படப்போகும் விபரீதத்தை உணர்ந்த மக்கள் ரூ.8 இலட்சம் பெறுமதியான நவீன தொழிநுட்ப இயந்திரங்களை ரயர் இட்டு எரித்துள்ளனர்.

இளந்திடிய பிரதேச மீனவ சங்கத்தலைவர், "நாம் இவ் விடயம் தொடர்பாக எதுவும் அறிந்திருக்க வில்லை. இப்பொழுது எங்களை போகச்சொல்கிறார்கள். மகாவலி பிரதேசத்தில் காணி தருவார்களாம். நாம் இவற்றையெல்லாம் விட்டு எங்கு செல்வது" என்று கேள்வி எழுப்புகிறார். நுரைச்சோலை, பணையடி, நாரகக்கள்ளி, மாம்புரி, ஆலங்குடா போன்ற கிராமசேவக பிரிவுகளைச் சேர்ந்த 20.000க்கும் அதிகமான குடும்பங்கள் இச்செயற்திட்டம் காரணமாக அப்புறப்படுத்தப்படவுள்ளனர் என பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் இம் மின் சக்தி நிலையத்தை கற்பிட்டியில் தலவில கந்தக்குளியில் அமைத்திருக்கலாம். அது ஓர் பாழடைந்த பிரதேசம் எனவும் அம் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் சுற்றுப்புறச் சூழல் அமைப்பு ஒன்றின் எச்சரிக்கையும் கவனத்திற்குட்பட்டிருக்கிறது எனலாம். அக் குறிப்பிட்ட அமைப்பு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து, மின்சக்தி நிலையம் அமைக்கப்படுவதால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை விளக்கியுள்ளது. (புத்தளம் சீமெந்துச் தொழிற்சாலை காரணமாக அங்கு வாழ் மக்கள் பெரும் சுகாதார சீர்கேடுகளை எதிர்நோக்குகின்றமை குறிப்பிடத்தக்கது.) அத்துடன் இப்போராட்டத்தை ஒழுங்குப் படுத்திய பிக்கு ஒருவரும் தலைமறைவாகியுள்ளார் என்பதும் குறிப்பிடப்படுகின்றது.

பொது மக்களின் எதிர்ப்புணர்வை கவனத்திலெடுக்காது அரசாங்கம் மின்சக்தி நிலைய அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாக அநியாயமாக ஓர் அப்பாவி உயிர்பலியாகியுள்ளது. இரணவில சம்பவம் தொடர்பாக மக்களின் பலத்த எதிர்ப்புணர்வுக்கு மத்தியிலும் அரசாங்கம் தமது செயலை நிறைவேற்றியது. அதுபோல் இதுவும் ஓர் இன்னுமொரு இரணவில மட்டுமே.

சம்பவங்களை பார்வையிடச் சென்ற வாசுதேவ நாணயக்கார (இரத்தினபுரி பா.உ) "மக்களால் மேற்கொள்ளப்பட்ட இவ் எதிர்ப்பு போராட்டம் நீதியானதே. இந்த சூட்டுச் சம்பவம் தொடர்பாக ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரவிருக்கிறேன். மக்கள் எதிர்ப்புணர்வு காட்டும் போது அரசாங்கத்தால் நிலையத்தை அமைக்க முடியாது. அரசாங்கம் இதற்கு துப்பாக்கிச் சூடு மூலமாகவா பதில் அளிக்க வேண்டும். நுரைச்சோலையில் இருப்பது முட்டாள்கள் என நினைத்திருப்பர் போலும். சுட்டுக்கொன்று விட்டு நிலையத்தை அமையுங்கள் என ஆணை வழங்கப்பட்டிருக்கும். நானும் இலியாஸ் அவர்களும் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் கதைக்கவிருக்கின்றோம்" எனக் குறிப்பிட்டார்.

இந்நுரைச்சோலை சம்பவத்திற்கு பின்னணியில் ஒரு அரசியல்வாதியின் தொடர்பும் உள்ளது என பொலிசார் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பாக விசாரணையும் இடம்பெற்று வருகின்றது. அத்துடன் போராட்டம் இடம்பெற்றதினம் சுமுகமாகவிருந்த பொலிசார் திடீரென்று மனம் மாறியது கொழும்பில் இருந்து கிடைத்த ஆணையின் பிரகாரமே என மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மின்சக்தி நிலையம் மக்களுக்கும், நாட்டிற்கும் அவசியம் வாய்ந்த ஒன்றாகும். எனினும் மக்கள் எதிர்ப்புணர்வு காட்டும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் அடக்குமுறையைப் பயன்படுத்துவது பூரண ஜனநாயகத்திற்கான, வாக்குறுதியையளித்த அரசாங்கத்திற்கு உரியதல்ல. அத்துடன், நாட்டின் ஒரு பகுதி மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தில் அவ்விடயம் தொடர்பாக அரசாங்கம், அரசாங்க பொதுசன ஊடகங்கள் என்பன கவலை கொள்ளாதிருந்ததும் கவலைக்குரிய விடயமாகும். குறிப்பாக 'அரச தினசரியான சிங்களப் பத்திரிகை கூட இவ்விடயத்தில் பெருமளவு அக்கறை காட்டவில்லை எனலாம். இது அரசாங்கத்தின் அசமந்தப் போக்கையே எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் அரச ஆதிக்கத்தின் கீழ் பல 'இரணவில'க்கள் உருவாகும் என்ற எதிர்வு கூறலையும் எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகள்: ஆட்பலத்தில் வீழ்ச்சியா?

டி.சிவராம்



இலங்கையில் உள்ள சில இராணுவ ஆய்வாளர்கள் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட காலத்திலிருந்து ஒரு முக்கியமான கருத்தைக் கூறி வந்துள்ளனர். போர் நெருக்கடிகள் வடகிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பெரும் சோர்வை காலப்போக்கில் ஏற்படுத்தி விடுமெனவும், இதன் காரணமாக புலிகளுடன் சேர்கின்ற இளைஞர், யுவதிகளின் தொகை வெகுவாகக் குறைந்து விடுமெனவும் இதனால் புலிகளின் போராட்டம் இயல்பாகவே நலிவுற்று இல்லாததாகி விடும் என்பதுமே அவர்களது கூற்று. தற்போது புலிகள் இயக்கத்தில் சிறார்களும், பெண்களும் பெருந்தொகையாகக் காணப்படுவது தமிழீழப் போராட்டத்திற்கான ஆட்சேர்ப்பு வீதத்தில் ஏற்பட்டுள்ள பெரும் வீழ்ச்சியையே காட்டுகின்றது எனவும் இந்த இராணுவ ஆய்வாளர்கள் கூறினர்.

அண்மையில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில் நான் லண்டன் சென்றிருந்தவேளையில் அங்கு சர்வதேசக் கேந்திர ஆய்வுகளுக்கான நிறுவனத்திலும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சின் ஆசியப்பகுதித் தலைமையகத்திலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சந்திப்புகல் இதே கருத்து என்னிடம் கூறப்பட்டது. இதற்கு சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் இராஜாங்கத் திணைக்கள பிராந்திய பாதுகாப்பு அலுவல்கள் அதிகாரி ஒருவரும் என்னிடம் இக்கருத்தைக் கூறியிருந்தார். தமிழீழப் போராட்டம் காலப்போக்கில் ஆட்பற்றாக்குறை காரணமாக நலிந்து நசுங்கி விடும் என்பதை அவ்விடங்களில் நான் மறுத்துரைத்ததன் அடிப்படையில் இலங்கை வந்ததும் சில ஆய்வுகளை மேற்கொள்ளலானேன். அவற்றின் இடைக்கால விளைவே இக்கட்டுரை.

தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கான ஆட்சேர்ப்பு வீதம் காலப்போக்கில் கணிசமாக வீழ்ச்சியடைந்து விடுமா என்பதை நாம் ஆராய வேண்டுமெனில் முதலில் வடகிழக்கில் உள்ள தமிழ் சனத்தொகை சம்பந்தப்பட்ட சில விடயங்களை ஆராய வேண்டும்.

1981இல் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி வடகிழக்கில் 1,429,942 தமிழ் மக்கள் இருந்துள்ளனர். தற்போது இப்பிராந்தியத்தில் பதினேழு இலட்சம் மக்கள் இருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. இதில் 958, 643ஐ விட சற்று அதிகமான தொகையினர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அல்லது படையினர் இல்லாத பிரதேசங்களில் வாழ்கின்றனர். வன்னியில் இராணுவத்தின் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் உள்ள மக்களின் தொகை 28.02.1997 வெளியிடப்பட்ட ஒரு அரச அறிக்கையின்படி 681,358 ஆகும். (வன்னியில் புலிகள் கட்டுப்படுத்தும் பிரதேசத்தில் நான்கு இலட்சத்திற்கும் குறைவான மக்களே வாழ்கின்றனர் எனச் சிலர் கூறுவர். இது அரசின் சில இரகசிய மதிப்பீடுகளின் அடிப்படையில்கூட நியாயப்படுத்த முடியாத ஒன்றாக உள்ளது.)

மட்டக்களப்பின் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் அண்ணளவாக 207,285 மக்கள் வாழ்கின்றனர் என 94-95க்கான மதிப்பீடுகளைக்கொண்டு கணக்கிடும் போது தெரிகிறது. மட்டு மாவட்டத்தின் சனத்தொகையில் 76 சதவீதம் கிராமப்புறங்களிலேயே வாழ்கின்றது. புலிகளின் கட்டுப்பாட்டில் இன்று காணப்படும் மட்டக்களப்பின் கிராமப்பகுதிகளை நாம் கணக்கிற்கொண்டு பார்க்கும்போது மாவட்டத்தின் தமிழ் மக்கள் தொகையில் குறைந்த பட்சம் 65சதவீதமாவது புலிப்பகுதியில் உள்ளதெனக் கூறலாம். இத்துடன் திருகோணமலை, அம்பாறை, யாழ் மாவட்டங்களில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் எழுபதாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்கின்றனர்.

இதனடிப்படையில் பார்க்கும் போது வடகிழக்கில் இருக்கும் மொத்தச் சனத்தொகையின் 56 சதவீதத்திற்கு மேல் (958,643) அரசின் நேரடிக்கட்டுப்பாட்டில் இல்லையென்று கூறலாம். இதிலும் குறைந்த பட்சம் 888,643 (52%) பேர் புலிகளின் நேரடிக்கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழ்கின்றனர்.

புலிகளின் தற்போதைய படைபலம் கிட்டத்தட்ட பதினான்காயிரம் என சில கணிப்பீடுகள் கூறுகின்றன. புலிகளிடம் நான் இதைப் பற்றி வினவிய போது தமது பலம் இதைவிட கூடுதல் எனக்கூறினார்களேயொழிய திட்டவட்டமான ஒரு தொகையை கூற மறுத்துவிட்டனர். (எனவே நாம் பதினான்காயிரத்தையே அடிப்படையாகக்கொண்டு நமது கணிப்பீடுகளை இங்கு மேற்கொள்ளவேண்டியதாகிறது.)

புலிகள் தமது தற்போதைய படைப் பலத்தை 1991 இற்கும் 95இற்கும் இடையில் கட்டியெழுப்பினர். இப்பலமானது (14,000) இக்காலகட்டத்தில் வடகிழக்கில் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் வாழ்ந்த மக்கட் தொகையின் (12இலட்சம்) 1.1வீதமாகும்.

இக்காலப் பகுதியில் ஏறத்தாழ 4-5 இலட்சம் மக்கள் வடகிழக்கின் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த பகுதியில் இருந்தனர்.

இராணுவத்தின் தற்போதைய பலம் 110,000 எனக் கணக்கிடப்படுகிறது. புள்ளி விபரத்திணைக்களம் 94இல் மேற்கொண்ட ஒரு மதிப்பீட்டினடிப்படையில் பார்க்கும் போது தற்சமயம் இலங்கையின் 134இலட்சம் சிங்கள மக்கள் உள்ளனர். எனவே இலங்கை இராணுவத்தின் பலம் சிங்கள மக்கட்தொகையின் .82 வீதமாக உள்ளது. இராணுவத்தின் ஆட்சேர்ப்புப் பலத்தில் முஸ்லிம்களும் அடங்குவர். எனினும் அவர்கள் இலங்கை அரச படைகளில் புறக்கணிக்கத்தக்க எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றமையால் முஸ்லிம் சனத் தொகையை இம்மதிப்பீடு கருத்திற்கொள்ளவில்லையென்பதை இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும்.

இவ்வாறான விகிதாசாரத்தின் அடிப்படையில் ஒரு சமூகத்தின் படைமயமாக்கலையும், போரிடு திறனையும் கணிப்பிடுகின்ற ஆய்வு முறையினை அறிமுகப்படுத்தியவர் ஸரனிஸ்லாவ் அன்றெஸ்க்கி எனும் போர்ச்சமூகவியலாளர் (Military Sociologist) ஆவர். அவர் பயன்படுத்திய போர்ப்பங்கேற்பு விகிதம் (Military Participation Ratio) என்னும் கருத்தாக்கத்தை எனது ஆய்வு கைக்கொள்கிறது. அன்றெஸ்கி, போவர் சமூகத்தையும் கோசாக்குகளையும் உயர் போர்ப் பங்கேற்பு விகிதம் கொண்ட மக்கட் கூட்டங்களுக்கு உதாரணமாக காட்டுவார். 1891இல் தென்னிந்தியாவில் பிரிட்டிஷார் நடத்திய குடிசன சாதி மதிப்பீட்டின்படி அங்கிருந்த தமிழ் சனத்தொகையில் 26 சதவீதம் வனனியர், மறவர், கள்ளர், அகம்படியார் போன்ற பாரம்பரியப் போர்ச் சாதிகளாகக் காணப்பட்டன என்பது இத்தொடர்பில் நோக்கற்பாலது.

பொதுவாகப் பல மேற்கத்திய போரியலாய்வாளர்கள் ஒரு சமூகம் ஆகக்கூடுதலாக 10 போர்ப்பங்கேற்பு வீதத்தையே தாங்கமுடியும் எனக்கூறுவர். இதற்கு சென்ற நூற்றாண்டில் நடைபெற்ற அமெரிக்க உள்நாட்டுப்போரை உதாரணமாகக்காட்டுவர். இப்போரில் 30 இலட்சம் அமெரிக்கர் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இது அன்றைய அமெரிக்க சனத்தொகையின் 10 சதவீதமாகும். கட்டாய ஆட்சேர்ப்புத் திட்டங்கள் காரணமாக 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இரண்டாம் உலகப்போர் வரை இது போன்ற அதி உயர் போர்ப்பங்கேற்பு வீதங்கள் ஐரோப்பாவில் சாத்தியமாயின. எனினும், தற்கால முதலாளித்துவ நவீன மயமாகும் சமூகங்களால் உயர் போர்ப் பங்கேற்பு வீதங்களை தரமுடியாது என்பதே உண்மை. உயர் போர்ப் பங்கேற்பு வீதங்களால் ஏற்படக் கூடிய பொருளாதார, சமூகப் பக்க விளைவுகளை இச்சமூகங்களால் சமாளிக்க முடியாது. எனினும் இன ஒடுக்குமுறைக்கும், காலனித்துவச் சுரண்டலுக்கும் உட்படுத்தப்பட்ட பல மூன்றாம் உலகச் சமூகங்கள் மத்தியில் அதியுயர் போர்ப் பங்கேற்பு வீதங்களை அண்மைக்காலத்தில் நாம் கண்டுள்ளோம். பொருளாதாரம், சமூகம், அரச இயந்திரங்கள் என்பன தொடர்போர் காரணமாக சீர்குலைந்து போன மக்கள் மத்தியில் உயர் போர்ப் பங்கேற்பு வீதங்கள் சாத்தியமாகும். ஏனெனில், இவ்வுயர் வீதங்களால் ஏற்படும் பக்கவிளைவுகளால் பாதிக்கப்படுவது சீராகவும் அமைதியாகவும் பொருளாதார உச்ச பயனை நோக்கியும் இயங்கிக்கொண்டிருக்கும் சமூகங்களேயாகும். இவ்வாறான மேற்கத்திய சமூகங்களில் கட்டாய ஆட்சேர்ப்பு நவீன காலத்தில் கைவிடப்பட்டதற்கு இதுவே காரணமாகும்.

இந்த வகையிலேயே நாம் சிங்களப் பகுதிகளில் நிலவும் ஆட்சேர்ப்பு வீதத்தை நோக்க வேண்டும். இது 1983அளவில் ஏறத்தாழ .12 சதவீதமாக இருந்து இன்று .82 வீதத்திற்கு உயர்ந்துள்ளது. படைகளுக்கு மேலும் ஆட்களைச் சேர்ப்பதற்கு அண்மைக் காலத்தில் அரசு கடும் முயற்சிகளை மேற் கொண்ட போதும் தென்பகுதி மக்கள் மத்தியிலான போர்ப்பங்கேற்பு வீதத்தினை 82 மேல் பெரிதாக உயர்த்த முடியாதுள்ளது. இப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட கட்டாய ஆட்சேர்ப்பு யோசனை தெற்கில் ஏற்படக்கூடிய அரசியற்பக்கவிளைவுகளை உத்தேசித்துக் கைவிடப்பட்டதை நாம் இங்கு மனதிற் கொள்ள வேண்டும்.

அதேவேளை வடகிழக்கில் இன்று அரசின் போர்க்கொடுமைகளால் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார, சீர்குலைவுகளுக்கு மத்தியில் போர்ப்பங்கேற்பு வீதம் 1.1 ஆகக் காணப்படுகிறது. குறிப்பாக 1983 இல் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் பின் வடகிழக்கு மக்கள் மத்தியிலான போர்ப்பங்கேற்பு வீதம் உச்ச நிலைக்குச் சென்றதையும் இங்கு நாம் கணக்கிற் கொள்ள வேண்டும். வடகிழக்குத் தமிழ் மக்கள் மத்தியிலான ஆட்சேர்ப்பு வீதம் தென்பகுதிகள் போலல்லாது பல்வேறு ஏற்ற இறக்கங்களைக் கண்டுள்ளது. இவை என்ன என்பதையும் இவை எதைச் சுட்டுகின்றன என்பதையும் அடுத்த இதழில் காண்போம்.

வளரும்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒலிபரப்பு அதிகார சபை மசோதாவை நீக்கு!

பொ.ஐ.மு அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறுவதற்கு முதல் அலங்காரமான மனதை அள்ளும் வகையில் வாக்குறுதிகளை அள்ளித் தந்தமை யாவரும் அறிந்ததே. ''உலகத்திலேயே முதன்மையான சுயாதீன பொதுசன ஊடகச் சேவையை இலங்கை மக்களுக்கு அளிப்பதே எமது நோக்கம்'' என பொ.ஐ.மு ஒரு வாக்குறுதியை தந்திருந்தது. எனினும் பொ.ஐ.மு அரசாங்கத்தின் ஆட்சி இரண்டரை ஆண்டை பூர்த்தியடையச் செய்யும் இச்சந்தர்ப்பத்தில் அவ்வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு சிற்சில சட்டங்களையும் அமுல்படுத்தியுள்ளது. அந்த வகையில் அது கொண்டு வரவுள்ள ஒலிபரப்பு அதிகார சபை மசோதா குறிப்பிடத்தக்கது.

இலத்திரனியல் பொதுசன ஊடகங்களை நிர்வகிக்கும் நோக்கத்துடன் இவ்வதிகாரச் சபை மசோதா பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இம் மசோதா தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சிடம் வினவியபொழுது அவர் ''நான் அதைப் படித்துக் கொண்டிருக்கிறேன்'' எனக் குறிப்பிட்டதாக தெரியவருகின்றது. பொ.ஐ.முவின் பொதுசன கொள்கைகளைப்பற்றி அமைச்சரே அறிந்து கொள்ளவில்லையென்பதை இது தெளிவுறுத்துகின்றது.


இவ் ஒலிபரப்பு அதிகார சபை மசோதா ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் தான் தயாரிக்கப்பட்டது என்பதே உண்மை. அதேபோல் பொ.ஐ.மு ஆட்சிக்காலத்தில் தான் அவ்வதிகாரசபை மசோதா நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதும் அதைவிட உண்மை.

இவ் அதிகார சபை முற்றிலும் அரச நிர்வாகத்திற்கு உட்பட்டதாக உள்ளது. 11 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையில் அமைச்சர்களின் செயலாளர்கள், பிரதிநிதிகள் என ஐவர் நியமிக்கப்பட ஆறாவது நபராக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன தலைவர் உள்ளார். இவ் அதிகார சபையில் உள்ள மிகுதி ஐவரும் அரசாங்க ஆதரவாளர்களாகும். இதில் இருவர் ஒலிபரப்பு துறையில் உள்ள அனுபவஸ்தர்களாக இருப்பர். இதன்படி அதிகார சபைக்கு சட்டபூர்வமாக நியமிக்கப்படும் எந்தவொரு சுதந்திரமான நபரும் இல்லை. அமைச்சரின் விருப்பத்தின் பிரகாரம் அரசாங்க ஆதரவாளர்களால் சபையை நிரப்ப முடியும். அத்துடன் தலைவர், பிரதிநிதிகள் என்போரை சபையை விட்டு நீக்கும் அதிகாரமும் அமைச்சருக்கு உண்டு.

இவ் அதிகார சபையின் குறிப்பிடத்தக்க விசேட கடமை, தொலைக்காட்சி மற்றும் வானொலி செயற்பாடுகள் உள்நாட்டுத் திரைப்படத் துறைக்கு தீங்கிழைக்காதவாறு இருக்க வேண்டும் என்பதுடன் அதற்கான நடவடிக்கைகளை எடுத்தாலுமாகும் எனக் கூறப்படுகிறது. வருடத்துக்கு ஒரு முறை தொலைக்காட்சி, வானொலி நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படல் வேண்டும். விரும்பிய நேரத்தில் இந் நிலையங்களுக்கு அதிகார சபையினால்மூடு விழாவும் நடத்த முடியும். மசோதாவின் 16வது பிரிவின் படி அதிகார சபையினால் சட்டப்படி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஊழியர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட முடியாது. இதன்படி அதிகார சபை வழக்குகளிலிருந்து விடுவிக்கப்படுகின்றது.

இதுநாள் வரை தமது அதிகாரங்களை முன்வைத்து அரசாங்கங்கள் தமது நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளன. எனினும் மக்கள் விழிப்புணர்வு பெற்றுவிட்டனர் என்றே கூற வேண்டும். திருட்டுத்தனமாக ஆரவாரமின்றி இவ் அதிகார சபையை சட்டமாக்க முனைந்த பொ.ஐ.மு. அரசாங்கம், ஐ.தே.க. தயாரித்த அதிகார சபையை தமக்கு உகந்த முறையில் மாற்றிக்கொள்ளவும் தவறிவிட்டது. அதாவது இம் மசோதாவின்படி கல்வி மற்றும் கலாசார அமைச்சின் செயலாளரும் இவ் அதிகார சபையில் இடம்பெற வேண்டும். ஆனால் அவ்வாறானதொரு அமைச்சு இந்நாட்டில் இல்லையென்பது வியத்தற்குரியது. மக்களின் பொதுசன ஊடகங்களை அரச ஆதிக்கத்திற்குட்படுத்தும் இவ்வாறான நடவடிக்கைகளை இனியும் மக்கள் பொறுப்பர் என்பதற்கு உத்தரவாதமில்லை. அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இவ் அதிகார சபை அரசியல் யாப்பின் பிரகாரம் அமைந்துள்ளதா என ஆராயும்படி கோரி 15 முறைப்பாடுகள இதுவரை உயர்நீதிமன்றத்தில் முறையிடப்பட்டுள்ளன.

பொதுசன ஊடகத் துறையைச் சார்ந்த - கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், அறிவிப்பாளர்கள் என்போர் இவ் அதிகார சபையை எதிர்த்து கோஷமெழுப்பி வருகின்றனர். இவை பல்வேறு மக்கள் குழுவினரின் விழிப்புணர்வையே வெளிக்காட்டுகின்றன.




இம் மசோதாவுக்கு எதிராக மே.5ம் திகதி கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள தொடர்புசாதனத் துறை அமைச்சுக்கு எதிரில் பத்திரிகையாளர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டத்தில் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

இதன் பிரகாரம் யுக்திய பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேஷப்பிரிய இது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோது,

''ஒலிபரப்பு அதிகார சபை இந்நாட்டு இலத்திரனியல் தொடர்பு சாதனத்துறைக்கு மட்டுமன்றி அனைத்து தொடர்புசாதனத் துறைக்கும், அதன் சுதந்திரத்திற்கும் கட்டுப்பாடு விதிக்கும் மோசமான நடவடிக்கையாகும். பொ.ஐ.மு தம்மால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளைப் பொய்யாக்கியது மட்டுமன்றி இலத்திரனியல் தொடர்பு சாதன துறையின் சுயாதீனத்தை



ஆர்பாட்டம் நடந்த அன்று அதற்கெதிரில் பாதையோரத்தில் அமர்ந்து பார்வையிடும் ஐ.தே.க. எம்.பி. ஜயலத் ஜயவர்தன (வட்டம் போட்டு காண்பிக்கப்பட்டுள்ளது) இந்த மசோதாவின் உருவாக்கம் முன்னைய ஐ.தே.க. ஆட்சியிலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்துக்கு வலியுறுத்திய ஆர். கே. டபிள்யு. குணசேகர, சிராணி பண்டாரநாயக்க, லூசன் ராஜ கருணாநாயக்க ஆகியோருக்கும் தொடர்புசாதனத்துறை சுதந்திரத்திற்காக முன்நிற்கும் அனைவருக்கும் எதிராகவும் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறையாகும். அகற்கு பதிலாக நாம் ஏதேனும் செய்ய வேண்டியுள்ளது.'' என்றார்.

டெல்ஷான் தொலைக்காட்சி சேவை (டி.என்.எல்)யின் தலைவரான ஷான் விக்கிரமசிங்க,

''இது எமக்கான தாக்குதல். எம்மால் எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிட முடியாதுள்ளது. அதிகார சபை சட்டம் இன்றியே எமக்கு பல்வேறுபட்ட சவால்களை சந்திக்கவேண்டியுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் அதிகார சபை சட்டமாக்கப்பட்டால் சவால்கள் எவ்வாறிருக்குமோ? ஜே.வி.பியின் பயங்கர காலகட்டம் போன்று சொல்வதை செய்துவிட்டு நடுங்கிக் கொண்டிருக்கவேண்டும். இந்தப் பயங்கரமான சட்டத்தை அமுலாக்க வாய்ப்பு வழங்கின் அடுத்து பத்திரிகைகளுக்கும் இவ்வாறானதொரு சட்டம் கொண்டு வரப்படலாம். அமைச்சரவையில் ஒருவரும் அறியாவண்ணம் மசோதா பாராளுமன்றத்திற்கு சென்றுள்ளது என்று கூறப்படுகின்றது. இவ்வாறு இரகசியமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணம் என்ன?'' என்று வினவினார்.

சுதந்திர ஊடக இயக்கம் இணைப்பாளர் வருண கருணாதிலக்கவின் கருத்துப்படி,

''நாம் முழுமையாக இம் மசோதாவை எதிர்க்கிறோம். நாம் சுயாதீனமான அதிகார சபை ஒன்றையே கோரி வருகிறோம். அதற்கான உதாரணங்களை உலகத்திலிருந்து நிறையவே பெற்றுக்கொள்ள முடியும். கனடா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இவ்வாறான அதிகார சபை வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. எந்தவித உய்வுத்தறிமின்றி இந்த அதிகார சபை கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கெதிராக நாம் உயர்நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளோம்'' என்றார்.

பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார இவ் அதிகார சபை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

''இலங்கை ஒலிபரப்பு அதிகார சபை தொடர்பாக எனக்கு குழப்பமே எஞ்சியுள்ளது. இது தொடர்பு சாதனத்துறை சுதந்திரத்துக்கு பலத்த அடியாகும். பொ.ஐ.மு. அரசாங்கம் வாக்குறுதி அளித்தபடி மக்கள் தொடர்பு சாதனத்துறைகளை சுதந்திரமயப்படுத்த வேண்டும். இது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பொ.ஐ.மு. அரசாங்கம் தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை எடுக்காது, மாறாக முட்டாள்தனமான நடவடிக்கைகளையே எடுத்துள்ளது. இது அரசின் அதிகார ஆதிக்கத்திற்கான சுவடு எனலாம். அமைச்சர் சிற்சில திருத்தங்களை கொண்டு வர விரும்பியுள்ளார். உண்மையில் திருத்தங்கள் தேவையில்லை. மாறாக சம்பந்தப்பட்ட துறையினரின் பல்வேறு கருத்துக்களை ஆராய்ந்து இது மீண்டும் தயாரிக்கப்பட வேண்டும். நீதிமன்றத் தீர்ப்புகளுடன் முறைப்பாடுகளுடன் தொடர்புபட்டு அரசாங்கம் செயற்பட வேண்டியிருப்பது அரசாங்கத்தின் நிலையை தாழ்த்துவது போன்றதாகும்'' என்றார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ காரியவசம் இவ்வாறு குறிப்பிட்டார்.

''இவ்வாறான முட்டாள்தனமான நடவடிக்கை 17ம் நூற்றாண்டுக்கே பொருத்தமானது. அடிப்படை விடயங்கள் எதனையும் யோசிக்காது எடுக்கப்பட்ட தவறான முடிவிது'' என்றார்.

பிரபல இலக்கியவாதியான சயிமன் நவகத்தேகம தனது கருத்தினை இவ்வாறு தெளிவுறுத்தியுள்ளார்.

''மக்கள் தொடர்புசாதனத்துறையை கட்டுப்படுத்த விரும்பும் அதிகாரி வேறு எந்தத் துறையையும் கட்டுப்படுத்த முடியாத இயலாமைக் கொண்டவர். ஆட்சியாளர்கள் முதலாளித்துவ வாதிகளாயின், பொதுசனத்துறைக்கு வேலியிட முயற்சிப்பது எதனைக்காட்டுகின்றது? அவ்வனைத்து வகுப்பும் நெருக்குதலுக்குள் சிக்கியிருப்பதனையல்லவா காட்டுகின்றது. எந்தச் சந்தர்ப்பத்திலும் மக்களின் சுயாதீனத்தன்மையை மாற்றக்கூடிய பெரியதொரு தடையாக தணிக்கை தலையின் மேல் காணப்படுகின்றது. இறுதியில் இந்த நிலைமையை ஏற்படுத்தியவர்களை மக்கள் வெறுத்தால் ஏற்படும் நிலை என்ன? இவர்கள் வரலாற்று முடிவுகளால் துன்பத்துக்குள்ளாகுவர். எனினும் அதற்குள் ஆட்சியாளர்கள் மக்களுக்குள்ளான அனைத்து தடைகளையும் ஏற்படுத்தியிருப்பர். எனவே பொதுசனத்துறைக்கு அவ்வாறான தடை ஏற்படும் என்று தெரிந்தவுடனேயே அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்'' என்றார்.

அதேபோல் பேராசிரியர் சுனில் விஜேசிரிவர்தன கருத்துத் தெரிவிக்கையில்,

''அரச சேவை நிறுவனங்கள் முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ள இவ்வாறான பின்னணியில் நாம் கவனமாக செயற்பட வேண்டியிருக்கும். கவலையான விடயம் யாதெனில், தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் சட்டங்களை விட பழையவை சிறந்தவை என்பதாகும். அவை மோசமடைய காரணம் அரசியல்வாதிகளே'' என குற்றம் சாட்டினார்.

எனவே பலரின் கருத்துப்படி இவ் அரசாங்கத்தின் ஒலிபரப்பு அதிகார சபையை ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது.

கடந்த காலகட்டங்களில் பொ.ஐ.மு. அரசாங்கம் சுதந்திரமான பொதுசனத்துறைக்கான வாய்ப்பை மக்களுக்கு அளிக்கவில்லை எனலாம். டெல்ஷான் தொலைக்காட்சி சேவைமீதான அதிரடி நடவடிக்கை, சிரச வானொலி நிலையத்தின் மீதான நடவடிக்கை, மதுபானம், புகைபிடிப்பு விளம்பரங்கள் தடை போன்ற அனைத்து சம்பவங்களும் பொ.ஐ.முவின் பொதுசனத்துறை கொள்கையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இது பொ.ஐ.முவின் இரண்டரை வருட ஆட்சி, ஐ.தே.கவின் ஆட்சியை விட எந்தவகையிலும் வேறுபட்டதல்ல என்பதை எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் பொ.ஐ.மு. அள்ளி வழங்கிய வாக்குறுதிகள் வெறுமனே ஆட்சியை கைப்பற்றுவதற்காக மட்டுமா என்ற கேள்வியும் எழுகின்றது.

-ரத்னா-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சப்புமல்புர: குடியேற்றத்துக்கு கட்டியம்?



ஏழாம் புவனேகபாகு!

முருங்கனுக்கும் பறையனாலங் குளத்துக்கும்பாதுகாப்புப்பிரதி அமைச்சர் அனுருத்தரத்வத்த மேற்கொண்டவிஜயமானது தமிழ் அரசியல்கட்சிகளிடையே ஒரு பரபரப்பையும்விழிப்பையும் ஏற்படுத்தக் காரணமாகிவிட்டது.

ஆமாம். பழங்கால படைத்தளபதி பாணியில் யாப்பாபட்டுன மீது படையெடுத்து அன்னிய எதிரிகளாகிய(?) புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை மீட்டுவந்து மகாராணியாகிய ஜனாதிபதியிடம்வெற்றி ஒலையைக் கையளித்த கதாநாயக வீரனுக்குப்பறையனாலங்குளத்தில் ஒரு பெயர்ப்பலகை வைத்து கட் அவுட் ஒன்றையும் நிறுத்தி படை வீரர்கள் வரவேற்பளித்திருந்தார்கள்.

''சப்புமல்புரம்'' - ''சப்புமல்புர'' என்ற அந்த பெயர்ப்பலகை பத்திரிகை யாளர்களின் கண்ணில் பட்டு விட்டது. அதனால்வந்ததே வினை!

தமிழர்களின் கிராமத்திற்கு எவ்வாறு சிங்களப் பெயரைச்சூட்ட முடியும்? இது ஆக்கிரமிப்பு நடவடிக்கையல்லவா? என்று தமிழ் அரசியல் கட்சிகள் சீற்றம் கொண்டன. கண்டன அறிக்கைகள் பீறிட்டுக்கிளம்பின.

தமிழ் மக்கள் மத்தியில் கடந்த வாரம் முழுவதும்சப்புமல்புரம் பற்றிய பேச்சே அடிபட்டது. இது சம்பந்தமாக நேர்முகமாகவே கண்டிப்பது போல லங்காதீப பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தி, படை வீரர்கள் சிலருக்கு சினத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதேவேளையில் சிங்கள மக்கள் சிலர் மத்தியில் இந்த செய்தியானது தமிழ் மக்களின் சார்பில் அனுதாப அலையை ஏற்படுத்தி அரசியல்வாதிகளின்சுயலாப போக்குகளைப் பற்றி வெளிப்படையாகவே பேசச்செய்திருந்தது.

இது குறித்து தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஏகோபித்த குரலில் கண்டனம் தெரிவித்துள்ளன. அதேவேளை நவசமசமாஜக் கட்சியும் இது குறித்து பலத்த கண்டனத்தைத்தெரிவித்துள்ளது.

சிங்கள அதிகார வர்க்கத்தினர் இதுவரை நடத்தி வந்துள்ள ஆக்கிரமிப்புப் போரில் ஆக்கிரமிக்கப்படுகின்ற பிரதேசங்களிலெல்லாம் தமிழ்ப்பெயர்களை மாற்றி சிங்களப்பெயர்களை வைப்பது ஒன்றும் புதிய விடயங்கள் அல்ல. இவ்வாறான ஆக்கரமிப்பானது கட்டாயம் போரின் மூலம்தான் என்றில்லை. திட்டமிட்ட குடியேற்றங்கள், எல்லை மாற்றங்கள், வேறும்சில அபிவிருத்தித்திட்டங்கள்என்ற போர்வையில் நடத்தப்பட்ட ஆக்கிரமிப்புக்களின்போதும்இவ்வாறான பெயர் மாற்றம் செய்யப்பட்ட பல சம்பவங்கள் உண்டு.

ஆனால் இம்முறை இந்த அரசு ''தமிழ் மக்களைபுலிப்பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கும்யுத்தம்'' எனக்கூறிக்கொண்டுதமிழ் மக்களுக்கு எதிராக இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வது தான் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பொதுநிர்வாக உள்ளூராட்சி சபையின்அதிகாரிகள்கருத்து தெரிவிக்கும் போது ''இந்நடவடிக்கை அதிகாரபூர்வமானதே அல்ல என்றும் அரசாங்கத்தை இதில் சம்பந்தப்படுத்த வேண்டாம்'' என்றும்கூறியுள்ளனர்.

ஆனால் வேடிக்கை என்னவெனில் தொலைக்காட்சிநிறுவனமான ரூபவாஹினியின் மும்மொழிச் செய்தியிலும் ''பறையனாலங்குளம்'', ''சப்புமல்புர'' வென பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### சப்புமல்புர

அரசியல்வாதிகள், பொதுமக்கள், இராணுவத்தினர், பத்திரிகையாளர்கள் என பலதரப்பிலும் பரபரப்பை ஏற்படுத்தி விட்ட சப்புமல்புர ஏன் வந்தது என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகின்றது.

இலங்கையில் சரித்திரக்காலத்தில் பல்வேறு இராச்சியங்கள் இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். இந்த இராச்சியங்களில் யாழ்ப்பாண இராச்சியம்முக்கியமானது.

யாழ்ப்பாண இராச்சியமானது 13ஆம் நூற்றாண்டின் பிற்பாதியளவில் ஆரம்பமாகியதாகக் கருதப்படுகின்றது. இந்த இராச்சியம் 14ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் என்றழைக்கப்பட்ட ஓர் அரச பரம்பரையினரால்ஆளப்பட்டு வந்தது.

அப்போது வணிகத்திலும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்கிய கோட்டே இராச்சியத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த ஆறாம் பராக்கிரமபாகு என்ற மன்னன்சப்புமல் குமார என்ற படைத்தளபதியின் தலைமையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது படையெடுத்து அதனைக்கைப்பற்றினான்.

இது நடைபெற்றது முதல், யாழ்ப்பாண இராச்சியம் அழிந்து, கோட்டே இராச்சியத்தின் கீழ் யாழ்ப்பாணம் 1477ஆம் ஆண்டு வரை இருந்ததாக வரலாற்றுத்தகவல் ஒன்று கூறுகின்றது.

1467ஆம்ஆண்டு ஆறாம்பராக்கிரமபாகு மன்னன் உயிரிழந்ததையடுத்து சப்புமல் குமார என்ற படைத்தளபதி ஆறாம் புவனேகபாகு என்ற பெயருடன்கோட்டே இராச்சியத்தை ஆண்டுள்ளான்.

இவனது காலம்(1469 - 1477வரை)1477ம் ஆண்டு முடிவுற்றதும் யாழ்ப்பாணம் மீண்டும்ஒருசுதந்திர இராச்சியமாகத்தமிழ் மன்னர்களால்ஆளப்பட்டு வந்தது.

இந்த சரித்திரப் பின்னணியை இப்போதைய அரசியல்- நாட்டுநிலைமைகளுடன் உருவகப் படுத்தி உவகை காண்கின்ற அரசியல்இராணுவ பிரகிருதிகளின்மூளையில்உதித்த ஐடியாவே சப்புமல்புரம்பெயர் மாற்றமாகும்.

### பறையனாலங்குளம்

இனி பறையனாலங்குளத்தைப்பற்றிப் பார்க்கலாம்.

வவுனியாவிலிருந்து மேற்குப் பக்கமாக மன்னாரை நோக்கிச் செல்கின்ற நெடுஞ்சாலையும், மதவாச்சியிலிருந்து மன்னார் செல்கின்ற வீதியும் சந்திக்கும் இடமே பறையனாலங்குளம்சந்தியாகும். இது வவுனியாவிலிருந்து 22மைல் தூரத்தில் உள்ளது. இங்கு அமைந்திருந்த வாடி வீடு நாடளாவிய அளவில்பிரசித்தி பெற்றிருந்தது.

இந்த சந்தியை மக்கள் ஆலங்குளம் சந்தியென்றே அழைக்கின்றார்கள்.

சுமார் 50 விவசாய குடும்பங்களைக் கொண்டிருந்த இக்கிராமம், ஒரு பூர்வீகத் தமிழ்க்கிராமமாகும். இந்த சந்திவழியாக எண்ணற்ற சிங்கள யாத்திரிகர்களும், வெளிநாட்டுப்பயணிகளும், (இந்தியாவிலிருந்து தலைமன்னார் துறைக்கு கப்பல் மூலமாக வந்தவர்கள்) பொதுமக்களும் பிரயாணம் செய்திருந்த போதிலும், இந்த வாடி வீட்டுக்குப் பொறுப்பாக ஒரே ஒரு தடவை அதுவும் குறுகிய காலத்திற்குப் பெரும்பான்மை இனத்தைச்சார்ந்த ஒருவர் இருந்துள்ளார்.

அவரும்அங்கு தொடர்ந்து இருக்கமுடியாத பண்பற்ற சுயநல நடவடிக்கைகளினால் அகற்றப்பட்டார்.

இந்த சந்திக்கு அருகில் இப்போது ''சப்புமல்புரம்'' பெயர்ப்பலகை வைக்கப்பட்டுள்ள பகுதியில் பறையனாலங்குளம் அரசினர்தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரில்ஆரம்பப்பாடசாலை ஒன்று 1989 ஆம்ஆண்டுவரை இயங்கி வந்தது.

வவுனியா - மன்னார் வீதியில் பறையனாலங்குளம்சந்தியில் இருந்து சுமார் 2 மைல் தூரத்தில் உள்ள, கணேசபுரம் கிராமப்பிள்ளைகளும், பறையனாலங்குளம் பிள்ளைகளுமாக சுமார் 60 மாணவர்கள் இங்கு கல்வி கற்று வந்தனர்.

1987 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினர் வந்த காலத்தின் பின் படை வீரர்களது நட மாட்டம், பயிற்சி, செயற்பாடுகள் என்பன இப்பகுதியில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டதையடுத்து இப் பகுதியில்சமூக நிலைமை குலைந்தது.

கிராம மக்களும் குடிபெயர்ந்தார்கள். பாடசாலைக் கட்டிடமும், வாடிவீட்டுக் கட்டிடமும்படைவீரர்களின் பயன்பாட்டிலிருந்து படிப்படியாக அழிந்து மறைந்து போயின.

அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே விரிந்து கிடந்த இந்த சூனியப் பகுதி அண்மையில் நடைபெற்ற எடிபல இராணுவ நடவடிக்கையின் மூலம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது.

படைவீரர்களைப் பொருத்தமட்டில் கேந்திர முக்கியத்துவம் மிக்கதாக இச்சந்தி கருதப்படுவதனாலேயே இங்கு ஒரு பொலிஸ்காவல் நிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதிவழியாக பிரயாணம்செய்பவர்களைச் சோதனையிடுகின்ற ஒரு வீதிச் சோதனை நிலையமாக இது செயற்படுவதற்காகத்தயார்படுத்தப்படுவதாக விஷயமறிந்தவர்கள்கூறுகின்றார்கள்.

எடிபல இராணுவ நடவடிக்கையின்மூலம் கைப்பற்றப்பட்டுள்ள மன்னார் வீதிப் பிரதேசப் பகுதியில் உள்ள மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து சென்றுவிட்டார்கள்.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத மடுக்கோவில் பகுதியில் இவர்கள் தஞ்சமடைந்துள்ளார்கள்.

சின்னாபின்னமாகி பாழடைந்த பிரதேசமாகத் தோற்றம் தருகின்ற உயிலங்குளம், முருங்கன் ஆகிய பகுதிகள் உட்பட எங்குமே இடம் பெயர்ந்த மக்களைக் கொண்டு வந்து மீளக்குடியமர்த்தும் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில் முருங்கனில் பல லட்ச ரூபா செலவில்அஞ்சல்தொலைத்தொடர்பு நிலையம் கட்டி வைத்திருந்த அஞ்சல் நிலையக்கட்டிடம்பொலிஸ்நிலையமாகப் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

ஆலங்குளம் சந்தியின் வலது புறத்தில் புதிதாக பொலிஸ் காரியாலயம் கட்டப்பட்டு கோலாகலமாகத் திறப்பு விழா நடைபெற்றது.

சட்டமும்ஒழுங்கையும் பராமரித்து சிவில் நிர்வாகச்செயற்பாடுகளுக்கு உறுதுணை புரிவதே பொலிசாரின்கடமையாகும்.

இந்த பொலிசாருக்காக அமைக்கப்பட்ட இந்த பொலிஸ்நிலையத்திறப்புவிழாவில் மருந்துக்குக்கூட பொது மக்கள்எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படவில்லை.

இந்தப் பின்னணியில் தான் பறையனாலங்குளம் பொலிஸ் காவல் நிலைக்கு எதிராக வீதியின் மறுபக்கத்தில் சப்புமல் புரம் பெயர்ப்பலகை நிற்கின்றது.


பொதுமக்களைப் போல் சட்டைப் பாவாடையிலும், சாரியுடனும், சரம், சேட், காற்சட்டை சேட்டுடனும், திறப்புவிழாவில் காணப்பட்ட ஊர்க்காவல் படையினர், பெண் பொலிசார், பொலிசார் போன்ற ''பொதுமக்களின்'' குடும்பங்களை குடியேறத்தான்சப்புமல்புரம் பெயர்ப்பலகை கட்டியம் கூறுகின்றதோ?

**தம்பு திருநாவுக்கரசு.**

## ஆக்கிரமிப்பு நடவடிக்கையே தான்!

**சப்புமல்புர என்று பெயர் மாற்றப்பட்டது தொடர்பாக வன்னி மாவட்ட பா.உ.சண்முகநாதன் (புளொட்) அவர்களுடனான உரையாடலின் ஒரு பகுதி:**

***ஒப்பிரேசன் றிவிரச மூலமாக யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றிய பின் அதனை 'யாப்பாபட்டுன' என அழைத்ததையும், ஒப்பிரேசன் எடிபல மூலமாகக் கைப்பற்றப் பட்ட பறையனாலங்குளம் பகுதியை 'சப்புமல்புர' எனப் பெயர் மாற்றம் செய்ததையும் நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்?***



அரசாங்கம் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத்தீர்க்க வேண்டும்என ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்துச் செயல்படும்இந்த வேளையில் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களுக்குச் சிங்களப் பெயர் சூட்டுவது ஒரு பொருத்தமற்ற விடயம். என்பது மட்டுமன்றி இவ்வாறான நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவையுமாகும். இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு சிங்களப்பெயர் இடுவதைப் பார்க்கும் போது முற்றுமுழுதாகவே இது ஒரு இனவாத இராணுவமேதான் எனக் கருத வேண்டியுள்ளது. இவ்வாறான ஒரு இனவாத இராணுவத்தைக் கொண்டு தமிழ் மக்களுடைய பிரச்சினையை இராணுவ ரீதியாகக் கையாள அரசு முனைகின்ற போது அது தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் பெரிய பாதிப்புக்களையும் பயங்கரமான விளைவுகளையும் கொடுக்கப்போகிறது.

***இதனை தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக நீங்கள் கருதுகிறீர்களா?***

நிச்சயமாக நான் அப்படித்தான் கருதுகிறேன்.

***ஏன்?***

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை ஒருபுறமிருக்க அன்றாடப் பிரச்சினைகள் பல இன்று தலை தூக்கியிருக்கிறன. தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும்பிரச்சினைகளைக் கணக்கில் கொண்டு பார்க்கும்போது கடந்த கால ஐ.தே.க. அரசை விட இந்த அரசு தமிழ் மக்கள் மீது, பழிவாங்கல்களிலும் அச்சுறுத்தல்களிலும் ஈடுபட்டு வருகிறது. அவ்வாறான செயல்களில் ஒன்றே இந்தப்பெயர் மாற்றும் செயல் என்று கருத வேண்டியுள்ளது.

***கடந்த அரசாங்கத்தின் கால கட்டத்தில் வன்னியில் இவ்வாறான செயல்கள் இடம் பெற்றிருந்தனவா?***

கடந்த கால அரசாங்கத்தைப் பொறுத்தளவில் அது தமிழ் மக்களுடைய எல்லைப்புறக் கிராமங்களை கைப்பற்றி அதற்குப் பெயர் மாற்றம் செய்து சிங்கள மக்களைக் குடியேற்றம் செய்திருக்கிறது. அதற்கு மணலாற்றில் இருந்து நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த அரசாங்கமோ தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற, தமிழ் மக்களுடைய பிரதேசத்தின் மத்திய பகுதியிலுள்ள கிராமங்களுக்கே சிங்களப் பெயர் சூட்ட முயல்வது கடந்த அரசாங்கத்தின் செயலை விட ஒரு படி மேலான கேவலமான செயலாகும்.

***இந்தப் பெயர் மாற்றம் குறித்து தாங்கள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாகத் தெரி கிறது. இது தொடர்பாக அவரிடமிருந்து என்ன பதில் கிடைத்துள்ளது?***

இது வரை ஒரு பதிலும் கிடைக்கவில்லை. நாம் மீளவும் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை அது ஒருவாரமோ, அல்லது பத்து நாட்களோ காலக்கெடுவைக்கொடுத்து சிங்களப் பெயரை மாற்றும்படி கோரப் போகிறோம். அப்படி மாற்றப்படா விட்டால் வன்னியிலுள்ள அனைத்து மக்களையும்திரட்டி நாம் ஒரு அரசியல் போராட்டத்தை நடாத்தப் பின்நிற்கப் போவதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழ் தொடர்ச்சி..

## தேசிய வாதம்: தொடரும் விவாதம்-

# வளர்த்துச் செல்லப்பட வேண்டிய ஒரு கோட்பாடு

வீ.கே.எஸ். பாரதி

இத்தேசியவாதக்கோட்பாட்டின் ஒரு குறிப்பிட்ட போக்கு அல்லது தன்மை தான் இனத் தேசியவாதம். ஒரு மக்கள் குழுமத்தை இன்னொரு மக்கள் குழுமம், இன அடிப்படையில் பிரித்து மேற்கொள்ளப்படும் ஒடுக்கு முறையின் போது ஒடுக்கப்பட்ட மக்கள் முன்வைக்கும் கோட்பாடே இனத்தேசியவாதமாகும். இங்கு ஒடுக்கு முறைக்குள்ளாகும் மக்கள் குழுமம் தாம் ஒரு பொதுவான மக்கள் குழுமம் என்றடிப்படையில் ஒன்றுபட்டு தமது தேசியத்தைக் கற்பிதம் செய்து கொள்ளும். இதேவேளை ஒரே இனத்தைச் சேர்ந்த ஆனால், வெவ்வேறு கலாசார, மொழி, அல்லது மதம் சார்ந்த இரு மக்கள் குழுமங்களில் அதிகாரத்திலிருக்கும் மக்கள் குழுமம் மற்றைய மக்கள் குழுமத்தை ஒடுக்குமுறைக்குள்ளாக்கலாம். இது போன்ற ஒடுக்கு முறையின் தன்மைகள் வேறுபடும் போது கற்பிதம் செய்யப்படும் தேசியமும் வேறுபடும். ஆகவே இனத்தேசியவாதக் கோட்பாட்டை மட்டும் கொண்டதல்ல, தேசிய வாதக் கோட்பாடு. மாறாக, தேசிய வாதக் கோட்பாட்டுக்குள்ளிருக்கும் பல கூறுகளுள் ஒரு போக்குத் தான் இனத்தேசியவாதம்.

நுஃமான் அவர்கள் குறிப்பிடுவதைப் போல பொருளாதார வளங்களை பங்கு போடுவதில் ஏற்பட்ட போட்டியின் விளைவு என்பதை விட, தேசியவாதம் பிறப்பதற்கு வேறு பல காரணங்கள் உள்ளன என்பது தெளிவானது என நினைக்கின்றேன். இவர் கூறுவது போல ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுமம் தான் வாழும் நாட்டின் வளங்களை அதே நாட்டில் வாழும் வேறு மக்கள் குழுமங்கள் அனுபவிப்பதற்குத் தடை விதித்து அபகரிக்குமாயின் அதற்கு எதிராகப் போராடுவதும் நியாயமானது தான். இந்தப் போராட்டமானது போட்டி மனப்பான்மையென்பதைவிட சமத்துவமான உரிமைகளுக்கான போராட்டமாகும். இப்போராட்டத்தை முன்னெடுப்பதே இனத் தேசிய வாதக் கோட்பாடாகும். ஆனால் இனத் தேசியவாதத்தை இனவாதத்துடன் தொடர்பு படுத்தி பின்வருமாறு இவர் கூறுவது ஏற்கப்பட முடியாததே.

''இனவாதம் இல்லாமல் இனத் தேசியவாதம் இல்லை''. ''இனவாதம் என்பது குறிப்பிட்ட இனக் குழுவின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு கருத்து நிலை. மற்றைய இனங்களின் நலன்களுக்கு எதிரானதாகவே இது அமைகின்றது'' என நுஃமான் அவர்கள் கூறுகின்றார். ஆகவே மேலே இனத் தேசியவாதம், என்றால், என்ன என வரையறுத்தது போல மீண்டும் இனவாதம் என்றால் என்ன என அறிவதன் மூலமே இரண்டுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றிப் புரிந்து கொள்ளப்பட முடியும்.

ஒரு மக்கள் குழுமம் தம்மை இனரீதியாக வேறுபடுத்தி தமது இனத்திற்கான சகல உரிமைகளையும் அனுபவித்துக் கொண்டும், தம்மை உயர்ந்தவர்களாகவும், நீண்டகால வரலாறு உடையவர்களாகவும் கருதிக்கொண்டு தமது அதிகாரங்களைப் பயன்படுத்தித் தம்மிடமிருந்து வேறுபடும் மக்கள் குழுமங்களது உரிமைகளை மறுத்தும் அவர்களது பிரதேசங்களை ஆக்கிரமிப்பதுமே, இனவாதமாகும். இது போன்று மத, மொழி, கலாசார அடிப்படைகளிலும் பிற மக்கள் குழுமங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒடுக்கு முறைகளுமாகும்.

மனித உரிமைகளுக்காகப் போராடுவது எப்படி மற்றைய மனிதர்களின் உரிமைகளுக்கு எதிரானது இல்லையோ அதேபோல, பல மனிதர் உள்ளடங்கிய மக்கள் குழுமமும், தமது மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக, தம் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவது என்பது பிற மக்கள் குழுமங்களுக்கு எதிரானதல்ல. இன அடிப்படையில் போராடப்படும் இப்போராட்டமே இனத்தேசிய வாதம்.

மனித உரிமை மீறல்களைப் போலவே ஒரு மக்கள் குழுமம் பிற மக்கள் குழுமத்தினது உரிமைகளை மறுப்பதும், ஒடுக்குவதும் இனவாதமாகும்.

இனத் தேசியவாதமானது தன் மீதான ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடும் ஒரு கோட்பாடு. இது எவ்வகையிலும் பிற மக்களது நலன்களுக்கு எதிரானதல்ல.

இனவாதம் என்பது பிற மக்களை ஒடுக்குவது. இதுவே பிற மக்களின் நலன்களுக்கு எதிரானது.

இனவாத நிலைப்பாட்டுக்கு எதிரானதே இனத்தேசியவாதமாகும். அதாவது இவ் இரண்டு கோட்பாடுகளும் எதிர் எதிரான தளங்களிலிருந்து செயற்படுபவை.

மேலும் நுஃமான் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

''இனமுரண்பாடு முதிர்நிலையடையும்போது தான் இனவாதம், இனத்தேசியவாதமாக வளர்ச்சியடைகின்றது'' இனவாதம், இனத் தேசியவாதமாக வளர்ச்சியடைய முடியாது. ஆனால் இனத்தேசிய வாதம் இனவாதமாக மாற இடமுண்டு. ஒடுக்குபவர்கள் வெளிப்படுத்துவது இனவாதமாக இருக்க ஒடுக்கப்படுபவர்கள் வெளிப்படுத்துவது இனத்தேசியவாதமாக அமைகின்றது.

ஒடுக்குபவர்களதும், ஒடுக்கப்படுபவர்களதும் கருத்து, சிந்தனை, என்பவற்றை புரிந்து கொள்ளாத வரை இவையும் இனத்தேசியவாதம். அவற்றுக்கிடையிலான தொடர்பு, அவை குரலெழுப்பும் தங்கள் நலன்கள் என்பவற்றைப் புரிந்து கொள்வது என்பது கடினமானதே.

மேலும் அவர் கூறுகின்றார். ''இனவாதம் அரசியல் ஆதிக்கத்திற்கான கருத்தியலாக வளர்ச்சியடையும் போது, இனத்தேசியவாதமாக முதிர்ச்சியடைகின்றது.''

இக்கூற்றும் ஏற்க முடியாத ஒன்று. ஏனெனில், அரசியல் ஆதிக்கத்திலிருப்பவர்களின் பிற்போக்கான அரசியல் வெளிப்பாடுதான் இன வாதம்.

இனத்தேசியவாதம், தன்மீது பிறர் அரசியல் மேலாதிக்கம் செலுத்துவதற்கு அதாவது இனவாதத்திற்கு எதிராக தானே தன்னை ஆளும் அதிகாரத்தைப் பெறுவதற்கான கோட்பாடாகும்.

ஒடுக்கு முறைகளுக்கு எதிரான எந்தக் கோட்பாடும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத் தான் என்றால் மிகையல்ல. ஆனால், அவ்வதிகாரத்தை யார்யாரின் நலன்களுக்காக கைப்பற்ற வேண்டும் என்பதில் முன்னேறிய தேசியவாதக் கோட்பாடானது தெளிவாக உள்ளது.

இனவாதத்தை முறியடிப்பது என்பது தமிழ் முஸ்லிம் மலையக சைவ, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்கள் மீதான சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை முறியடிப்பதும், முஸ்லிம், மலையக மக்கள் மீதான யாழ் சைவ, உயர் வேளாள ஆதிக்கத்தை முறியடிப்பதும் என்பதுமே பொருத்தமானதாக இருக்க முடியும்.

இறுதியாகக் கட்டுரையைப் பின்வருமாறு முடிக்கின்றார். ''இலங்கையில் சமகால அரசியல் வரலாற்றில் முதல் முறையாக சிங்கள மக்கள் சிங்கள பேரினவாதத்தை அரசியல் ரீதியாக ஓரங்கட்டியுள்ளனர்.''

இக்கருத்தை ஏற்றுக்கொள்ளும் இவர் இப்படியான ஒரு கட்டுரையை எழுதியது ஆச்சிரியமானதல்ல. இவரது இக் கட்டுரை யாருடைய நலன்களுக்கு உதவுகின்றது என்பதைத்துல்லியமாக யாரும் புரிந்து கொள்வர்.

மேலும் சிசைரோ, கொன்சன்ரைன் இ. நித்தியானந்தன் ஆகியோரது கருத்துக்களுடன் பெரியளவிலான முரண்பாடுகள் இல்லையென்ற போதும் சில, கருத்துக்களை முன்வைக்கவும் என நம்புகின்றேன்.

சரிநிகர் இதழ் 65இல் இ. நித்தியானந்தன் அவர்கள் தமிழ் தேசிய போராட்டமானது உரிமையைப் பெற்றுக் கொள்ளும் போராட்டம் எனக்கூறியுள்ளார். இன்றைய தமிழ் தேசியத்தின் நிலை வெறும் உரிமைகளை மட்டும் பெற்றுக் கொள்ளும் போராட்டம் அல்ல. ஏனெனில், ஆரம்ப காலங்களில் வெறும் உரிமைகளை மட்டும் பெற்றுக் கொண்டால் போதும் என்றிருந்து, தமிழ்தேசியப்போராட்டம் தனக்கே உரிய வளர்ச்சிப் போக்கில் சமஷ்டிக் கோரிக்கையாகவும், சுயநிர்ணய உரிமை, தனிநாடு, தமிழ் ஈழம், தமிழ் தேசம் எனப் பரிணாமமடைந்து வந்துள்ளது. இன்னும் உரிமைகளை மட்டும் பெறுக் கொள்ளும் போராட்டம் எனக் கருதுவதானது இன்றைய போராட்டத்தின் தன்மையை மட்டும் குறைத்து மதிப்பிட வில்லை. மக்கள் செய்த தியாகங்களையும் குறைத்துக் கணித்துவிடும்.

சிசைரோ தனது கட்டுரையில் தேசியவாதம், மேட்டுக்குடியினரின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களது தலைமையில் நடைபெறுவது என்ற கருத்துப்பட கூறியுள்ளார். ஆரம்பகால தேசியம் மேட்டுக்குடியினரின் தலைமையில் அவர்களது நலன்களுக்காகவும் இடைக்கால தேசியம் பரந்துபட்ட மக்களின் நலன்களுக்காக, மேட்டுக்குடியினரைத் தலைமை தாங்கியும் நடைபெற்றன. ஆனால் இன்றைய தேசியம் இக்கட்டுரையில் முதலே குறிப்பிட்டபடி ஒடுக்கு முறைக்குள்ளான கீழ்நிலை மக்களின் நலன்களைப் பிரதிபலிப்பதுடன் அவர்களது தலைமையையும் வேண்டி நிற்கின்றது. அல்லது இதற்காக முயற்சிக்கின்றது.

இந்த வகையில் இன்றைய தேசியக் கோட்பாடானது கடந்தகால தேசியங்களிலிருந்து வேறுபட்டது மட்டுமல்ல மிகவும் முற்போக்கானதாகவும் புரட்சிகரமானதாகவும் இருக்கின்றது.

சிசைரோவும், கொன்சன்ரைனும் முஸ்லிம்களின் தேசியம் தொடர்பாக தமிழ் தேசியத்தின் முடிவு என்ன என தமது கேள்வியை கேட்டு தமது கட்டுரைகளை முடித்துள்ளனர். இதற்கான தீர்வு நிச்சயமாக ஒன்றே ஒன்றுதான். முஸ்லிம் மக்கள் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் மட்டும் ஒடுக்கு முறையை எதிர்கொள்பவர்கள் அல்ல. அத்துடன் யாழ் சைவ உயர் வேளாள ஆதிக்கத்தின் ஒடுக்கு முறைக்கு முகம் கொடுப்பவர்கள் என்றால் மிகையல்ல. அவர்கள் மீதான ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெற அவர்கள் தமக்கு நியாயமான தீர்வு என எதை முன் வைக்கின்றனரோ அது எவ்வகையான தீர்வாக இருந்தாலும் ஏற்பது தான் தமிழ் தேசியத்திற்கு பெருமையையும் உயர்வையும் தரும் எனக் கூற விரும்புகிறேன்.

மேலும் ஒரு கருத்தை முன்வைத்து இக்கட்டுரையை முடிக்க விரும்புகின்றேன். ஒரு நண்பர் ''பெண்ணிலைவாத நிலைப்பாட்டிலிருந்து நோக்கும்பொழுது தேசியக் கோட்பாடானது ஆண்களால் முன்வைக்கப்பட்டதுடன், ஆணாதிக்க சித்தாந்தத்திற்கு உட்படுவதால் நிராகரிக்கப்படவேண்டியது''. எனக் கூறினார்.

இதற்கு நான் கூறுவது இதுதான்: ஹெகலின் தத்துவத்திலிருந்து கருத்து முதல்வாதத்தை நீக்கி இயங்கியலையும், பயஸ்பார்க்கின் தத்துவத்திலிருந்து பொருள் முதல் வாதத்தையும் இணைத்து எப்படி கார்ல்மார்க்ஸ் (ஆண்) மார்க்சிய தத்துவத்தை உருவாக்கினாரோ அதேபோலவும் மற்றும் மார்க்சிய சித்தாந்தத்தில் வெள்ளைநிற மேலாதிக்கமும், ஆணாதிக்கமும் இருந்த போதும் அதை முற்றாகப் புறக்கணிக்காமல் எப்படி பிற்போக்கான அம்சங்களைக் களைந்து மேலும் வளர்த்துச் செல்ல முயற்சிக்கின்றரோ அதேபோலவும் தேசிய வாதக் கோட்பாட்டினுள்ளும் பல பிற்போக்கான அம்சங்கள் இருப்பது தவிர்க்க முடியாதது. இதற்காக தேசியவாதக் கோட்பாட்டைப் புறக்கணிப்பதல்ல. மாறாக மேலும் பிற்போக்கான அம்சங்களை களைந்து முன்னேறிய கோட்பாட்டாக வளர்த்துக் கொள்வதே இன்றைய அறிஞர்கள் புத்திஜீவிகள் புரட்சிகர சிந்தனையாளர்களது தார்மீகக்கடமை என்றால் தவறல்ல.



## பிடியுங்கள் பார்ப்போம்!

லலித் அத்துலத் முதலி படுகொலை தொடர்பான விசாரணைகட்காக நியமிக்கப்பட்ட விஷேட ஜனாதிபதி ஆணைக்குழு அதன் முடிவுகளை தயார் செய்து கொண்டிருக்கும் வேளையில் திடீரென வந்து குதித்திருக்கிறார் முன்னாள் அமைச்சர் சிறிசேன குரே.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்கு ஒழிந்து ஓடிவிட்டார் என்றும், லலித்தின் கொலையில் அவருக்கு நிச்சயமான சம்பந்தம் இருக்கிறது என்பதால் தான் அவர் நாட்டைவிட்டு ஓடினார் என்றும் அவர்நாட்டைவிட்டு வெளியேறிய போது பரவலாக பேசப்பட்டது. அவர் வெளியேறிய விவகாரம் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாகவும் வந்தது. அரசியல்வாதிகள் மத்தியில் பரபரப்பாக இவ்விடயம் அடிபட்டது.

அவரைக் கைது செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு பிடிவிறாந்தும் பிறப்பித்திருந்தது.

ஆனால், இப்போது அவர் வந்து ஒரு வாரத்திற்கு மேலாகியும் அவர் இன்னமும் கைது செய்யப்படவோ விசாரிக்கப்படவோ இல்லை. அது மட்டுமல்லாமல், அவர் அச்சமின்றி ஆணைக்குழு இவ்வாறு பிடிவிறாந்து பிறப்பித்ததாக கூறுவதை கேலியும் செய்திருக்கின்றார். ஏற்கெனவே, தானாகவே முன்வந்து ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கத் தான் தயார் என்று அவர் கடிதமூலம் அறிவித்திருந்தபோதும், அப்படி ஒரு கடிதம் கிடைத்ததென்று தெரிவிப்பதற்குக் கூட தன்னுடன் ஆணைக்குழு தொடர்பு கொள்ள வில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார். அப்படியிருக்க தான் விசாரணைக்குப் பயந்து ஓடியதாக குறிப்பிடுவதில் அர்த்தமில்லை என்று கூறுகிறார் அவர்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, அவர் வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்பாக, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவை சந்தித்து விட்டே சென்றும் உள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறுதான், முன்பொருமுறை பிரேமதாச காலத்தில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல அவர்களும் நாட்டை விட்டு ஓடிவிட்டு விமான மூலம் எந்த அபத்துமின்றி வந்து சேர்ந்தார். வந்தது மட்டுமல்லாமல் அப்போதைய ஜனாதிபதி விஜேதுங்கவின் ஆதரவுடன் உயர் பதவியொன்றையும் கூடப்பெற்றுக்கொண்டார்.

சட்டமும் நீதியும் யார் யாருக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்ற எழுதப்படாத சட்டம் ஒன்று எல்லாக் காலங்களிலும் நடைமுறையில் இருக்கிறதுதான் போலும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ம**னித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக் கழக ஆசிரியர்களினால் 'திருகோணமலை: அரச கருத்தியலும் அச்சத்தின் அரசியலும்' என்ற தலைப்பிலான விஷேட அறிக்கை (இல.8) ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை திருமலை குறித்த சில அண்மைக்கால சம்பவங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டித் தருகின்றது. சரிநிகரில் வெளிவந்த லிங்கநகர் தொடர்பான பல செய்திக் கட்டுரைகள் வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இவ்வறிக்கையில் லிங்கநகர் விவகாரம் தொடர்பான சில தகவல்கள் வெளியிடப் பட்டிருப்பதால், அதனை வாசகர்களுக்குத் தருகிறோம். இதன் ஒரு பகுதி சென்ற இதழில் வெளியாகியது. அதன் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகிறது.

# லிங்க நகர்:


## அபகரிக்கப்படுகிற பூமி



சென்ற இதழ் தொடர்ச்சி

**க**மிலஸ் பெர்னாண்டோ என்பவர் அரசாங்க அதிபராக இருந்த காலத்தில்பீரிஸ் திரும்பவும் தமது பதவியைப் பெற்றுக் கொண்டார். இது ஒரு குழப்பமான காலகட்டம் ஆகும். இவரது இடை நிறுத்தம் தொடர்பாக என்ன விசாரணை நடத்தப்பட்டது என்பது தெரியவில்லை. அவ்வாறான ஒன்று நடத்தப்பட்டிருந்தாலும் அது தெளிவற்றதாகவே உள்ளது. நகரப்பகுதி, கிண்ணியா, மூதூர், தம்பலகாமம் ஆகிய பகுதிகளுக்கான நிலஅளவையாளர் ஓய்வு பெற்றதை அடுத்து அவரது இடத்துக்கும் பீரிஸ் அவர்களே பொறுப்பாக்கப்பட்டதுடன், பின்னர் அவர் ஒரு காணி உத்தியோகத்தராகவும் பதவியுயர்த்தப்பட்டார்.

> இந்த காணி மாற்று இலங்கை இராணுவத்தின் 22வது பிரிகேட்டினால் 1979இல் செய்யப்பட்டதாக உரிமை கோரப்பட்டது ஆனால் இலங்கை இராணுவத்தின் 22வது பிரிகேட் உருவாக்கப்பட்டதே 80களின் பிற்பகுதியிலாகும்.



வடக்கு கிழக்கு மாகாண சபை செயலற்றதாகிய பின், 1990இல் யுத்தம் தொடங்கியதும் பீரிஸின் கை ஓங்கியது. அவரது பகுதி நேர வேலைகளில் காசு வாங்குவது, காணி அபிவிருத்திச் சட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய லிகிதர்களை நியமிப்பது, பழைய காணி உத்தியோகத்தர்களின் கையெழுத்துக்களைப் போலியாக இடுவது போன்றவையும் அடங்கும். தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒதுக்கிவிட்டு சிங்களவர்களைக் குடியேற்றவும், இராணுவம் போன்றதொரு அரசாங்க நிறுவனத்தை அங்கு நிறுவவும், வேண்டிய காணிகள் தொடர்பான தகவல்களைப் பெற பீரிஸ் மிகவும் பயனுள்ளவர் என்ற அபிப்பிராயம் இராணுவத்திடமும் நிர்வாகத்திடமும் நிலவியது.

1992. ரி.பீ.பீரிஸ் அவர்கள் தயாரித்த வரைபடம் ஒன்றின் படி 47 ஏக்கர் நிலம் இராணுவத்திற்கும் இன்னொரு பகுதி துறைமுகத்துக்கும் ஒதுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. பிளான்டன் பொயின்றின் கொமான்டர் பிரிகேடியர் சிறி பீரிஸ் தொடர்ச்சியாக தமது சுடுவீச்சு எல்லைத் தேவைக்கு இந்நிலம் அவசியம் என்று பதிலளித்திருந்தார். இந்த நிலமானது முனையின் ஓரத்திலிருந்து வடகிழக்குப் புறமாக செல்வதற்குப் பதிலாக வட மேற்குப்புறமாக செல்லும் விதத்தில் அளவு செய்யப்பட்டிருந்தால், லிங்க நகரினை தவிர்த்து இந்த சுடுவீச்சுக்கான எல்லைப் பிரதேசத்தை உருவாக்கியிருக்கலாம். ஆனால் இராணுவத்தால் எடுக்கப்பட்ட பிரதேசமும், துறைமுக அதிகார சபையால் எடுத்து வைத்திருப்பதாகச் சொல்லப்படும் இடமும் சேர்க்கப்பட்டிருக்கும் விதத்தில் லிங்கநகரின் பெருமளவுபகுதி எடுக்கப்பட்டு விடுகிறது. இந்த நிலம், 1979இல் இராணுவத்திற்கு மாற்றப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இராணுவத்துடன் முரண்படுவது என்பது அப்போது மிகவும் ஆபத்தானதாகவே கருதப்பட்டது. ஆயினும் பல உத்தியோகத்தர்கள் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். வடக்கு கிழக்கிற்கான மேலதிக காணி ஆணையாளர் ஏ.தங்கராஜாவின் நடவடிக்கைகள் இராணுவத்தின் இந்த காணி எடுக்கும் விடயத்துடன் முரண்பட்டன. இந்த ஆணையாளர் முன்பு ஒரு காணி உத்தியோகத்தராக இருந்தார். 1989இல் இவரே லிங்கநகரில் குடியேறிவர்களுக்கு- இப்போது இராணுவம், அது ஏற்கெனவே தமது காணியாக இருந்ததென சொந்தம் கொண்டாடும் காணியில் குடியேறிவர்களுக்கு காணி உத்தரவுப் பத்திரம் வழங்கியவராவார். தங்கராஜா அவர்கள் அரசாங்கம் அப்போது எடுத்த ஒரு முடிவின்படியே இந்த உத்தரவுப்பத்திரத்தை வழங்கியிருந்தார்.

வடக்கு கிழக்கின் ஆளுநர் மேஜர் ஜெனரல் நளின் செனவிரத்ன இப்பிரச்சினை பற்றி விசாரிக்க மூவர் கொண்ட ஒரு கமிஷனை நியமித்தார். அந்த கமிஷனால் எதுவும் செய்யமுடியவில்லை. ஏனென்றால் அந்தக் கமிஷனின் தலைவர் மார்க்கண்டு கொழும்புக்கு மாற்றப்பட்டார். தான்வழங்கிய உத்தரவுப் பத்திரங்கள் தொடர்பாகவும் பிரச்சினை கிளப்பப்படுவதன் காரணமாக தங்கராஜா இக் கமிஷனிலிருந்து விலகிக் கொண்டார். இதன்பிறகு ஆளுநர், வேலாயுதப்பிள்ளை தலைமையிலான இரு சிங்கள அதிகாரிகளைக் கொண்ட ஒரு கமிஷனை நியமித்தார். இந்தக் கமிஷன் ரி.பி.பீரிசினதும் இராணுவத்தினதும் நிலம் பற்றிய உரிமை கோரல்கள் பொருத்தப்பாடானது அல்ல என்று தெரிவித்திருந்தது. ரி.பி.பீரிசும், ஒரு இராணுவ அதிகாரியும் (டிக்கிரி பண்டார)-அப்போது அவர் லெப்டினன்டாக இருந்தார்-கமிஷனில் சாட்சியமளிக்கையில் 47 ஏக்கர் நிலம் இராணுவத்துக்கு வழங்கப்பட்டதானது 1979இலேயே செய்யப்பட்டது என்றும் நிர்வாகத்தின் சார்பில் ரி.பி.பீரிசினால் வழங்கப்பட்டு இராணுவத்தின் சார்பில் டிக்கிரி பண்டாரவினால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்தார்கள். இந்தப் பிரச்சினையின் சில முக்கியமான விடயங்கள் வருமாறு:

1. இக்காணி வழங்கல் தொடர்பான நடவடிக்கைகள் குறித்த எந்தப்பதிவுகளும் இல்லை. இராணுவம் தமக்கு எந்த நோக்கத்துக்காகவும் எவ்வளவு காணி வேண்டும் என்று கோரும் விண்ணப்பம், நில அளவைக்கான பதிவுகள், காணி ஆணையாளருக்கு அரச நிலத்தை மாற்றுவதற்கான அதிகாரத்தைக் கோரும் அரசாங்க அதிபரின் கோரிக்கை, வர்த்தமானி அறிவித்தல், காணி மாற்றப்பட்டது தொடர்பான பத்திரங்கள் இவை எதுவும் இல்லை. காணி மாற்றப்பட்டது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதுவும் வெளியிடப்படவில்லை.

2. இந்த காணி மாற்று இலங்கை இராணுவத்தின் 22வது பிரிகேட்டினால் 1979இல் செய்யப்பட்டதாக உரிமை கோரப்பட்டது. ஆனால் இலங்கை இராணுவத்தின் 22வது பிரிகேட் உருவாக்கப்பட்டதே 80களின் பிற்பகுதியிலாகும்.

3. 1980களின் ஆரம்ப காலம் வரை வர்த்தமானி அறிவித்தல் வரவில்லை என்பதால் இலங்கை துறைமுக அதிகார சபைக்குரியதாக கூறப்படும் நிலத்தை அது 1979இலேயே தனக்கு உரித்தாக்கிக் கொள்ளும் செயலை செய்திருக்க முடியாது.

4. ரி.பி.பீரிஸ் 1979இல் இந்த காணி மாற்றீட்டை நிர்வாகத்தினர் சார்பில் செய்திருக்க முடியாது. ஏனென்றால் அப்போது அவரது கடமைகள் நகரத்தின் கடமைகளுடன் சம்பந்தப்பட்டதல்ல. நகரப்பகுதி மிகவும் அனுபவம் வாய்ந்த இன்னொரு அதிகாரியின் பொறுப்பில் இருந்தது. ஏற்கெனவே ஒரு அனுபவம் வாய்ந்த (Senior) அதிகாரி இருக்க ஒரு அனுபவம் குறைந்த (Junior) அதிகாரியை இத்தகைய மாற்றத்தைச் செய்ய அனுமதிக்க வேண்டிய காரணம் எதுவும் இல்லை.

இன்னும் ஒரு, பெருமளவு வெளித் தெரியாத தகவல் உண்டு. இந்தப்பிரச்சினை இப்படிப் போய்க் கொண்டிருக்கையில் ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்தின இராணுவத்துக்கு ஒரு கடிதத்தின் மூலம், அவர்களது சுடுவீச்சு எல்லையை வேறொரு பொருத்தமான இடத்துக்கு மாற்றும்படி கோரியிருந்தார். ஒரு அனுபவம் வாய்ந்த இராணுவ அதிகாரி என்ற முறையில், இராணுவத்தின் இந்த நோக்கத்திற்கு நகர்ச் சூழல் பொருத்தமற்றது என்பதும் அதுவும் பிரதான வீதிக்கு அருகாக பீரிஸ் தெரிவு செய்திருந்த பகுதி இன்னும் பொருத்தமற்றது என்றும் அவர் கருதினார்.

உண்மையில் இந்த நிலச்சுவீகரிப்பு எந்த இராணுவ நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. இந்த நோக்கங்கள் முழுக்கவும் கோட்பாட்டுரீதியானவை. இந்த வரைபடமும் நில உரிமை கோரலும் சுத்தமான போலிகள். இராணுவம் தனது ஆரம்பக் கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தாவிட்டாலும் அது தனது கோரிக்கையைக் கைவிடவில்லை. இதனால் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது. இனத்துவ முனைப்புகளின் தீவிரமும், தொழில் சார்ந்த விழுமியங்கள் அற்ற தன்மையும் எவ்வளவுக்கு இங்கு நிலவுகின்றன என்பதனைப் பிரதிபலிக்கும் ஒரு நல்ல உதாரணம் தான் இந்தக் கமிஷன் அறிக்கையினை மிகவும் வெளிப்படையாக தெரிந்த உண்மைகளைக் கொண்ட அறிக்கையினை அதன் தலைவர் சமர்ப்பித்த போது, மற்றைய இரு சிங்கள அதிகாரிகளும் கைச்சாத்திட மறுத்துவிட்டார்கள் என்பது!

ஆனால் ரி.பி.பீரிஸ் அங்கு இருப்பது ஒரு தர்மசங்கடமான விடயமாகவும், சில வேளைகளில் அரிகண்டமான ஒன்றாகவும் திருகோணமலை நிர்வாகத்தினால் உணரப்பட்டது. 1993 காலகட்டத்தில் அங்கிருந்த அரசாங்க அதிபர் கொடவெல, பீரிஸை மாற்றுமாறு கோரியதையடுத்து காணி அமைச்சு அவருக்கு இடமாற்றத்தை வழங்கியது. பீரிஸ் அங்கு இருப்பது தமக்கு பயனுள்ளது என்று கூறி அவரது மாற்றத்தை ரத்து செய்வதில் முயற்சி எடுத்த பிரிகேடியர் சிறி பீரிசும், பாதுகாப்பு அமைச்சும், ஒருவாறு அவரது இடமாற்றத்தை ரத்துச் செய்தன. ரி.பி.பீரிஸ் திருமலையிலேயே இருந்தார் ஆயினும் அதன்பின் அவர் பெரிதாக கணக்கெடுக்கப்படவில்லை. அவர் தனது பரவலாக அறியப்பட்ட பகுதி நேர வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தார்.

திருகோணமலை கச்சேரியின் காணி உத்தரவுப் பத்திரங்கள்-சிங்களவர் அல்லாதவர்களினால் செய்யப்பட்ட பத்திரங்கள்-அடுக்குகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்பது நம்பகமான வட்டாரங்களிலிருந்து எமக்கு அறியக் கிடைத்துள்ளது.

ஈபிடிபி தனது நடவடிக்கைகளை அங்கு ஆரம்பித்ததை அடுத்து லிங்கநகரை எடுக்கும் விவகாரத்தில் இராணுவத்தின் ஆர்வத்தை தூண்டி விடுவதில் பீரிஸ் வெற்றி பெற்றார்.

இம்முறை இந்நிலம் இராணுவத்திற்கே சொந்தமானது என்ற கோரிக்கையைவிட பாதுகாப்பு காரணங்கள் மிகவும் பிரதானப்படுத்திக் கூறப்படுகின்றன. தவிரவும் இந்நிலத்தில் சிங்களவர்களைக் குடியேற்றும் நோக்கம் தமக்கு இருக்கவில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

இவை இரண்டும் கவனிக்க வேண்டியவை.

இராணுவ நிலைகளுக்கு அருகிலிருப்பதால், பாதுகாப்பு காரணங்களுக்காக அகற்றப்பட உண்மையில் மற்ற தமிழ் கிராமங்களை விட இராணுவ நிலைகளிலிருந்து அதிக தூரத்திலேயே லிங்கநகர் இருக்கிறது. உதாரணமாக உவர்மலை 'பிளான்டேஷன் பொயின்ற் முகாமை அடுத்ததாக காணப்படுகிறது. இந்த அடிப்படையில் போவதானால், அதாவது தமிழர்கள் வாழும் இடம் பாதுகாப்புக்கு ஆபத்து என்று போவதானால், எல்லாத் தமிழர்களையும் வவுனியா "நலன்புரி முகாம்" போல வேலியிட்டு காவல் செய்ய வேண்டிய நிலைக்குத்தான் போகவேண்டியிருக்கும்!

சிங்களவர்களைக் குடியேற்றும் நோக்கம் எமக்கு இருக்கவில்லை என்று உத்தியோகத்தர்கள் கூறுவதாகக் கூறுவது சற்றும் நியாயமற்ற ஒன்றாகும். கடந்தகால அனுபவங்களின்படி, ஒரு சாதாரண இராணுவ உத்தியோகத்தரோ, அல்லது உள்ளூர் அதிகாரியோ ஒரு சைகை காட்ட வேண்டியதுதான் தாமதம். உடனே ஒரு குடியேற்றம் அங்கு உத்தரவாதம் செய்யப்பட்டுவிடும். அதிகாரிகளிடம் சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான எந்தப் பதிவுகளும் கிடையாது. சிங்களவர் அல்லாத சமூகங்களுக்கு எதிராகவோ என்றால் மூன்றாந்தர அணுகுமுறைகளே கடைப்பிடிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### அக்டோபர் 1987 போரின் சில காட்சிகள்

மின்சாரம் தடைசெய்யப்பட்டிருந்ததால் ஜெனரேட்டரால் இயக்கப்பட்ட தொலைக்காட்சித் திரையில் இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும் இடையே நடைபெற்றுக் கொண்டிருந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை காரைநகரில் ஒரு கூட்டம் பார்த்துக்கொண்டிருந்தது. மறுநாள் நவம்பர் 5ம்திகதி ஓர் இந்தியக் ஹெலிகொப்டர் அதே இடத்தில் ஷெல் தாக்குதல் நடத்தியதில் பதினொரு பேர் கொல்லப்பட்டனர். உளவுத் தகவல் என்ற பெயரில் நடந்த இத்தாக்குதல் ஆதாரமற்ற ஊர்ஜிதப்படுத்தப்படாத ஊகங்களின் அடிப்படையில் நடந்ததாகவே தோன்றுகின்றது.




சாவகச்சேரியில் நடந்த ஷெல் தாக்குதலும் இதைப் போன்றதே. 1987 அக்டோபர் 27ம்திகதி நண்பகலில் சாவகச்சேரி இந்திய ஹெலிகொப்டரின் ஷெல் தாக்குதலுக்குள்ளானது. ஷெல் விழுந்த சாவகச்சேரி சந்தையில் அப்போது இருந்தவர்கள் சாமானியப் பொதுமக்களும் வடபாகத்தில் இருந்து வந்து நின்ற

திருக்கிறார். இந்திய ஹெலிகொப்டர் ஒன்று கண்காணித்துக் கொண்டிருக்கும் நிலையில் ஏதோ அசம்பாவிதம் நிகழப்போகிறது என்று தனது நண்பர்களிடம் அவர் சொல்லிக் கொண்டிருந்திருக்கிறார். எதுவானாலும் ஒரு மணிநேரத்திற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கையை ஒரு போதும் நியாயப்படுத்துவதற்கில்லை. தெற்கு நோக்கிச் செல்வதற்காக சங்குப்பிட்டித்துறையில் காத்திருந்த அகதிகள் மீதும் அக்டோபர் 25ம்திகதி ஹெலிகொப்டரிலிருந்து குண்டு வீச்சுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இச்சம்பவத்தை நேரில் பார்த்த ஒ்ருவர் தெரிவித்திருந்த தகவல்கள் நவம்பர் முதல் திகதி வெளியான 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகியுள்ளது. மே 1987ல் இலங்கை இராணுவம் மேற்கொண்ட 'ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கையின்போது உயிர்தப்பி ஓடிக்கொண்டிருந்த அகதிகள் கூட இம்மாதிரி கஷ்டங்களை அனுபவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒக்டோபர் 22ம்திகதி அராலித்துறையிலிருந்து தீவுப்பகுதிகளுக்கு சென்று கொண்டிருந்த பலரையும் இது போன்ற

பத்தினர் முழங்காலில் நின்று மண்டியிட்டு மன்றாடியதன் பேரில் விடுவிக்கப்பட்டனர்.

இந்திய அமைதிப்படையின் பாலியல் வன்முறை, பெண்களைப் பாலியல்ரீதியாக தொந்தரவுக்குள்ளாக்குதல், திருட்டு ஆகிய சம்பவங்களின் எண்ணிக்கை நவம்பரிலிருந்து அதிகரிக்கத் தொடங்கியதாகப் புகார்கள் வந்தன. உரும்பிராய்க்கு அருகில் கரந்தன் என்ற இடத்தில் தேடுதல் நடந்து கொண்டிருந்த போது இந்தியப்படை வீரர்கள் பெண் அகதிகள் மட்டுமே இருந்த ஒரு வீட்டினுள் நுழைய நேர்ந்தது. கதவுகளை உள்ளே தாழிட்டு விட்டு கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் அவர்கள் உள்ளே கழித்தனர். சுண்டுக்குளியில் ரக்கா லேனில் வசிக்கும் ஒரு பெண்மணி நவம்பர் 16ம்திகதி நடந்த நிகழ்ச்சியை விபரிக்கிறார். முழங்காலில் விழுந்து மன்றாடிக் கதறி அழுத பிறகுதான் இராணுவ வீரர்கள் அவரை விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். நவம்பர் 28ம்திகதி உரும்பிராய் வடக்கில் ஒரு பெண் இருந்த வீட்டிற்குள் தனி இந்தியப்படை வீரன் ஒருவன் நுழைந்திருக்கிறான். பெண்ணின் தாயும் அக்கம் பக்கத்திலிருந்தவர்களும் கூச்சலிட்டவுடன் அவன் ஓட்டம் பிடித்துவிட்டான். இந்திய அமைதிப்படை முன்னேறி வந்து கொண்டிருந்தபோது உரும்பிராயில் சுட்டதில் தன் தாயையும் பாட்டியையும் பறிகொடுத்திருந்த பல்கலைக் கழக மாணவி ஒருவரை அவரது மாமா நவம்பர் 14ம்திகதி உடுவிலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கூட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தார். மானிப்பாயில் அவள் தனது சினேகிதியின் வீட்டுக்குப் போகையில் இரண்டு படைவீரர்களின் கண்காணிப்பில் தந்தையும், தாயும் மகனும் வீட்டிற்கு வெளியில் நின்று கொண்டிருந்தனர். பெண்ணை உள்ளே போகுமாறும் மாமாவை வெளியில் நிற்குமாறும் படைவீரர்கள் சைகை செய்தனர். நடக்க விருப்பதை உணர்ந்த பெண் கூச்சலிட்டாள். எல்லாரையும் சேர்ந்து கூச்சலிடுமாறு மாமாவும் வேண்டினார். சில வீரர்கள் வீட்டை விட்டு வெளியே ஓடி வந்தனர். பின் எல்லாப்படைவீரர்களும் ஓடிவிட்டனர். அந்த வீட்டிலிருந்த பெண் இராணுவ வீரர்களால் இரண்டு முறை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டிருந்தார். தன் குடும்பத்தில் உள்ளவர்களைச் சுட்டுக்கொன்று விடுவார்கள் என்ற அச்சத்தில் அந்தப்பெண் கூச்சலிடவும் பயந்து போயிருந்திருக்கிறாள். பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த அந்த வீட்டின் ஒரு

## "உதைக்கும் படி கட்டளையிட்டிருந்தேன்"

அகதிகளும் தான். சம்பவத்தை நேரில் கண்ட எஸ்.ஜி.தேவா அவர்களின் கூற்றுப்படி அச்சமயத்தில் அப்பகுதியில் விடுதலைப் புலிகளின் இலக்கு என்று குறிப்பிடக் கூடிய மாதிரி ஒரு அறிகுறியுமே இல்லை. இத்தாக்குதலில் இருபதிலிருந்து நாற்பது பேர் வரை கொல்லப்பட்டனர். தன் குழந்தையை அணைத்தவாறே இறந்து போய் கிடந்த தாயின் உடம்பைத் துளைத்துச் சென்ற சிறுசன்னமானது அவள் அணைத்திருந்த குழந்தையின் மேனியையும் ஊடுருச் சென்றிருந்தது.

இந்த வான்வழித் தாக்குதல் நடப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னதாக சாவகச்சேரிச் சந்தைக்கூடாகச் சென்ற ஒரு பயணி 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட டட்ஸன்பிக் - அப் வாகனத்தில் ஆயுதந் தாங்கிய விடுதலைப் புலிகள் மெதுவாக நகர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்

துயரச்சம்பவம் பலி கொண்டது. பொதுமக்களை ஏற்றிச்சென்று கொண்டிருந்த அந்தப் படகுகள் மீது வான்வழியாக சூட்டுத் தாக்குதல் நடத்தியதில் பதினேழு பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப் பட்டது.

நவம்பர் 3ம்திகதி லில்லி ராஜாவும் அவரது இண்டு பேரன்களும் ஒரு பேத்தியும் இந்திய அமைதிப் படையினரால் கொண்டு செல்லப் படும் வேளையில் உடுவிலில் மருதனாமடம் வீதியில் சொலமன்ஸின் வீட்டுக்கு முன்னால் கொல்லப்பட்டனர். இவ்வளவிற்கும் இந்தியப்படையை ஆத்திரமூட்டச் செய்யும் எந்த நிகழ்ச்சியும் இங்கு இடம் பெறவில்லை. ஒரு தகவலின் படி ''நிறுத்துங்கள்'' என்று ஓர் இந்தியப்படை அதிகாரி கத்தியிருக்கிறார். ஆனால் அதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. வெளியில் வருமாறு அழைக்கப்பட்ட சாலமன்ஸின் இரு மருமகன்மாரும், குடும்

மகன் அதற்கு முன்தினம் தனது இருபது நண்பர்களுடன் நின்று கொண்டிருந்தபோது இராணுவ வீரர்களால் எட்டி உதைக்கப்பட்டுத் தாக்கப்பட்டிருந்தார். அந்த மகன் இதுபற்றி அந்தப்பகுதி இராணுவத் தலைவரிம் முறையிட்டபோது அந்த இராணுவ கப்டன் பின்வருமாறு பதிலளித்தார். ''நான் இதற்காக வருந்துகிறேன். இந்த சம்பவத்திற்கான முழுப்பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆயுதங்களைத் தேடி அவற்றைக் கண்டு பிடித்துக்கொள்ள முடியாத ஆத்திரத்தில் நாங்கள் இருந்தோம். சில இளைஞர்களை பிடித்து அடித்து உதைக்கும்படி அவர்களுக்கு நான் கட்டிளையிட்டிருந்தேன். அவர்கள் கட்டுப்பாடானவர்கள், அவர்கள் தமக்கு விடுக்கப்பட்ட கட்டளைகளைத்தான் எப்போதும் செய்வார்கள்''. அந்தப்பெண்கள் அதற்குப் பிறகு கொழும்புக்குப் போய் விட்டார்கள்.

## புதிய நியாயங்கள்

துடைப்பதற்கு ஆளின்றி
கண்ணீர்
அழுகி மணக்கிறது.
செட்டை பெயர்ந்த வடுக்களாய்
விரியும்
மணற்கங்குப் பாலைவன மனிதர்கள் நாம்.

மூளை முக்கி
பிரசவத்திற்காய் துடிக்கையிலே
களம் தேடும் மனிதர்களே!
பேனா புண்டு மையொழுக
எழுதிக் குவித்திடுங்கள்-
உங்கள் வலிதீர.
ஒரு கூர்முனையாய் நுண்ணியதாய்
தெரிந்தும் தெரியாமலும்
முளைத்துநின்று
சிறுபோகம் கொள்ளுங்கள்.

எழுத்துக்கள் கொல்வது
ஓர் உணர்வுள்ள ஜீவியைத்தான்-
உங்களையல்ல.

அதிகாரத்துவத்தின் சட்டைப்பையில் ஒரு பேனாவாக
முடிந்தால், ஒரு புன்முறுவலாக
உங்களை கரைத்துக் கொள்ளுங்கள்.

மைபூசி
எடுப்பெடுத்து
'அழகு' நக்கும் முகம்போல
நாறுகிறது
'அறிவு' நக்கும் உங்கள் மூளை.
எழுத்துக்களை சிதைத்து ஒட்டும்
தொழில்நுட்பம்
யுத்தப் பட்ட மக்களுக்கு தீன்போடாது!

— பாலமோகன் —

## அவன் போராளியாக இருக்கக்கூடாது

என்னைப் போல்
நிறத்திலும் உருவத்திலும்
ஒத்திராத அவனை இன்னும் நான்
அடையாளப்படுத்த முடியவில்லை
அந்தி இருளுக்குள்
மிக வேகமாக வேகமாக
கடக்க நேர்ந்தது அவனை
மிகச் சுறுக்காகவும்
பயத்தின் ஜாக்கிரதையுடனும்
கடக்க நேர்ந்தது
அவனையும் அந்தத் தெருவையும்

வீட திரும்பும் அவசரத்தினாலும்
ராணுவத்தின் பயத்தினாலும்
இவனை அடையாளங்காண முடியவில்லை
அவன் போராளியாகயிருக்கக்கூடாது
யாரும் அவனை
அடையாளங்காணவும் கூடாது
பயப்படுகிறேன்

ராணுவ முகாமுக்குள் வதைபடுதல்
மிதித்துத் துவைபடுதல்
உச்சி வெயிலில் முட்டுக்காலில் கிடத்தல்
கட்டாயப்படுத்தி
மண்ணையும் அசுத்தநீரையும்குடித்தல்
இப்படி
கடுமையான வதைகளைவிட
கடுமையான பயம்
அவன் போராளியாகயிருக்கக் கூடாது
என்பதே ஆகும்

○
மஜீத்
97.02.01

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# 'சித்த ஆயுர் வேத வைத்தியம் நவீன அறிவியல் வெளிச்சத்தில் மீள் கண்டு பிடிப்புச் செய்யப்பட வேண்டும்!'

## வட கிழக்கு மாகாண சுதேச மருத்துவத்துறைப் பணிப்பாளர் டொக்டர்.கணபதிப்பிள்ளை றோ மகேஸ்வரன்

வடக்கு கிழக்கு மாகாண சபையின் சுதேச மருத்துவத் துறையின் பணிப்பாளரான டொக்டர் பசுபதிப்பிள்ளை ரோமகேஸ்வரன் அவர்களுடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.

கீழைத்தேச கலாசாரத்தில் வளர்ச்சி பெற்ற மருத்துவமும் இருந்துள்ளது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ம்றறும் அராபிய நாடுகளில் இவை தங்களுக்கே உரிய தனித்துவங்களுடன் பண்டைக்காலத்தில் விளங்கின.

இலங்கையில் சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் என்பன சிறப்பான நிலையில் இருந்துள்ளன.

ஆயினும் காலனித்துவ காலத்தில் இவை நெருக்கடிகளுக்கு உள்ளாகின.

சுதேச மருத்துவங்களான இவை ஆங்கில - அலோபதி மருத்துவத்தால் சாதிக்க முடியாத பல நோய்களை நிரந்த மாக குணப்படுத்தக் கூடியவை. சுதேச மருத்துவத் துறையின் முக்கியத்துவம் மக்கள் மத்தியில் மீள உணர்த்தப்பட வேண்டும் என்ற மனவிருப்புடன் இந்நேர்காணல் உங்கள் முன் வைக்கப்படுகிறது.

டாக்டர் றோமகேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த பிரபல சித்த ஆயுர்வேத வைத்தியரான பசுபதிப்பிள்ளை அவர்களின் மகன் ஆவார். இவர் யாழ்ப்பாணம் சென் - ஜோன்ஸ் கல்லூரியில் தன் ஆரம்பக் கல்வியைக் கற்று பின்னர் இந்தியாவின் திருச்சியில் சென் ஜோசப் கல்லூரியில் பட்டமுன் கல்வியையும் பின்னர் விஞ்ஞான மானித்துறையில் பட்டப்படிப்பையும் முடிதது கொண்டார். அதன் பின்னர் பொறளை சித்த ஆயுர்வேத கல்லூரியில் சித்த ஆயுர் வேதத்தை ஐந்து ஆண்டுகள் பயின்று கொழும்பு பெரியாஸ்பத்திரியில் தனது ஒரு வருட உள்ளகப்பயிற்சியையும் முடித்து கொண்ட பின் தகப்பனின் வழியில் சுயமாகவே மருத்துவத் தொழிலை மேற்கொண்டு வந்தவராவார்.

***சித்த வைத்தியம் ஆயுர்வேத வைத்தியம் இவற்றின் தோற்றம் பற்றிச் சற்றுக் கூறுங்கள்.***

சித்த வைத்தியத்தையும், ஆயுர்வேத வைத்தியத்தையும் ஒன்றாகவே கருத்துக் கெடுத்துப் பேச வேண்டும்.

சித்த வைத்தியம், சிவசம்பிரதாயத்திற்குரியது. ஆயுதர்வேத வைத்தியம் பிரம்ம சம்பிரதாயத்திற்குரியது என்றும் கொள்ளப்படுகின்றன.

அந்த கரணங்களை அடக்கியாண்டு, அட்டமா சித்திகளையும் பெற்று, முக்காலத்தையும் உணர்ந்து விளங்குபவர்களால் அவர்களது அனுபவங்களினூடாகப் பெற்ற வீரியமான மருந்துகள் மூலம் செய்யப்பட்ட மருத்துவம் சித்த மருத்துவம் எனப்பட்டது. அவர்கள் சித்தர்கள் எனப்பட்டார்கள். ஆத்மாவின் உறைவிடமான உடம்பு முக்கியமானது. அது பேணப்படல் வேண்டும் என்பது சித்த வைத்திய முன்னோடிகளில் முக்கியமானவராகக் கருதப்படுகிற திருமூலரின் கருத்தாகும். எனவே உடம்பை பேண காயகல்பங்களை அவர்கள் ரசவாதம் புரிந்து தயாரித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

எவ்வாறெனினும் சித்தமருத்துவ தத்துவங்களோ சிகிச்சை முறைகளோ சுவடிகளாக வேனும் இருக்கவில்லை. செவி வழி வந்த கர்ண பரம்பரைக் கதைகளாகவே சித்த மருத்துவ சாஸ்திரம் அறியப்பட்டது. எனினும் சித்த வைத்திய ஔடதத் திரட்டு எனப்படும் நூல் ஒன்று உள்ளது. ஆனால் இது மருந்துகள் பற்றியதே! திரு மந்திரப் பாடல்களில் சித்த மருத்துவக் குறிப்புக்கள் விரவிக் கிடப்பதாக குறிப்படுகிறது. எனினும் அவை எங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதே உண்மை. சித்த வைத்தியம் முழுமையான பரிணாமத்தை அடைந்திருந்தபொழுது எங்களுக்கு கிடைக்கவில்லை. அது சிதைவடைந்து மீளவும் வளர ஆரம்பித்த காலப்பகுதியில் இருந்து அது ஆயுர்வேதம் என அழைக்கப்படலாயிற்று.

***யுனானி வைத்தியமும் சுதேச வைத்திய முறைகளுக்குள் அடங்குகின்றதா?***

ஆம், இந்திய கலாசாரத்துடன் ஊடாடித் திரிந்த கிரேக்கர்கள், அராபியர்கள் என்போர் சித்தாயுர்வேத மருத்துவ அடிப்படைத் தத்துவங்களை எடுத்துச் சென்று தங்கள் கலாசாரத்துக்குள் உள்வாங்கி அவர்களுக்கென ஓர் மருத்துவ முறையை உருவாக்கிக்கொண்ட பொழுது யுனானி வைத்திய முறை தோன்றியது.

***இலங்கையின் சித்த ஆயுர்வேத மருத்துவம் இந்திய கலாசாரத்தில் இருந்து வேறுபட்ட பண்புகளைக் கொண்டுள்ளதா?***

ஆம், இந்திய கலாசாரத்தின் அடியாகவே இங்கும் அவை பரவி இருக்கக்கூடும் என்றாலும் சித்த ஆயுர்வேத மருந்து மாத்திரைகள் தயாரிப்பு முறைமையில் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்துவமான பண்பைக் கொண்டுள்ளன. உதாரணமாக நவரத்தின பூபதி வெற்றி வேலாயுதன் மாத்திரை, சிவன்குளிசை, சின்னச் சிவப்பு மாத்திரை, விஷ்ணு சக்கர மாத்திரை போன்ற குளிசை தயாரிப்பு முறைகள் இந்திய சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் இல்லை.

***பொதுவாக சித்த ஆயுர்வேத மருத்துவத்தின் தத்துவ அடிப்படையைக் கூறுங்கள்?***

சித்த ஆயுள் வேத மருத்துவமானது மனிதர்களை வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றினாலும் ஆனவர்களாகக் கருதுகிறது. மனிதர்களுக்கு மனிதர்கள் இவை கூடிக்குறைந்து காணப்படலாம். வாதம் என்பது உடல் தொழிலியல் சம்பந்தப்பட்டது ஆகும். பித்தம் என்பது உடலில் சக்தி பிறப்பிக்கப்படுகிற அனுசேபத் தொழிற்பாட்டை குறிக்கிறது. இவற்றில் ஏற்படும் குழப்பங்கள் ரோகங்கள் எனப்படும். அவை வாதரோகம், பித்த ரோகம் என அழைக்கப்படும். இவ்வாறாக மருத்துவ அடிப்படைகள் 96 வகைப்படும். இவை சிக்கலானவையாகவும் உள்ளன. இவற்றை தெளிவுறக் கற்றவர்களையே சித்த வைத்தியர்கள் எனலாம்.

***இவ்விடத்தில் கிராமங்கள் தோறும் இருக்கும் விஷகடி வைத்தியர்கள், முறிவு, தறிவு வைத்தியர்கள் போன்ற நாட்டு வைத்தியர்களைப் பற்றிச் சொல்ல முடியுமா?***

இவர்கள் குறித்த அக்கலையில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள் பலர் ஊர் மக்கள் மத்தியில் மதிப்புப்பெற்றவர்களாகவும் உள்ளனர். எனினும் இவர்களை முழுமையான சித்த வைத்தியர்கள் எனக்கொள்ள முடியாது.

***ஆயுர்வேத வைத்தியம் சமய தத்துவங்களுடன் பின்னிப்பிணைந்ததாகவும் குருகுல மரபுக்கூடாக வளர்ந்து வந்ததாகவும் உள்ளது. இத்தகைய மருத்துவ முறையை ஒழுங்கு திரட்டிய ஒரு கற்கை நெறியாக வளர்ப்பது கடினம் என்றாலும் அவசியமானது எனக் கருதுகிறேன். இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?***

இன்றைக்கு எங்கள் கல்வி முறைமை மனித விழுமியங்கள் பற்றி அக்கறை கொள்ளாததாகவே உள்ளது. இத்தகைய ஒரு கல்வி முறையில் போதிக்கப்படுகிற சித்த மருத்துவம் மீது எனக்கு நம்பிக்கை இல்லை.

எங்களுக்கு ஆயுர்வேதத் துறையில் போதனை செய்த ஆசிரியர் ஒருவர் நாடி பார்த்தல் ஒரு ஏமாற்று வித்தை (Pulse is a Humbug) எனக்கூறுவார். ஆனால் நாடி சாஸ்திரம் ஆயுர்வேதத்தின் முக்கியமான அம்சம் ஆகும்.

இன்றைக்கு ஆயுள்வேத வைத்திய துறைக்கு தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சித்த ஆயுர்வேதத்தின் தத்துவம், பண்பாடு என்பன பற்றித் தெரியாது. எனவே இன்றைக்குள்ள கல்வியில் மாணவர்களுக்கு அது வழங்கப்படுவதில்லை. இன்றைக்கு ஆயுர்வேதக் கல்லூரியில் உருவாக்கப்படுகிறவர்கள் ஆங்கில வைத்திய முறைக்கு இசைவான இரண்டாம் தர வைத்தியர்களாகவே (Secondary Physician) உள்ளனர். அவர்கள் ஆயுர்வேதத்தின் மூலாதாரமான அம்சங்களைக் கைவிட்டுவிடுகின்றனர். தங்களை ஆயுர்வேத வைத்தியர்கள் எனச் சொல்லவும் வெட்கப்படுகின்றனர். அதுமட்டுமல்ல ஆங்கில மருந்துகளை பரிந்துரை செய்யவும் தலைப்படுகிறார்கள்.

சித்த ஆயுர்வேதத்தை அதன் மூலாதாரமான அம்சங்கள் கெடாதவாறு ஒரு கல்வி முறையாக வளர்த்தெடுப்பதற்கு ஆரம்பத்தில் நிறுவனங்கள் இருக்கவில்லை. எனினும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள சிறீலங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரி இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட தனிப்பட்ட கல்லூரியாகும். இங்கு சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் குடும்பப் பாரம்பரியம் கொண்டவர்களே கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்டனர். இக் கல்லூரி வந்தாறுமூலைக்கு மாற்றப்பட்டு கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்பது என் ஆசையும் பரிந்துரையும் ஆகும்.



***சித்த ஆயுர்வேத வைத்திய பாரம்பரியம் உள்ளவர்களை மட்டுமே அதனை கற்க அனுமதிக்க வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்களா? இத்துறையை கற்க ஆர்வமுடன் வருகிறவர்களை புறக்கணிக்க முடியுமா?***

இல்லை. இத்துறையை கற்க ஆர்வமுடன் வருகிற எவரையும் நாங்கள் புறக்கணிக்கக் கூடாது. ஆனால் அவர்களை இவ்வைத்திய கலாசாரத்தின் தாற்பரியத்தை உணர்ந்து கொண்டவர்களாக மாற்றக்கூடிய முறையில் சித்த ஆயுர்வேதக் கல்விமுறையை உருவாக்க வேண்டும். உருவாக்க முடியும். அதற்கு சித்த வைத்தியத் துறையில் ஆழ்ந்த புலமைத்துவம் உள்ளவர்களை விரிவுரையாளர்களாக கொண்டு வதிவிடக் கல்வி முறையை நாங்கள் உருவாக்க வேண்டும். (Recidential University Education in an Ayur vedic Complex)

***ஆயினும் சித்த ஆயுர்வேத பரம்பரையில் வந்தவர்களே சிறப்பாக அத்துறையை வளர்க்க முடியும் என நீங்கள் கருதுவது போலத்தெரிகிறது....?***

உதாரணமாக நீங்கள் என்னை எடுத்துக் கொள்ளுங்கள். நான் என் தகப்பனாரின் வைத்தியப் பண்பாட்டில் வளர்ந்தேன். அவரிடம் வரும் நோயாளிகள், அவர்களை அவர் அறிந்து கொள்ளும் விதம்; அவர்களின் நோயைத் தீர்மானிக்கும் விதம்; அதற்குரிய மருந்துகளை தீர்மானிக்கும் விதம்; தீர்மானித்த மருந்துகளைத் தயாரிக்கும் விதம், தயாரித்தவற்றை நோயாளிக்கு பத்தியங்களை விளக்கி வழங்கும் விதம் என்பவற்றை எல்லாம் பார்த்து உணர்ந்து அறிவாக்கிக் கொண்டேன். 'மூலிகைகளை இனமறிதல், எந்தெந்தக் காலங்களில் என்னென்ன மூலிகைகளை சேகரிக்கலாம் அவற்றை எப்படி மருந்துகளாக்குதல் என்பன போன்ற அறிவுகள் யாவும் சிறுவயதில் இருந்தே என் உணர்விலும் அறிவிலும் பதிந்தவை. இந்தக் காரணத்தினால் குடும்பப்பாரம்பரியத்தை நான் சிறப்பானதொரு தகுதியாக கருதுகிறேன். (It is a Plus Point)

***ஆயுர்வேத மருத்துவத்தை ஆங்கில மருத்துவத்திற்கான முழுமையானதொரு மாற்றீடாகக் கொள்ள முடியுமா?***

இல்லை உண்மையிலும் அப்படி இல்லை. இன்னும் ஆயுர்வேதத்தில் சத்திர சிகிச்சையும் மகப்பேற்று மருத்துவமும் சிறப்பாக விருத்தி அடையவில்லை. ஆரம்பத்தில் மனிதனின் உடலில் காணப்பட்ட கட்டிகள் போன்றவற்றை வெட்டி அகற்றும் பணியை நாவிதர்களே செய்தனர். அதனையிட்டு அவர்களையும் பரியாரி என அழைக்கப்பட்டதையும் இங்கு நினைவு கூரலாம்.

ஆயினும் சுசுருதர் என்பவர் முதன் முதலில் கண் சத்திரச் சிகிச்சை செய்துள்ளார் என ஆயுள்வேத குறிப்புக்களில் காணப்படுகிறது.

சித்த - ஆயுர்வேத வைத்தியம், ஆங்கில வைத்தியம் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று குறைநிரப்புவனவாகவும் உதவி செய்பவனவாகவும் உள்ளன, எனவே நான் கருதுகிறேன். Both are Subplimentary and Complimentary to Each Other)

வைத்தியத்தின் உண்மையான நோக்கம் உடல், உள ரீதியான ஆரோக்கியமான சமூகம் ஒன்றைப் பேணுவதே! இதற்கு இரண்டு வகையான மருத்துவ முறைகளும் அவசியம்.

***நவீன யுகத்தில் சித்த ஆயுர்வேத மருத்துவம் எத்தகைய வளர்ச்சியை அடைய வேண்டும் என்று கருதுகிறீர்கள், இந்த மருத்துவ முறையானது முன்பிருந்த அதே வழிவகையிலே பின்பற்றப்பட வேண்டும் என்று கருதுகிறீர்களா?***

சித்த ஆயுர்வேத மருத்துவம் தன்னளவில் முழுமையான தொருவைத்திய முறைமையாகும். அது கால மாற்றங்களுக்கு நின்று பிடிக்கக்கூடியதும் தன்னை விரித்துக் கொடுக்கக் கூடிதும் ஆகும்.

இந்தியாவில் சித்த ஆயுர்வேத மருந்துகளை தயாரிக்கும் துறையில் மிகப்பாரிய முன்னேற்றங்கள் நடந்துள்ளன. நவீன தொழில் நுட்பங்களை பிரயோகிப்பதன் மூலம் சித்த ஆயுர்வேத மருந்துகளை மாத்திரைகளாக (Tablets) ஊசி மருந்துகளாக (Injections) தயாரிக்கின்றனர்.

நவீன தொழில் நுட்ப அறிவு சித்த ஆயுர்வேதத்தின் மூலாதாரமான அம்சங்களை சிதைக்காதவாறு இணைக்கப்பட வேண்டும். நவீன கொம்பியூட்டர் யுகத்துள் சித்த ஆயுர்வேதம் தன் தனித்துவங்களுடன் பிரவேசிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் பெரியதொரு சந்ததி இடைவெளியை (Genaration Gap) சந்திக்க வேண்டிவரும். மற்றையது ஆயுர்வேத மருத்துவத் துறையில் வளர்ச்சி அடையாத சத்திரச் சிகிச்சை, மகப்பேற்று வைத்தியம் என்பன பற்றிய, பரந்த அறிவு இத்துறைக்கு வழங்கப்பட வேண்டும்.

சித்த ஆயுர்வேத வைத்தியம் நவீன அறிவியல் வெளிச்சத்தில் அதன் மூலாதாரப் பண்புகளும் தனித்துவமும் கெடாமல் மீள் கண்டு பிடிப்பு செய்யப்பட வேண்டியது எங்கள் காலத்தின் தேவையாகும்.

***ஆயுர்வேத மருத்துவம் நோயாளியை எப்படி அணுகுகிறது? எப்படி அறிந்து கொள்கிறது பற்றி என்பது கூற முடியுமா?***

இது முக்கியமானதொரு விடயம். இப்பொழுது நான் 1975ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலைமையை திரும்பிப்பார்க்க விரும்புகிறேன்.

→

நேர்காணல் - மருத்துவன்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்றைக்கு இருந்த ஆயுர்வேத வைத்தியர்கள் குடும்ப வைத்தியர்கள் ஆகவும் இருந்தனர். அவர்கள் அக்குடும்பங்கள் பற்றி நன்கு அறிந்திருந்தனர். அக்குடும்ப அங்கத்தவர்கள் என்னென்ன நோய்களுக்கு உட்பட்டனர்? அவர்களிடம் காணப்பட்ட பரம்பரை நோய்கள் என்ன? அவர்களின் குடும்பப் பழக்கவழக்கங்கள், உணவுப்பழக்கவழக்கங்கள், சமூகப்பழக்க வழக்கங்கள் என்பவைபற்றி அறிந்திருந்தனர். ஏன் அக்குடுபம்பங்களின் பொருளாதார நிலைமைகளையும் நன்கு அறிந்திருந்தனர். இதனால் அக்குடும்பங்களில் புதிதாக நோய் வாய்ப்படுகிற ஒருவரின் நோயை அறிந்து கொள்வது அவர்களுக்கு இலகுவாக இருந்தது. மேலும் குடும்பம் ஒன்றில் பிள்ளை பிறந்து 41 நாட்களின் பின்னர் அக்குழந்தையை மருத்துவரிடம் எடுத்து வருவர். இது அக்குழந்தைக்கான முற்பாதுகாப்பு வைத்தியத்திற்காகவே (Preventive Treatment) ஆகும்.

***அதாவது முன்பு இருந்த குடும்ப வைத்தியர் என்கிற நடைமுறையும் அதன் பின்னால் உள்ள சாதகமான பண்புகளும் இன்றைக்கு வளர்த்தெடுக்கப்பட வேண்டும் எனக் கருதுகிறீர்களா?***

ஆம். ஏனெனில், வைத்தியனுக்கும் நோயாளிக்கும் இடையே நிலவுகிற அந்நியோன்னியமான உறவு நோயை இனம் காணும் (Diagnosing Procedure) பணிக்கு மிகவும் அவசிமாகும். இன்றைக்கு வைத்தியர்களுக்கும் மக்களுக்கும் இடையே அந்நியமான உறவுதானே உள்ளது.

***இனி சித்த மருத்துவத் துறையின் பணிப் பாளர் என்ற வகையில் உங்களிடம் கேள்வி களைக் கேட்க விரும்புகிறேன். வடக்கு கிழக்கு மாகாணத்தில் சித்த ஆயுர்வேத மருத்துவத்துறை எவ்வாறு ஸ்தாபிக்கப்பட்டது?***

வடக்கு கிழக்கு மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்டபொழுது அலோபதி மருத்துவத்திற்கு மாகாணப் பணிப்பாளர் ஒருவர் இருப்பது போலவே சுதேச மருத்துவத்திற்கும் துறை ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பதை திருமலையின் பிரபல்யமான சித்த ஆயுர்வேத வைத்தியரான சுவாமி கெங்காதரானந்தா அவர்கள் யு.என் சிவராசா, நச்சினார்க்கினியர் போன்றவர்களுக்கு வலியுறுத்தி அவர்களின் முயற்சியினால் இத்துறை ஸ்தாபிக்கப் பட்டது.

***இத்துறையின் பணிப்பாளராக எப்படித் தெரிவுசெய்யப் பட்டீர்கள்?***

சுவாமி கெங்காதரானந்தா அவர்களே என்னை இத்துறையை பொறுப்பேற்கும்படி வற்புறுத்தினார். அவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதற்கு எனது தந்தையார் எனக்கு கூறி இருந்த நான்கு முக்கிய அறிவுரைகளில் ஒன்றை மீற வேண்டியேற்பட்டது.

எனது தந்தை எனக்கு பின்வருமாறு கூறி இருந்தார்.

மகனே நீ ஒருபோதும் பணத்துக்கு பின்னால் செல்லக்கூடாது!
நீ எங்கு போனாலும் காதல் விடயத்தில் கவனமாக இரு!!
நீ எவ்விடயத்தில் ஈடுபட்டாலும் அதில் பூரணமாக ஈடுபடு!!!
நான்காவது நீ ஒரு பொழுதும் அரச உத்தியோகம் பார்க்க கூடாது. எமது பரம்பரை வைத்தியத்தையே செய்ய வேண்டும் என்பதாகும்.

ஆனால் சுவாமி கெங்காதரானந்தாவுக்காக நான் அதை மிறினேன். ஆனால் அதற்கு விலையும் செலுத்த வேண்டியேற்பட்டது. குடும்பத்தை நான், பிரிந்ததும் வேலைப்பளு மனைவியின் மீது விழுந்ததும் அவளது மரணத்துக்கு காரணமானது. இது இதயத்தை இன்றளவும் தாக்கியபடிதான் உள்ளது.'

***வடக்கு கிழக்கு மாகாண மக்களைப் பொறுத்த வரை ஆயுர்வேத மருத்துவத்தை வரவேற்கும் மனோபாவம் உள்ளதா? வடக்கு கிழக்கு மாகாண அதிகாரிகள் மட்டத்தில் இத்துறை பற்றி என்ன மனோபாவம் உள்ளது?***

மக்களைப் பொறுத்த வரை ஆயுர்வேத மருத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். ஆதரவும் தருகின்றனர். ஆனால் சில சித்த ஆயுர்வேத மருத்துவர்கள் ஆங்கில மருந்துகளைப் பொடி செய்து தேனில் குழைத்து, உண்ணுமாறு கொடுக்கும் போதுதான் எரிச்சலும் நம்பிக்கையீனமும் அடைகின்றனர்.

அதிகாரிகளைப் பொறுத்த வரை மூன்று வகையினவர்கள் உள்ளனர் போல் தெரிகிறது.

1. ஆயுர்வேதத்தைப் பற்றி அதிகம் தெரியாத வகையினர்.
2. ஆயுர்வேதத்தைப் பற்றி அறிந்திருந்தும் அதில் அக்கறையில்லாதவர்கள்.
3. சித்த ஆயுர்வேத துறையின் வளர்ச்சியினை திட்டமிட்டே தடுக்க முனைபவர்கள்.

***சித்த ஆயுர்வேதத்துறை தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண சபையில் உங்களுக்குள்ள அதிகாரங்கள் பற்றி கூறுங்கள்?***

உண்மையிலும் நான் இத்துறையை பொறுப்பேற்கும் பொழுது பெரிய கனவுகளுடன் தான் வந்தேன். சுதேச வைத்தியத் துறையில் ஆக்கபூர்வமான பல வேலைகளையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முடியும் என நினைத்திருந்தேன்.

> "வட கிழக்கு மாகாண சித்த ஆயுர்வேத துறை பணிப்பாளருக்கு போதுமான அதிகாரங்கள் இல்லை"

அதன்படி சித்த ஆயுர்வேத வைத்தியத்துறைக்கென (வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு) தனியான கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டும் எனவும் அதன்படி சாதிக்க வேண்டி இலக்குகளையும் அவ்விலக்குகளுக்கான செயற்திட்டங்களையும் தயாரிக்க வேண்டும் எனவும் வற்புறுத்தி கடிதங்களை எழுதினேன்.
ஆனால்,
13வது திருத்த சட்ட மூலத்தின் படி மாகாண சபைக்கு பகிர்ந்து அளிக்கப்பட்ட அதிகாரங்கள் என்னும் விடயத்தில் சரத்துக்கள் 12 A, B ஆகியவற்றின்படி சிறு ஆயுர்வேத வைத்தியசாலைகளை நிறுவுதல் மருந்தகங்களை நிறுவுதல், மூலிகைத் தோட்டங்களை அமைத்தல் போன்ற விடயங்களில் என்னை கவனம் செலுத்துமாறு மத்திய அரசிடம் இருந்து எனக்கு பதில் கிடைத்தது.

கட்டிடங்களை கட்டவும் தோட்டங்களை போடவும் தனியான துறையொன்றும், அதற்கென பணிப்பாளர் ஒருவரும் தேவையில்லைத்தானே!

***இலங்கை பூராவுமே சுதேச மருத்துவ துறைக்கென கொள்கை முறை உள்ள பொழுது ஏன் வடக்கு கிழக்குக்கு என தனியாக அவசியம் என்கிறீர்கள்?***

உண்மையிலும் வடக்கு கிழக்கில் நிலவும் சித்த ஆயுர்வேத வைத்தியம் சிங்களப் பகுதிகளில் நிலவும் சித்த ஆயுர்வேதப் பண்பாட்டில் இருந்து பிரித்தறியக் கூடிய தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளது. அவ்வாறே தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே நிலவும் சித்த ஆயுர்வேத வைத்திய முறைகளிலும் பிரித்தறியக் கூடிய தனித்துவமான அம்சங்கள் உள்ளன. இவற்றை வளர்க்க மத்திய அரசு ஒரு போதும் உதவி செய்யப்போவதில்லை.

***வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்து வதில் கூட மாகாண சபை அதிகாரிகளில் சிலர் மத்திய அரசுக்கு அடிவருடி மனப்பான்மையை காட்டி வருவதனால் மக்களுக்கு நன்மைகள் கிடைக்காமல் போகின்றன எனப் பரவலாக கருதப்படுகிறது. இத்தகைய தவறுகள் உங்களது துறையில் நிகழ்ந்துள்ளனவா?***

உங்கள் கூற்றில் ஓரளவுக்கு உண்மை உள்ளது. உதாரணமாக வடக்கு கிழக்கில் மிகக்கஷ்டமான காலங்கள் உள்ளடங்கலாக 7-8 வருடங்களாக வேலை செய்து வந்த சுதேச வைத்தியர்களை அரச சேவையில் உள்வாங்கி நிரந்தரமாக்கக் கூடிய வசதியும் அதிகாரங்களும் இருந்தும் அப்பொழுது இருந்த அதிகாரிகளின் அசண்டையீனத்தால் குறித்த அவ் வைத்தியர்கள் இன்று வேலை இழந்து இருக்கின்றனர். இது ஒரு மன்னிக்க முடியாத தவறும் அனைவரும் வெட்கப்பட வேண்டியதும் ஆகும்.

பிற்பாடு அந்த அதிகாரங்களும் பறிக்கப்பட்டு விட்டன.

***சித்த ஆயுர்வேதத்துறைப் பணிப்பாளர் என்ற வகையில் உங்கள் துறையில் நீங்கள் செய்து முடிக்கப்பட வேண்டும் எனக் கனவு காணும் அபிலாஷைகள் என்னென்ன உள்ளன?***

நிறையவே உள்ளன.

மிகப்பெரிய கனவு எங்களுக்கென சித்த ஆயுர்வேத மருத்துவ தொகுதி ஒன்றை நிறுவுவது. இதற்கென கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடுப் பிரதேசத்தில் 100 ஏக்கர் காணி இனம் காணப்பட்டுள்ளது. அதில் 10 ஏக்கர் மூலிகைத் தோட்டம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவைதவிர வடக்கு கிழக்கு மாகாணம் எங்கும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் மருந்தங்களை நிறுவ வேண்டும்.

சித்த ஆயுர்வேதம் தொடர்பான நூல்களை பதிப்பித்தல் சித்த ஆயுர்வேத முன்னோடிகள் பற்றிய தரவுகள் பதிவுகளை திரட்டுதல்.
இவைத்தவிர சித்த ஆயுர்வேத மருத்துவம் தொடர்பான அறிவை மக்களிடம் பரப்பவென கல்வியூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் சித்த ஆயுர்வேத மருந்துகளை தயாரிக்கும் தொழிற் சாலைகளை நிறுவுதல்.

சித்த ஆயுர்வேத மாணவர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கு சுதேச மருத்துவத் துறை வளர்ச்சி அடைந்துள்ள இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அராபிய நாடுகளுக்குச் சென்று புதிய அறிவுகளைப் பெற புலமைப்பரிசில்களை பெற்றுக் கொடுக்க வேண்டும் என என் கனவுகள் நீண்டு செல்கின்றன.

---

## இன முரண்பாடுகளும் ஊடகங்களும்!

இனங்களுக்கிடையே முரண்பாடுகளை வளர்ப்பதில் தொடர்பூடகங்கள் முக்கிய பங்காற்றி வந்துள்ளன. அதிலும் இந்தச் சின்னஞ் சிறு இலங்கையின் இனங்களுக்கிடையே முரண்பாடுகளை வளர்த்து, வன்முறைகளைத் தோற்றுவித்ததில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை அடிநாதமாகக் கொண்ட தொடர்பூடகங்கள் முன்னின்றுள்ளன.

இந்த முரண்பாடுகள் தொடர்பான ஆய்வொன்றினை கலாநிதி குமாரி ஜயவர்த்தனா மேற்கொண்டு அதனை நூலுருப்படுத்தியும் இருக்கிறார். 'இலங்கையின் இன, வர்க்க முரண்பாடுகள்' (Ethnic and class conflicts in Sri Lanka) என்ற தலைப்பில் அதனை தமிழுருப்படுத்தி நூலாக்கியும் உள்ளனர். 'இன உணர்வும் சிங்கள விழிப்பு நிலையும்' என்ற தலைப்பிலிருந்து 'இன உணர்வின் தொடர்ந்த நீடிப்பு..' எனும் 11ம் தலைப்பு வரை பல விடயங்கள் இங்கு ஆதாரங்களுடன் அலசப்பட்டிருக்கின்றன.



குமாரி ஜயவர்தனா

சிங்கள பௌத்த மேலாதிக்க உணர்வின் அன்றைய நிலை, அதற்கு ஊடகங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்தன என்பவற்றை வரலாற்று ரீதியாக நூல்மூலம் விளங்கிக்கொள்ள முடிந்த அதேவேளை, அந்த முரண்பாடுகளை இன்றைய ஊடகங்கள் எவ்வாறு வளர்க்கின்றன என்பதையும் நிதர்சனமாக அறியமுடிகிறது.

1883ம் ஆண்டளவில் கத்தோலிக்கர்களுக்கெதிராகத் தோன்றிய சிங்கள பௌத்த மேலாதிக்க உணர்வு 1915ல் முஸ்லிம்களுக்கெதிராகவும், பின்பு மலையாளத் தொழிலாளர்களுக்கெதிராகவும், அதன்பின் தமிழர்களுக்கெதிராகவும், இடையிடையே மொத்தச் சிறுபான்மையினருக்கெதிராகவுமென பெருவடிவமெடுத்துச் செல்கின்றது.

இதற்கு இன்றைய தமிழ் - சிங்கள இனமுரண்பாடு அழிக்கமுடியா சாட்சியாகும். அவ்வாறே அவ்வப்போது நடந்து வருகிற ஏனைய சிறுபான்மையினங்களுடனான முரண்பாடுகளும் வரலாற்றுச் சாட்சியங்களாகும்.

மிக அண்மைக்கால இனவர்க்க முரண்பாடுகளுக்கு முந்தைய காலத்தில் சிறுபான்மையினருக்கான எதிர்ப்புணர்வு நிலையை மேற்குறித்த நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

*''தூண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள், பௌத்தர்களைக் கதாநாயகர்களாகவும், கிறிஸ்தவரை வில்லன்களாகவும் கொண்ட நாவல்கள் என்பவற்றின் மூலம் கிறிஸ்தவருக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு வளர்க்கப்பட்டது. கிறிஸ்தவம் கேலிக்குள்ளானது, மிசனரிமார் கீழ்த்தர மூட நம்பிக்கைகளைக் கற்பிக்கும் எதிரிகளாகக் கூறப்பட்டனர். அத்துடன் அவர்கள் 'எமது தெருக்களில் நோய் பரப்பும் மூடப் போதகர்கள் எனவும் குற்றம் சாட்டப்பட்டனர்''.*

இன்னொரு சிறுபான்மையினமான முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாடு இவ்வாறு இருந்தது.

*''பிரித்தானியருக்கு ஜெர்மனியர் எவ்வாறோ சிங்களவருக்கு முஸ்லிம்கள் அவ்வாறே. முஹம்மதியர் சிங்களவருக்கு சமயத்தாலும், இனத்தாலும் மொழியாலும் அந்நியர்கள். பௌத்த சமயம் இல்லாவிடின் மரணமே சிங்களவர் வேண்டுவர். பிரித்தானிய உத்தியோகத்தர் சிங்களவரைச்சுடலாம், தூக்கிலிடலாம்; சிறைப்பிடிக்கலாம். ஆனால் எப்போதும் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பகைமை உறவே உள்ளது. அந்நியரால் தமக்கு இழைக்கப்படும் அவமானங்களை இனிமேலும் பொறுக்க முடியாது என்பதை 'அமைதி'மிக்க சிங்களவர் இறுதியில் உணர்ந்துவிட்டனர். முழுத்தேசமும் முஸ்லிம்களுக்கெதிராக எழுச்சியுற்றுவிட்ட இதற்குப் பொருளாதார ஆன்மீக ரீதியான காரணங்கள் இருந்தன.''*

இதை எழுதிப் பரப்பியவர் அனகாரிக தர்மபால. இவர் இந் நாட்டின் முக்கிய குடியானவராகப் போற்றப்படுகிறார்.

மேற்குறித்தவாறான வரலாற்றில் நிகழ்ந்த எதிர்ப்புணர்வுகள் தர்மபால குறிப்பிடுவது போல் முழுத்தேசமும் எழுச்சியுறுவதற்குத்துணை நின்றவை அன்றைய தொடர்புசாதனங்களே.

எவ்வாறு அன்று இன வர்க்க முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டதோ அதே முரண்பாடுகள், அதே விடயங்கள் நவீன ஊடகங்கள் மூலம் இன்று பரப்பப்படுகின்றன. அதாவது ஒரே 'கள்ளு', பாத்திரங்கள் வேறு. ஊடக வளர்ச்சிக்கேற்ப முரண்பாடுகளும் வளர்க்கப்படுகிறது.

இலங்கையின் அண்மைக்கால தொலைக்காட்சி, திரைப்பட, பத்திரிகைத் துறைகளில் இந்த ''முரண்பாட்டு வளர்ச்சி'' அதிக பாய்ச்சலில் நிற்கிறது. இது ஒட்டு மொத்தமாக சிங்கள பௌத்தரல்லாத ஏனைய சிறுபான்மையினரை குறியாகக் கொண்டிருக்கிறது.

இந்தத் தொடரின் மிக அண்மைய உதாரணம், 'வனவதுலஹி வசந்தய' என்ற சிங்களத் தொலைக்காட்சி நாடகம் முஸ்லிம்களுக்கெதிரான இன்னொரு சர்ச்சை மிகு வடிவம் என பரவலாக கண்டனத்திற்குள்ளாக்கியுள்ளது. இந்நாடகம் தொடர்பாக பல முஸ்லிம் அமைப்புக்கள், எம்.பிக்கள் என பலர் ஜனாதிபதியிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் வெகுஜனத் தொடர்பு அமைப்பும் இது தொடர்பாக ஜனாதிபதியின்

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 29

இப்படிச் சொல்லும் போது பெரிய குழந்தைகளும் சின்னக் குழந்தைகளும் ஒரே மாதிரி நடாத்தப்பட வேண்டும் என்று அர்த்தமில்லை. மாறாக, வயது, புதிய வசதிகளையும், புதிய பொறுப்புகளையும் கொண்டுவரத்தான் வேண்டும். வளர்ந்த குழந்தைக்கு , செலவுப் பணம் அதிகமாக இருப்பது, நேரம் செல்லப் படுக்க அனுமதிக்கப் படுவது, வீட்டுக்கு வெளியே சிறிய குழந்தையை விட அதிக நேரம் அனுமதிப்பது போன்றவை கிடைக்க வேண்டும். இந்த விடயங்கள் வெளிப்படையாகவும், சந்தோஷமாகவும் வழங்கப்பட வேண்டும். அப்போது தான் குழந்தைகள் தாம் விரைவாக வயதாக வேண்டும் என்று எதிர்பார்ப்புடன் இதனை ஏற்றுக் கொள்வார்கள்.

இளைய குழந்தை மூத்த சகோதரத்தின் மீது அதற்கு இருக்கும் விசேட சலுகைகள் காரணமாகப் பொறாமைப்படக் கூடும். அக் குழந்தையின் உணர்வுகளை தேற்றுவதில் நாம் உதவி செய்யலாம். இதனை உண்மைகளை நிலைநாட்டுவதன் மூலம் செய்வதல்ல மாறாக, அதன் உணர்வுகளைப்புரிந்து கொள்வதன் மூலமாக செய்யலாம்:

''உங்களுக்கு இரவில் நீண்ட நேரம் விழித்திருக்க விருப்பமாயிருக்கும், என்ன? ''

''பெரியவளாக இருந்தால் என்ன என்று இருக்கு என்ன?''

''உங்களுக்கு இப்ப ஆறு வயதுக்குப்பதில் ஒன்பதாக இருந்தால் எவ்வளவு நல்லது என்று நினைக்கிறீர்கள் என்ன?''

'' எனக்குத் தெரியும்...ஆனால் இப்ப உங்கடை படுக்கை நேரம் வந்து விட்டது..''

பெற்றோர்கள் சாதுரியம் அற்ற முறையில் நடப்பதன் மூலமாக குழந்தைகளிடையே பொறாமையை வளர்த்து விடுகிறார்கள். ஒரு குழந்தையை இன்னொரு குழந்தைக்காக தியாகம் செய்யுமாறு கோருவது இத்தகையதே.

''சின்னப் பிள்ளைக்கு உங்களது தொட்டிலை விட்டுக் கொடுங்கள். நீங்கள் சோபாவிலேயே தூங்கலாம்.''

''இந்த முறை உங்களுக்கு புதிய சறுக்கு வண்டி வாங்க முடியாது... சின்னப்பிள்ளைக்கு குளிர் காய உடுப்புகள் கொஞ்சம் வாங்க வேண்டும்.''

இதிலுள்ள ஆபத்து என்னவென்றால், குழந்தை ஒரு விதமான பாதிக்கப்பட்ட மன நிலைக்கு உள்ளாகின்றது என்பதுதான். இது வெறுமனே அந்தப் பொருள் கிடைக்காமல் அல்லது இல்லாமல் போவதால் மட்டுமல்ல, அப்பொருளை இன்னொருவருக்கு கொடுக்கச் சொல்லும் போது பெற்றோருக்கு உள்ள விருப்பம்- அந்த மற்றொருவர் மீதான அன்பும்- காரணமாகவும் எழுகின்றது. இத்தகைய ஒரு கோரிக்கை முன் வைக்கப்பட வேண்டுமானால் அவை பாராட்டு, அன்பு காட்டல் என்பவற்றுடன் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

சின்னப்பிள்ளைகள் தமது பொறாமையைத் தேர்ச்சி நயமற்ற விதத்தில் வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் இப்படிக் கேட்கக் கூடும்: (இப்போது பிறந்துள்ள) 'இந்தக் குழந்தை எப்போது சாகும்?' அல்லது, 'இதை எடுத்துப் போய் திரும்பவும் ஆஸ்பத்திரியிலுள்ள குப்பைத் தொட்டியில் வீசிவிடுவோம்' என்று பிரேரிக்கக் கூடும். வேறுசில தீவிரமான பிள்ளைகள், புதியவருக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளில் கூட இறங்கி விடுவதுண்டு. அவர்கள் புதிய குழந்தையை இரக்கமற்று துன்புறுத்தக்கூடும்: அவர்கள் ஒரு மலைப் பாம்பின் பாணியில் இறுக்கி அணைக்கக்கூடும், தள்ளிவிடுவது, குத்துவது, முஷ்டியால் இடிப்பது போன்ற தாக்குதல்களில் ஈடுபடக் கூடும். வேறுசில அதிதீவிரமான பிள்ளைகளின் பொறாமையானது மீளச் செல்ல முடியாத தாக்குதல்களைக் கூட மேற்கொள்ள வைத்து விடுகிறது.

பெற்றோர்கள் என்ற முறையில் நாம் தனது தம்பியையோ, தங்கையையோ ஒரு குழந்தை மிரட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. பிறரை துன்புறுத்துவதில் இன்பம் காணக் கூடிய நடவடிக்கைகள் அவை வாய் மொழி மட்டத்தில் இருந்தால் என்ன உடல் ரீதியானதாக இருந்தால் என்ன நாம் அனுமதிக்கக்கூடாது. ஏனென்றால் இது தாக்கப்படுபவரை மட்டும் அல்ல தாக்கியவரையும் பாதிக்கிறது. அத்துடன் இவ்விரு பிள்ளைகளுக்கும் எமது அரவணைப்பும் அதிகாரமும் தேவைப் படுகின்றன. அதேவேளை இவற்றில் சின்னப் பிள்ளையின் உடல்

டெக்டர் .ஜெயிம் ஜி ஜினோல்ட்- தமிழில்: அருண்

பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக நாம் பெரிய பிள்ளையின் உணர்வுப் பாதிப்பைத் தாக்க வேண்டிய அவசியமில்லை.

ஒரு மூன்று வயதுப்பிள்ளை தனது இளைய சகோதரனையோ, சகோதரியையோ தாக்கும் போது, அதனை நாம் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அதேவேளை அதன் முயற்சி என்னவென்பதை வெளிப் படையாகத் தெரிவிக்க வேண்டும்.

''உனக்கு அந்தக் குழந்தையைப் பிடிக்கவில்லை''

''உனக்கு அதன் மீது கோபம்''

''உனக்கு எவ்வளவு கோபம் எண்டு எனக்கு காட்டு பார்ப்போம்''

அந்தப்பிள்ளைக்கு ஒரு பெரிய பொம்மையைக் கொடுத்து அதன் கோபத்தை அப்பொம்மை மீது காட்டுமாறு கோர வேண்டும். அந்தப் பிள்ளை அந்தப் பொம்மையை அடிக்கலாம். அதன் கண்ணில் விரலால் குத்தலாம். அதை நிலத்தில் வீசிவிட்டு அதன் மேல் ஏறி நின்று குதிக்கலாம்.

நாம் அந்த பிள்ளைக்கு இதைச் செய் இதைச் செய்யக்கூடாது என்று சொல்லக் கூடாது.

எமது கடமையெல்லாம் ஒரு நடு நிலையான கண்ணுடனும் ஒரு ஆதரவான நோக்குடனும் நடப்பதை அவதானித்துக் கொண்ருடிப்பது மட்டுமே. நாம் அந்தப் பிள்ளையின் கோபத்தையிட்டோ அல்லது அது தாக்கும் விதத்தின் குரூரத்தையிட்டோ அதிர்ச்சி அடையக்கூடாது. இந்த உணர்வுகள் நேர்மையானவை. தாக்குதலும் ஆபத்தற்றது. பிள்ளை தனது கோபத்தை இவ்வாறு ஒரு கற்பித உருவத்தின்மீது குறியீட்டுவடிவத்தில் காட்டுவதன் மூலமாக வடிய விடுவது, நேரடியாக ஒரு உயிர் மீதோ அல்லது அறிகுறிகள் வடிவில் தன் மீதோ வெளிப் படுத்துவதை விடவும் எவ்வளவோ நல்லதாகும்.

எமது அபிப்பிராயங்கள் சுருக்கமாகவும் இலகுவானதாகவும் அமைய வேண்டும்.

''நீ எவ்வளவு கோபமாக இருக்கிறாய் என்பதை எனக்குக் காட்டுகிறாய்''

''இப்ப அம்மாவுக்குத் தெரியும்''

''உனக்கு கோபம் வரும்போது எனக்கு வந்து சொல்லு''

இத்தகைய அணுகுமுறை பொறாமையைக் குறைப்பதில் மிகவும் பயன்மிக்கதாகும். ஒரு தண்டனையையோ அல்லது அவமதிப்பதையோ விட இந்த அணுகுமுறை மிகவும் சிறந்ததாகும்.

பதிலாக பின்வரும் அணுகுமுறை பயன்படுத்தப்படுவது பயனற்ற ஒன்றாகும்:

தனது சின்னத்தம்பியை காலில் பிடித்த வால்ட்டன் என்ற நாலு வயதுப்பிள்ளை இழுத்துச் செல்வதைக் கண்ட தாயார் இவ்வாறு கத்தினாள். 'உனக்கு என்ன நடந்திட்டுது?' நீ அவனை என்ன செய்யப் போகிறாய். உன்ரை சொந்தத் தம்பியையே நீ கொல்லப் போகிறாயா? உனக்குத் தெரியாதா நீ உனது தம்பியை வாழ்நாள் பூராவும் முடமாக்கி விடுவாய் என்று?, உனக்கு அவன் நொண்டுவது விருப்பமா? எத்தனை தடவை உனக்கு சொல்லியிருக்கிறேன். தம்பியை அவன்ரை தொட்டிலிலிருந்து எடுக்காதே எண்டு. இனி நீ அவனிலை தொடக்கூடாது. ஒரு நாளும் தொடக்கூடாது.



## தாயின் நரகம்!

வளர்ந்த பிள்ளைகளையும் அவர்களது பொறாமை உணர்வுகள் குறித்து அக்கறையுடன் அணுக வேண்டும். இவர்களுடன் அதிகளவு வெளிப்படையாகப் பேசுவது சாத்தியமாகும்.

''அந்தக் குழந்தையை உனக்குப் பிடிக்கவில்லை என்பது தெளிவாகவே அறியக் கூடியதாக இருக்கிறது''

''அவன் இல்லாவிட்டால் நல்லது என்று நீ விரும்புகிறாய்''

''நீ நீ மட்டுமாகவே இருக்க வேண்டும் என்று விரும்புகிறாய்''

''உனக்கு நான் முழுக்க முழுக்க உன்னுடையவளாகவே இருப்பதையே நீ விரும்புகிறாய்''

''நான் அவனுடன் கூடுதலாகப் பேசுவதைக் காணும் போது உனக்குக் கோபம் வருகிறது''

''உனக்கு நான் உன்னோடு இருப்பதே விருப்பம்''

''உனக்குச் சரியான கோபம் அது தான். குழந்தையை அப்படி அடித்தாய். உன்னை இப்படி அடிக்க என்னால் அனுமதிக்க முடியாது. ஆனால் உனக்கு அப்படியான உணர்வு வரும்போது எனக்குச் சொல்லு...''

''நீ தனிமையாக இருக்கும் போது நான் அதிக நேரத்தை உனக்காக செலவளிப்பேன். அப்போது நீ தனிமையை உனக்குள் உணர மாட்டாய்''

### அன்பு - ஒரே மாதிரியானதா, தனித்தன்மை வாய்ந்ததா? தரசிறப்பானதா அல்லது சமத்துவமானதா?

எல்லாப் பிள்ளைகளுக்கும் அளவுக்கதிகமாக சமமாக இருககக விரும்பும் பெற்றோர் பெரும்பாலும் எல்லாப் பிள்ளைகளுடனும் எரிந்துவிழுவதிலேயே போய் முடிகின்றனர். அளவு செய்து வழங்கப்படும் நியாயத்தன்மையைப் போல தோல்வியில் முடிகிற விடயம் வேறொன்றுமில்லை. ஒரு தாய் தனது ஒரு குழந்தைக்கு ஒரு பெரிய அப்பிளையோ, அல்லது ஒரு இறுக்கமான அணைப்பையோ கொடுக்க முடியா விட்டால் அதைவிட நரகம் வேறில்லை. உணர்வுகளை வெளிப்படுத்தும் போது ஏதாவது ஒரு பொருளை கொடுக்கும் போது அதை சமமாக அளந்து கொடுக்க வேண்டும் என்பதற்காக எடுக்கும் முயற்சி யாரையும் களைப்புக்கும், கோபத்துக்கும் உள்ளாக்கிவிடும். குழந்தைகளும் சம அளவான அன்புக்காக ஒரு போதும் கொட்டாவி விடுவதில்லை, அவர்கள் தாம் தனித்துவமாக அன்பு காட்டப்பட வேண்டும் என்றே விரும்புகிறார்கள். சமமாக அல்ல. எமது அழுத்தம் தரத்தில் இருக்க வேண்டுமே ஒழிய சமத்துவத்தில் அல்ல!

நாம் எமது எல்லாக் குழந்தைகள் மீதும் ஒரே மாதிரியாக அன்பு கொள்வதில்லை. ஆகவே அப்படி இருப்பதாக நாம் நடிக்க வேண்டியதும் இல்லை. நாம் ஒவ்வொரு குழந்தை மீதும் தனித்துவமான அன்பைக் கொண்டிருக்கிறோம். அதை மறைப்பதற்கு நாம் கஷ்டப் படவேண்டியதில்லை. நாம் கவனமாக இருக்க வேண்டியதெல்லாம், பாராபட்சமாக இருப்பதைத் தவிர்ப்பதுதான்; சமத்துவமற்று தாம் நடத்தப்படுவதாக குழந்தைகள் நினைக்கும் வகையில் நடக்காதிருப்பது தான். விரும்பியோ விரும்பாமலோ தம்மிடம் ஒரேமாதிரியாக நடக்காதவர் என்ற குழந்தைககளின் உலகப் பொதுவான குற்றச்சாட்டிலிருந்து எம்மைத் தற்காத்துக்கொள்பவர்களாக நாம் இருக்க வேண்டியுள்ளது உண்மையே.

நாம் குழந்தைகளின் இந்தப் பிரச்சாரத்தால் பாதிக்கப்படாதிருப்போமாக. நாம் பிரச்சினைகளை பெரிதாக்கிக் கொள்ளவோ அல்லது ஏதுமறியாதவர்கள் என்று கூறிக் கொள்ளவோ அல்லது அவர்களது குற்றச்சாட்டுக்களை பிழை என நிரூபிக்க முயலவோ தேவையில்லை. இவ்வாறான, சமமாக நடத்துகிறார், நடத்தவில்லை என்ற அவர்களது முடிவே அற்ற விவாதங்களினால் அள்ளுப் படாமல் இருந்தாலே போதுமானது. அத்துடன் சமமான தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக எமது அன்பைப் பங்கிடும் பணியில் நாம் இறங்கவும் தேவையில்லை.

ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் எமது தனித்துவமான உறவைத் தெரிவிப்போம். நியாயத்தன்மையையோ அல்லது சமத்துவத்தையோ அல்ல.

எமது குழந்தைகளில் ஒன்றுடன் நாம் சில கணங்களையோ, மணிகளையோ செலவளிக்கும் போது அதை முழுதாகவே அதனுடன் செலவளிக்க வேண்டும். அந்த நேரத்தில் அந்தப்பிள்ளை தான், மட்டுமே எமது ஒரே குழந்தை என்று உணரட்டும். நாம் ஒரு குழந்தையுடன் வெளியே செல்லும் போது மற்ற குழந்தைகள் பற்றிய மன அலக்களிப்புகளுடன் இருக்காதிருப்போமாக, மற்றவர்கள் பற்றியப் பேசாதிருப்போமாக. அந்தக் கணம் ஞாபகத்திலிருக்கூடியதாக எமது கவனம் முற்று முழுதாக அந்தக் குழந்தையிடமே இருக்கட்டும். அது தான் மட்டுமே தமது பெற்றோரின் ஒரே குழந்தை என்ற உணர்வை அனுபவிக்கட்டும்.

அடுத்த இதழில்:

**குழந்தைகளின் பரபரப்புக்கான சில ஏதுக்கள்:**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 96ல் மட்டக்களப்பில் நாடகங்கள்: நம்பிக்கை தரும் கீற்றுக்கள்!

மட்டக்களப்பின் பௌதீக அமைப்பு, மட்டக்களப்பை படுவான்கரைப் பிரதேசம் எழுவான்கரைப்பிரதேசம் எனக்கூறுபடுத்தியது. பௌதீக ரீதியான இப்பகுப்பு இப்பிரதேசங்களின் சமூக பொருளாதார, அரசியல் அம்சங்களிலும் பெரும் மாற்றங்களைக் கொண்டுள்ளது. இப் பின்புலம் மட்டக்களப்பின் நாடக வளர்ச்சியிலும் இருவித போக்குகள் ஏற்பட வழிசமைத்துள்ளது.

1983 ஜூலைக் கலவரத்தின் பின்னர் தமிழ் மக்களின் வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இக்கட்டத்தில் ''வாழ்தல்'' என்பதில் பெரும்முரண்களை மக்கள் எதிர்கொள்கின்றனர். மக்கள் முன் பல விடயங்கள் கேள்விக்குள்ளாகியதுடன் வீரம் பொதிந்த இனமாகத் தங்களை வளர்த்தும் கொள்கின்றனர். வாழ்தலென்பது பல்வேறு முரண்களுக்கும் முகம் கொடுத்து எதிர்நீச்சல் போட்டு வாழ்வதேயெனவும் அர்த்தப் படுத்திக்கொள்கின்றனர். இதனால் வாழ்தலில் உறுதித் தன்மை ஏற்படுகின்றது.

இக்கட்டத்தில் பயில்நிலையில் இருந்த பாரம்பரியக் கலைகள் (கூத்து வடிவங்கள்) அளிக்கை செய்வதில் பல இடர்பாடுகள் உருவாகின்றது. இராணுவத்தினரின் பிரசன்னமும், அவர்களின் செயற்பாடுகளுமே இதற்கான முதன்மையான காரணங்களாக அமைகின்றன. இருந்தும் தங்களின் தேசியச் சொத்தான இக்கலை வடிவங்களை மேற்கொண்டு வளர்த்தெடுப்பதில் பல புதிய சிந்தனைப் போக்குகள் உருவாகின்றன. இது இக்கால சமூகத்தேவையின் நிர்ப்பந்தமாகவும் அமைகின்றது.

இக்கால அரங்க வடிவங்களுக்கு இம்மக்களின் சமூகத்தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் செயற்படவேண்டிய தேவை உருவாகின்றது. இந்நிலையில் இப்பின்னணியை விளங்கிக்கொண்டு குறித்த சமூகத் தேவைக்கேற்ப நாடகம் தயாரிக்க கலைஞர்கள் முன் வருகின்றனர்.

இருந்தும் இக்கட்டத்தில் நாடகத் தயாரிப்பில் இறங்கியவர்கள் மேற்கத்திய நவீன நாடக வடிவங்களில் பரிச்சயம் உடையவர்களாகவும் மட்டக்களப்பின் பாரம்பரிய அரங்க வடிவங்களில் பரிச்சயம் குறைந்தவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களில் இக்கால சமூகத்தேவை ஆழ ஒலித்த போதும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் நாடகங்களை அளிக்கை செய்வதில் பெரும்இடர்பாடுகளை எதிர்கொண்டனர். பிரச்சினையின் மையம் வடிவத்தையும் விடயத்தையும் ஒன்றிணைத்து குறித்த சமூகத் தேவைக்கு ஏற்ற விதத்தில் சமூகத்தைச் சென்றடைய வைப்பதிலேயே இருந்தது.

இதனால் தவிர்க்க முடியாத விதத்தில் இதற்கு முன்பு இருந்த மரபிலிருந்து விடுபட்டு புதியதொரு தளத்திலிருந்து நாடகம் வளர்ச்சியடைகின்றது. 1990களில் ஆரம்பித்த இப்போக்கு இன்று வரையும் தொடர்கின்றது. இப்பின்னணியில்தான் 1996ல் மேற்கொள்ளப்பட்ட அரங்கச் செயற்பாடுகள் நோக்கப்படவேண்டும்.

96இல் ''பாலசுகுமாரின் கருஞ்சுழி'' (Stylised Play), ''புழுவாய் பிறக்கினும்'' (Stylised Play) என்னுமிரு நாடகங்களும் எஸ். ஜெயசங்கரின் ''நிராகரிக்க முடியாத படி....'' (Neo Realistic Play), ''பிள்ளை அழுத கண்ணீர்'', ''ஊரான ஊர் இழந்தேன்'', ''சிறுபிள்ளை விளையாட்டு'' என்பனவும் கவிஞர் வாசுதேவனின் ''சிதைவு'' (Realised Play) எல். சிவரெட்ணத்தின் ''புதிய வாழ்வு'' (Stylised Play) நகுலேஸ்வரனின் ''வரண்ட சூழல் கலைகின்றது'' (Realitic Play) அலோசியேசின் ''கிழக்கு வானம்'' (Realitic Play) என்பன எழுவான் கரைப் பிரதேச அரங்கை அணி செய்தன.



இக்காலத்தில் நாடகத்தயாரிப்பில் இறங்கிய பாலசுகுமார், சிவரெட்ணம் என்போர் கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் நாடகப் பயில்நெறி மரபிலிருந்து உருவாகியவர்களாக இருப்பதால் விடுபட்டுப் போகமுடியாத விதத்தில் கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் தாக்கம் இவர்களின் நாடக அளிக்கையிலேற்பட்டு விடுகின்றது.

பாலசுகுமார் தன்னுடைய நாடகங்களின் மூலம் யுத்தத்தின் குரூரம், யுத்தத்தால் ஏற்படும் அவலம், சமாதானம், சகோதரத்துவம் என்பவற்றுக்கான தேவை என பல விடயங்களைப்புலப்படுத்தியிருந்தார். பாலசுகுமார் பாண்டிச்சேரியைச் சேர்ந்த வ. ஆறுமுகம் கணேசன் என்போரின் பிரதிக்கு அரங்க வடிவம் கொடுத்து இருந்தார். ''பார்வையாளன் நாடகத்தின் கரு மேடையில் பேசப்படும் வசனம் பாடல்கள், காட்டப்படும் குறியீடு நடிகர்களின் அசைவுகள் என்பனவற்றை புறநிலை யதார்த்தத்தை வைத்தே புரிந்து கொள்வான்'' எனக்குறிப்பிட்டு பாலசுகுமார் குறித்த சமூகச் சூழலை கருத்திற்கொண்டு நாடகத்தை தயாரித்தாரா என வினா எழுந்ததுடன் இப்பின்னணியில் அவரின் சமூக அக்கறையும் விமர்சிக்கப்பட்டது.


ஜெயசங்கர் ''நிராகரிக்க முடியாத படி'' நாடகத்தை இதுவரை காலமும் கொச்சைப்படுத்தி அர்த்தப்படுத்தப்பட்டு வழங்கி வந்த யதார்த்த பாணியிலான நாடகங்களுக்கு கோட்பாட்டு ரீதியான விளக்கம் தரும்வகையில் அளிக்கை செய்தார் என்றே குறிப்பிட வேண்டும். நாடகத்தின் கரு பெண்ணியம் தொடர்புடைய பிரச்சினையாகவே இருந்தது.

ஜெசங்கரின் 'ஊரான ஊர் இழந்தேன்' 'சிறுபிள்ளை விளையாட்டு' என்னும் இரு நாடகங்களும் முறையே The Village, Child's Play என்னும் நாடகங்களில் இருந்து தழுவலாக்கம் செய்யப்பட்டவை. மட்டக்களப்பின் அரங்க வளர்ச்சியில் தழுவலாக்க நாடக முயற்சிகள் இக்காலத்திலிருந்தே முனைப்புப் பெறுகின்றன. சிறு பிள்ளை விளையாட்டு அபத்த நாடகத்தின் (Absurd Play) சில பண்புகளைப் பிரதிபலித்தது.

'பிள்ளை அழுத கண்ணீர்' நாடகத்தை ஜெயசங்கர் சிறுவர் நாடகத்தின் பண்புகளை மனதில் பதித்து தயாரித்து இருந்தார். சிறுவர் நாடகத்தின் மூலம் சிறுவர்களின் ஆளுமை விருத்தியை வளர்க்கலாம் என்னும் நோக்குடையவர் அவர்.

நகுலேஸ்வரன், அலோசியஸ் என்போர் ஜெயசங்கரின் நாடகக் களப் பயிற்சி (Drama Works Shop) மூலம் உருவாகியவர்கள். இது அவர்களின் படைப்புகளில் உணரப்பட்டது.

'கருஞ்சுழி', 'சிதைவு' ஆகிய இரு நாடகங்களும் பாடசாலை மாணவர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாடகங்களாகும். யாழ்ப்பாண அரங்க வளர்ச்சியில் பாடசாலை நாடகங்கள் குறித்த ஒரு வளர்ச்சிக் கட்டத்தின் பின்னர் அவை கல்விசார் அரங்காக (Educational Theatre) வளர்ச்சியடைந்த நிலையைக் காணக் கூடியதாக இருந்தது. இதற்கு பல்கலைக்கழகம், பாடசாலைகள் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை என்பவற்றின் கூட்டு முயற்சி பயன்பட்டது. ஆனால் இங்கு சமூகப்பிரச்சினைகளைப் பாடசாலை நாடகங்களின் ஊடாகப்புலப்படுத்தும் போக்கு காணப்படுகின்றதே தவிர அவற்றை கல்விசார் அரங்காக வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை. ஆனால் இன்றைய சூழ்நிலையில் பாடசாலை நாடகத் தயாரிப்பாளர்கள் இவ்விடயத்தில் கவனம்செலுத்த வேண்டிய கட்டாய தேவையிருக்கின்றது.



எழுவான்கரைப் பிரதேசத்தில் இவ்வாறானதொரு போக்கு நிலவ படுவான்கரைப் பிரதேசத்தில் பாரம்பரிய சினிமாப் பாணி நாடக வடிவத்தைத் தாங்கி புதியதொரு போக்கு 1996ல் இருந்து முனைப்புப் பெறுகின்றது. இப்பின்னணியில் ''சோதனைச்சாவடி'', ''மாவீரர் குடும்பம்''. மாவீரனைப் பெற்ற தாய்'' என்னும் நாடகங்கள் அளிக்கை செய்யப்படுகின்றன. இந் நாடகங்களின் மூலம் தமிழ் மக்களின் தேசிய அரசியல் பிரச்சினை பேசப்பட்டதுடன் குறித்த சமூகத் தேவையையும் தாங்கி நின்றது.

படுவான்கரைப் பிரதேச அரங்கில் குறித்த சமூகத்தேவை பிரக்ஞை பூர்வமாக வெளிப்படுத்தப்பட்ட போதும் தங்களின் கருத்தைப் புலப்படுத்தக்க வடிவத்தை இந்நாடகங்கள் இணைத்துக் கொள்ளாமையால் இவை கலையாக்கம் பெறவில்லை. அதே நேரத்தில் எழுவான்கரைப் பிரதேசத்தில் இம்மக்களின் பிரச்சினையை அவர்கள் முன் கொண்டு செல்லத்தக்க பல நாடக வடிவங்கள் இருந்தன. இருந்தும் படுவான்கரைப் பிரதேசத்தில் விடயத்தை பிரக்ஞையுடன் கையாண்டளவிற்கு இங்கு கையாள இப்பகுதி சமூக அரசியல் இடமளிக்கவில்லை. இது விடயம் சார்ந்தும், வடிவம் சார்ந்தும் இருவிதமான வளர்ச்சியேற்பட வழியேற்படுத்தியது. இது மட்டக்களப்பின் அரங்கு எதிர்கொள்ளும் பெரும் சவாலாகும். இவ்வாறான வறட்சியில் இருந்து விடுவித்து மட்டக்களப்பின் அரங்கை முழுவீரியத்துடன் வளர்க்க வேண்டுமானால் அரங்கக் கருத்துக்களை மட்டக்களப்பின் சகல பகுதிக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

நாடகச் செயற்பாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் நாடக விமர்சனமும் வளர்ச்சியடைய முயற்சிக்கின்றது. சிவரெட்ணம், இன்பமோகன் மோசஸ் என்போரின் விமர்சனங்கள் சில சர்ச்சைகளைக் கிளப்புவதற்காகவும் நாடகம் சார் கருத்துக்களை ~~மக்கள்~~ மத்தியில் கொண்டு சேர்க்கத்தக்க விதத்திலும் அமைகின்றன. இருந்தும் மட்டக்களப்பின் நாடக வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இவை குழந்தைப் பருவத்தில் உள்ளதென்றே கணிப்பிட வேண்டியுள்ளது. இந்நிலை ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சிக்கே பொதுவானது.

இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நாடகப் பயிற்சி வகுப்புக்கள் நாடகத்திறனை வளர்ப்பதற்கு உரியதாக அமைந்தது என்பதைவிட இவை மக்களின் ஆளுமையை வளர்த்தெடுக்கத்தக்கதாகவும், விழிப்புணர்வை ஏற்படுத்தத்தக்கதாகவும் அமைகின்றன எனலாம். இது குறித்த கால சமூக தேவையின் வெளிப்பாடாகும். இப்பின்னணியில் கலாநிதி சி. மௌனகுரு, ஜெயசங்கர், பாலசுகுமார், சிவரெட்ணம் தவராஜா என்போரின் நாடகப் பயிற்சி வகுப்புக்கள் அமைகின்றன. சூரியா (பெண்கள் அபிவிருத்தி நிலையம்), பூவரசு (இலக்கிய அமைப்பு) போன்றனவும் இந்நோக்கில் நாடகப் பயிற்சி வகுப்புக்களைப் பயன்படுத்துகின்றன.

தேசிய கலை வடிவமான நாட்டுக் கூத்தினை மேற்கொண்டு வளர்ப்பதன் ஒரு பகுதியாக கூத்துடன் தொடர்புடைய சகல விடயத்தையும் ஒளிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து பேணும் முயற்சி 1997இல் நடந்தேறியது. இது பாரம்பரியத்தை அப்படியே பேணல் என்னும் நோக்கில் அமைந்து இருந்தது. இதற்கான செயல்நிகழ்வுகள் யாவும் 1996ம் ஆண்டு காலப்பகுதியில் கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் நெறிப்படுத்தலில் நடந்தேறியது. இச் செயற்பாடு மட்டக்களப்பு கூத்துக்களின் மேல் சகல மட்டத்தினரதும் பார்வை குவிய வழிசமைத்ததுடன் அதனை மேற்கொண்டு பேணுவதற்குரிய ஒரு பாதையையும் திறந்து விட்டது. இருந்தும் இச் செயற்பாடு குறித்த சமூகத்தேவைக்கேற்ற விதத்தில் கூத்தை வளர்த்தெடுக்கும் முயற்சியாக இருந்திருப்பின் இதன் சமூகப்பெறுமானம் உயர்வானதாக இருந்திருக்கும்.

இவைதவிர கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள், விரிவுரையாளர்களால் மட்டக்களப்பைக் களமாகக் கொண்டு பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பல அரங்க மூலங்கள் வெளிக்கொண்டு வரப்படுகின்றன. நாடக இலக்கியம், ஆய்வு கட்டுரை என பல படைப்பாக்க முயற்சிகள் இடம் பெறுகின்றன. நாடகம் சார் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், உலக நாடக விழா என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்றது.

இவை மட்டக்களப்பின் அரங்கியல் மரபைப்பேணுதல், குறித்த தளத்தில் இருந்து இன்றைய தேவைக்கு அரங்க வளர்ச்சியை முன்னெடுத்தல் என்பவற்றுக்கு வளம் சேர்ப்பனவாக இருந்தன.

இப்பின்னணியில் 1996இல் மேற்கொள்ளப்பட்ட அரங்கச் செயற்பாடுகளை நோக்கின் மட்டக்களப்பின் சமூக இயக்கத்தை விளங்கிக் கொண்டு அவ்வியக்கத்திற்கே அரங்க வளர்ச்சியை முன் எடுக்க முனைந்த போக்கையும் அரங்க இயக்கத்தை முன்னெடுக்க முனைந்தமையையும் காணக்கூடியதாக விருந்தது. இருந்தும் இவர்களின் செயற்பாடுகள் சமூக இயக்கத்துடன் முழுமையாக இணையாமையால் செயற்பாட்டில் பூரண திருப்தியை இவர்களால் அடைய முடியவில்லை.

○

வடிவேல் இன்பமோகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மகிந்தாவின் சாவு

அ.இரவி

மகிந்தா விறகு கொத்திக் கொண்டிருந்தான்.

பகலில் அவன் ஓய்ந்து போய் நான் பார்த்ததில்லை. சிவந்த தேகம். உருண்டையான உடல். கைகள், தோள்கள் யாவும் திட காத்திரமாகத் தெரிந்தன. சேர்ட் போடாத மேலில் வியர்வையின் மினுமினுப்பு கவர்ச்சியாக இருந்தது. வெத்திலை போட்டுச் சிவந்த வாய். அழகன் தான் அவன். நான் மனைவிக்கு யன்னலுக்குள்ளால் அவன் அழகைக் காட்டினேன்; புகழ்ந்தேன்.

''ஓகோ.. இப்ப ஆம்பிளைகளையும் ரசிக்க வெளிக்கிட்டியளோ?...' என்று நமட்டுப் புன்னகை விரித்தாள்.

நான் சொன்னேன், ''அழகை ரசிக்கிறதிலை ஆம்பிளையென்ன, பெம்பிளையென்ன?''

பெண்களை நான் நிறையவே ரசிப்பேன் என்பது என் மனைவிக்குத் தெரியும். சிங்களப் பெண்கள் நல்ல அழகிகள் என்பது எனது உயர்ந்த அபிப்பிராயம். ரோட்டில் போகிற வருகிற பெண்களை நான் மனைவிக்குக் காட்டுவேன். ''சா... என்ன வடிவு!''

அவள் சிரிப்பாள். நான் இப்படிச் சொல்வதை அவள் ரசிக்கிறாளோ என்னவோ தெரியாது. ஆனால் இந்த அழகுகளை எடுத்துக் காட்ட நான் பஞ்சிப்படவில்லை. மலையை, கடலை, மலர்களை, ஓடுகிற ஆற்றைப் புகழ்கிறோம். இவற்றிலும் மேலான அழகு மனிதர்களிடம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

மகிந்தாவின் தங்கை மாலினியும் அழகி தான். அதைப் பலமுறை என் மனைவிக்குக் கூறி விட்டேன். பிறகுதான் அவளும் மாலினியைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினாள். இப்போது அவளும் மாலினியின் ரசிகையாகி விட்டாள். அவள் அழகை என்னால் வர்ணிக்கத் தெரிய வில்லை. என் கண்களைப் பார்த்த மாத்திரத் திலேயே கவர்ந்து விட்டாள்.

என் பையன்களுக்குக்கூட நான் அதை எடுத்துக் கூறினேன்.

''மாலினி அக்கா நல்ல வடிவல்லவா?''

பையன்கள் என்னைப் பார்த்து வெட்கப்பட்டுச் சிரித்தார்கள்.

''டேய் பொடியள், அழகை ரசிப்பது நல்ல விசயமடா. பூவை மரத்திலிருந்து பிடுங்காமல் ரசிக்கிறதைப் போல, ஆரையும் பார்த்து ரசிக்கலாம். இதற்கு வெட்கபடாதேயுங்கோ. மாலினி அக்கா நல்ல வடிவல்லோ?...''

''ஓம். நல்ல வடிவுதான்...'' என்று இன்னும் வெட்கப்பட்டுச் சிரித்தார்கள். ஒகே. நல்லது தான். இவர்கள் மனதில் அழகுணர்ச்சி இருக்கட்டும். அழகுணர்ச்சியே வாழ்வாக அமைய நான் ஆசைப்பட்டேன்.

மகிந்தாவின் வீட்டில் தான் நாங்கள் இருந்தோம். வாடகை வீடு. இரண்டு அறை. சிறு ஹோல். குசினி. பாத்ரூம். வீட்டின் முன்னால் விறகு காலை. அதுவும் மகிந்தாவினுடையது தான். மகிந்தாவிற்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. என் வயது ஒத்தவன் தான் அவனும். எனக்கு இரண்டு பையன்கள்.

மகிந்தாவின் குடும்பம் இரத்மலானையில் இருந்தது. மகிந்தா விறகு காலையுடன் இருந்த சிறு அறையில் தங்கினான். அவனுடன் நாவலப்பிட்டியில் இருந்து வந்த ராஜாவும் தங்கினான்.

பகல் முழுவதும் இருவரும் விறகு கொத்துவார்கள். பின்னேரம் கொத்திய விறகை சிறிய வண்டியில் இருவருமாகச் சேர்ந்து தள்ளிக் கொண்டு போய் சாப்பாட்டுக் கடைக்குக் கொடுப்பார்கள்.

திரும்பி வருகிற போது அரைப் போத்தல் சாராயமும், பிளேன் சோடாவும், கடலைப் பைக்கெற்றும் கையிலுள்ள பையில் இருக்கும்.

பிறகு குளித்து விட்டு வந்து உடல் அலுப்புத் தீர சாராயத்தைக் குடிப்பார்கள். ரசித்து ஒவ்வொரு சொட்டாக அருந்துவார்கள். குடித்த கொறிப்புக்கு வீட்டின் முற்றத்திலிருந்து அப்பா அம்மாவுடன் கதையளப்பார்கள். அப்பா முன்னர் உழைத்த காலங்களில் சிங்கள நாடுகளில் வசித்தார்.

கதை முடியப் போய்ச் சாப்பிடுவார்கள் மகிந்தாவின் வீட்டிலிருந்து இரு நேரச் சாப்பாடு வரும்.

கல்கிசையில் தான் எங்கள் வீடு. பஸ் ஸ்ராண்டில் இறங்கி ஸ்டேசன் ரோட்டால் வர போஸ்ட் ஒபீஸ். அதன் முன் இறங்குகிற சிறிய வீதியில் 25ம் இலக்க வீட்டில் வசித்தோம்.

போஸ்ட் ஒபீஸின் முன்னால் ஞாயிற்றுக்கிழமை சந்தை கூடும். சந்தையில் அரிசி, தேங்காய், மரக்கறி, மீன் கொஞ்சம் மலிவு. ஒரு கிழமைக் குரியதை வாங்கி வைக்கலாம்.

மதியம் சமைத்துச் சாப்பிட்டு, கொஞ்ச நேரம் கட்டையைச் சரித்து அன்றைய வார வெளி யீட்டை வாசித்து விட்டு, 4மணிக்கு எழும்பி தேனீர் குடித்து, பிறகு மனைவியுடனும், பையன்களுடனும், கிரிக்கெட் மட்டையையும் தூக்கிக் கொண்டு பார்க்கிற்குப் போய் கொஞ்ச நேரம் விளையாடுவோம்.

பெரியவன் மூன்று நான்கு தரம் அவுட் ஆனதன் பிறகு தான், தான் அவுட் என்பதை ஒப்புக் கொள்வான். ஆகவே தொடர்ந்து பந்தை வீசுவது என் பொறுப்பு. சின்னவன் சிணுங்கிக் கொண்டிருப்பான். பெரியவன் அடிக்கக் கூடியதாக பந்தைப் போட்டால் விசுக்குவான். சின்னவன் ஓடாமல் சிணுங்குவான். நான் தான் ஓடவேண்டும். அடிக்க முடியாமல் பந்தைப் போட்டாலோ பெரியவன் மட்டையை வீசிவிட்டு குந்தியிருந்து குலுங்குவான். இருவரையும் சமாளித்து கிரிக்கெட் விளையாட நான் படும் பாடு நாய் படாப் பாடு!

மனைவிக்கென்ன பெற்றுப் போட்டவுடன் தன் கடமை முடிந்தது என்று கடலை ரசிக்கப் போய் விடுவாள்.

பார்க் உயரத்தில் இருந்தது. சற்று எட்டிப் பார்த்தால் கீழே தண்டவாளம். நெடுநீள ஓடி இருந்தது. ஞாயிற்றுக்கிழமை என்றால் ரயில் குறைவு தான். படபடத்து அது ஓடிவந்து, நிலையத்தில் பெருமூச்சு விட்டு நிற்கும். பிறகு மூச்சிழுத்து அது ஓடத் தொடங்கும்.

தண்டவாளம் தாண்ட, நுரை கக்கிப் பாய்ந்து வரும் கடல் அலைகள். தூரத்தில் கப்பல்கள்.

காற்று ஓங்காரித்து வீசும்.

இவற்றை ரசிக்க எனக்கும் ஆசை தான். எனினும் பையன்களுடன் விளையாடியே தீர வேண்டும்.

இருள, சுள் விளக்கு கொழுத்தி வைத்திருக்கிற சுண்டல்காரனிடம் நாலுபக்கெற் சுண்டல் வாங்கி நால்வரும் கொறித்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தால், இராச் சமையல், சாப்பாடு படுக்கை... ஞாயிற்றுக்கிழமை இரவு அவளுடையது!

பிறகு திங்களாச்சு, எங்கள் வேலையாச்சு! காலையில் எழுந்து சமைத்து, பையன்களை எழுப்பி, வெளிக்கிடுத்தி, நாங்கள் வெளிக் கிட்டு சனம் நிரம்பி வழிகிற பஸ்களில் தொத்தி, நெரிபட்டு, பாடசாலைக்குச் சென்றால்... அந்தக் கிழமை முழுவதும் அதே வேலை...

வேலையோடு வேலையாகக் களைத்த ஒரு பொழுதில் மகிந்தா இறந்த செய்தி எங்களுக்குத் தெரிந்தது. மகிந்தாவின் சாவு அவலச் சாவு. மகிந்தா செத்திருந்த போது அவன் முகத்தில் தாடி முளைத்திருந்தது.

அப்போது நான் தாடி வளர்த்துக் கொண்டு திரிந்தேன். மகிந்தா விறகு கொத்துவதை நிறுத்திவிட்டு ஒரு நாள் கேட்டான். ''ஏன் மாஸ்ரர் தாடி வளர்க்கிறீர்கள்?''

''நான் தண்ணீர் ஊற்றி வளர்க்கவில்லை. அது தானாக வளருகிறது'' என்று பகிடி விட முயன்றேன்.

மகிந்தா சீரியஸாகச் சொன்னான். மாஸ்ரர், உங்களுடைய நன்மைக்காகச் சொல்கிறேன். தாடியை வெட்டுங்கோ...''

''ஏன்...?''

''இங்குள்ளவர்கள் உங்களைப் புலி என்று சொல்வார்கள்...''

''புலிக்கும் தாடிக்கும் என்ன சம்பந்தம்?'' என்று நான் கேட்டேன். அத்துடன் அவன் 'சிங்கம்' சார்பாகக் கதைக்கிறானோ என்றும் நான் ஐமிச்சப்பட்டேன்.

''இல்லை மாஸ்ரர், உங்களுக்கு இவர்களைத் தெரியாது. 89ஆம் ஆண்டு, நானும் தாடி வளர்த்திருந்தேன். ஒரு நாள் மலிபன் சந்தியைக் கடந்து நான் நடந்து போய்க் கொண்டிருந்த போது, எதிராக வந்த பச்சை வான் ஓரத்தில் வந்து நின்றது. அதிலிருந்து ஒருவன் இறங்கி என்னைக் கூப்பிட்டான். வானில் ஏறச் சொன்னான். நான் ஒன்றும் பேசாது நின்றேன். அவன் பிஸ்ரலை எடுத்துக் காட்டினான். ஏறினேன். உள்ளே இன்னும் நான்கு பேர் இருந்தார்கள். அவர்கள் முகத்தில் தாடி இருந்தது. ஓ.கோ. எனக்கு விளங்கி விட்டது.

ஆற்றில் மிதக்கிற சடலங்களின் அர்த்தம் புரியத் தொடங்கியது. வீதி ஓரங்களில் ரயர் போட்டு எரிபடுபவர்கள் யார் என்பது எனக்குத் தெரிந்தது. வீதியில் இன்னொரு தாடிக்காரன் தெரிந்தான். வான் அவனையும் கூப்பிட ஒதுங்கியது. எனக்குத் தெரியும் இதில் தப்பா விட்டால் மரணம். எப்படி வேகம் வந்ததோ தெரியாது. வானிலிருந்து குதித்து இடையில் வந்த குறுக்குப் பாதையில் ஓடத் தொடங் கினேன். என் வேகம் எனக்கே தெரியாது. சூடு விழுந்தால் விழட்டும் என்று நினைத்துக் கொண்டு ஓடினேன். மதிலேறிப் பாய்ந்து புகையிரத நிலையத்தைக் கடந்து ஓடினேன். அப்போது நான் தப்பிவிட்டேன். அன்றைக்கே தாடி மீசை எல்லாம் வழித்தேன். மொறட்டு வையில் மாமா வீட்டுக்குச் சென்றேன். அடுத்த நாள் ராவத்தைச் சந்தியில் இரண்டு பேரின் சடலம் எரியுண்டு கிடப்பதாகத் தகவல் வந்தது. பயந்து கொண்டு தான் போய் பார்த்தேன். கால்கள் நன்றாக எரியவில்லை. முகம் தான் கருகிக் கிடந்தது. ஆனால் நான்கு கால்களில் ஒரு கால் வானில் பார்த்த கால். எனக்கு நன்றாகத் தெரியும். வான் மெதுவாக ஓடுகிற போது நான் குனிந்தபடி தான் இருந்தேன். ஒருவருடைய காலின் பெருவிரல் நகத்தில் அரைப்பகுதி இல்லாதிருந்தது. அதே காலில் சின்ன விரல் சப்பளிந்து வளைந்து இருந்தது. அதேகால் இங்கு எரிந்தபடி கிடக்கிறது. அன்றைக்கு நான் மரணமாகாமல் தப்பினேன்...''

பெருமூச்சு விட்டான் மகிந்தா.

''நான் சொல்கிறேன். மாஸ்ரர். நீங்கள் தாடியை வெட்டுங்கோ...'

நான் அஞ்சவில்லை, என்றாலும், மகிந்தாவிற்கு மரியாதை கொடுக்க சலூனுக்கு சென்று மீசையை வைத்து தாடியை மழித்தேன். 'சதோச' சென்று ஷேவிங் செற் வாங்கினேன்.

மகிந்தா, ''இப்போதுதான் அழகாக இருக் கிறது..'' என்றான். பிறகு சீரியஸாகச் சொன் னான். ''மாஸ்ரர், இவர்களைப் பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரியும். முன்னர் நாங்கள், தமிழர் வீணாகச் சண்டை செய்து அழிகிறார்களே, பேசாமல் இருக்கலாமே என்று தான் யோசித்தோம். ஆனால் 89ஆம் ஆண்டு, எங்களுடைய ஆட்களை இவர்கள் அழித்த போதுதான் தங்களுடைய இனத்தையே இப்படி அழித்தவர்கள் தமிழர்களை எப்படி அழிப் பார்கள் என்று நினைக்கத் தொடங்கினோம். இவர்களுக்குப் புலிகள் தான் சரி...'' என்றான்.

நான் ஒன்றும் பறையவில்லை. ஒரு கருத்தும் சொல்ல நான் துணியவில்லை. மௌனமா னேன்.

''மாஸ்ரர், நீங்கள் பயப்படத் தேவையில்லை. நீங்கள் எங்களை நம்பி வந்தவர்கள். எங்கள் உயிர் போனாலும் உங்களை நாங்கள் காப்பாற்றுவோம். உங்களுக்கு என்ன பிரச்சினை என்றாலும் எங்களுக்கு நீங்கள் சொல்லுங்கள்'' என்று மகிந்தா பிறகு கூறினான்.

எதற்காக மகிந்தா இதைக் கூறுகிறான் என்று சந்தேகப்பட்டேன். மகிந்தாவின் முகம் சிவந்திருந்தது. அப்போது அவன் சாடையாகக் குடித்திருந்தான் என நினைக்கிறேன்.


ஆனால் அவன் பகலில் குடிக்க மாட்டானே?

நான் சந்தேகப்பட்டிருக்கத் தேவையில்லை. மகிந்தா அவ்வாறு கூறி ஒரு வாரத்திற்குள் ளேயே டென்சில் கொப்பேகடுவவும், வேறு சில இராணுவ அதிகாரிகளும் ஒரு கண்ணி வெடியில் உடல் சிதைந்தார்கள்.

அப்போது நாம் இருந்த பகுதி சிறிது கொந்தளிக்கத் தொடங்கியது. நான் வெளியில் ஒன்றுக்கும் போகவில்லை. தமிழர்கள் மெதுவாக வீடுகளுக்குள் அடங்கிக் கிடந்தார்கள். சிறிது தள்ளி தமிழர்களின் சலூன் ஒன்று எரிக்கப்பட்டது.

இரவு வெளியே லைற் போடவில்லை. கதவு களையும், யன்னல்களையும் பூட்டி உள்ளே லைற் எரிய வைத்தோம். ஒரே புழுக்கமாக இருந்தது. பையன்களுக்கு சூழலின் பயத்தை வெளிக் காட்டவில்லை. நான் குதூகலமாக இருக்கிறேன் என்பது போல நடித்தேன். ஆயினும் என் குதூகலம் அடங்கித் தான் வெளிவந்தது.

பிஞ்சு மனங்களைப் பாதிக்க நான் விரும்ப வில்லை. ஆனால் எது எவ்வாறோ இந்தத் தேசம், பிஞ்சு மனங்களை சிதைத்தவாறே இருக்கின்றது.



→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராச்சாப்பாடு ஆயிற்று. நித்திரை கொள்கிற நேரம். இரவின் மௌனத்தைக் குலைக்க, ஒரு கல்லொன்று எங்கள் வீட்டுக் கூரையில் வந்து விழுந்தது. பிறகு சடசடவென வெளிக் கதவிலும், யன்னல்களிலும் கற்கள் பறந்து வந்து விழுந்தன. யன்னல் கண்ணாடிகள் உடைந்து, நொறுங்கி, சிலுசிலுக்கிற சத்தம். நாங்கள் வீட்டிற்குள் இருந்த லைற்றையும் நூர்த்தோம்.

என் பையன்கள் எனக்குள் வந்து ஒடுங்கிப் போய் இருந்தார்கள்.

''யார் அவன்?'' என்று மகிந்தா விறகு காலையிலிருந்து குதித்தான். பையன்களை அரக்கி, உடைந்த யன்னலால் நான் எட்டிப் பார்த்தேன். வீதி விளக்கின் வெளிச்சத்தில், மகிந்தா ஒருவனின் சட்டைக் கொலரை இறுகப் பற்றி, முகத்தில் குத்துவது தெரிந்தது. கல்லெறிந் தவனும் யார் என்பது விளங்கி விட்டது.

எங்களுக்குக் கடிதம் தருகிற பியோன். ஒருநாள் மாலையில் கசிப்புக் குடிக்க அவன் என்னிடம் ஐம்பது ரூபா கேட்டான். மகிந்தா கொடுக்க வேண்டாம் என்றான். நான் கொடுக்கவில்லை. அதன் பிறகு எங்களுக்கு வருகிற கடிதங்கள் பாதியாகக் குறைந்தன.

அவன் இப்போது மகிந்தாவின் கொத்துப் பிடியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தான். மகிந்தா ஏசினான். ''உனக்கு விருப்பமென்றால் யாழ்ப்பாணத்துக்குப் போய் புலிகளுடன் சண்டைபிடி. வேண்டுமென்றால் நாளைக்குப் போய் இராணுவத்தில் சேர். இங்கு அப்பாவி களைத் துன்புறுத்தாதே. இனி இந்தக் குழப்படி விட்டால்,உன்னைக் கொன்று போடுவேன்''

பிறகும் மகிந்தா பியோனின் முகத்தில் குத்தினான்.

யன்னல் உடைந்திருந்ததால் காற்று உள்ளே வந்து புழுக்கத்தைக் குறைத்தது.

மகிந்தா வந்து கதவைத் தட்டி ''நான் இருக்கிறேன். நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்.'' என்று கூறி முற்றத்தில் கயிற்றுக் கட்டில் போட்டுப் படுத்தான்.

மகிந்தா அடுத்த நாள் இரவு தான், அப்பா விற்கும் அம்மாவிற்கும் முற்றத்தில் இருந்து தன் கஷ்டத்தைக் கூறினான். அம்மா இரவு வேதனை படர எனக்கு மகிந்தாவின் கதை கூறினார்.

மகிந்தா வீட்டின் மூத்தவன். பின்னால் நான்கு சகோதரிகள். நாங்கள் இருந்த வீட்டில் தான் அப்போது அவர்கள் இருந்தார்கள். விறகு காலையில் கிடைக்கிற வருமானமே சீவியம். மூத்த சகோதரிக்கு திருமணம் செய்த பிறகுதான் அந்த அனர்த்தமே நிகழ்ந்தது.

மகிந்தாவின் தந்தை கல்கிசைச் சந்தியில் பஸ் அடித்துச் செத்தார். மகிந்தாவின் தலையில் பொறுப்பு விழுந்தது.

அதுவரை விடலையாக ஊர் உலாத்தித் திரிந்த மகிந்தா, மூன்று சகோதரிகளைக் கரை சேர்க்க, குடும்பத்தின் வயிற்றுப்பாட்டைப் பார்க்க படாத பாடு பட்டான்.

''அப்பா இப்படிச் சாவார் என்றால் நான் காதலித்திருக்க மாட்டேன்.'' என்று மகிந்தா கூறினான். கூறி, மனமும் கலங்கினான்.

மகிந்தா காதலிக்கிற பெண் இடையிடை விறகு காலைக்கு வந்தாள் என்று அம்மா கூறினார். அழகி என்றுதான் அம்மா கூறினார்.

என் மனைவி, ''வடிவுதான். எண்டாலும் மகிந்தாவின் வடிவிற்கு வராது...'' என்றாள்.

''மகிந்தாவின் நிறத்திற்கு வராது'' என்று அம்மா மேலும் ஒரு வரி சேர்த்தார்.

மகிந்தாவின் சுமையில் அரைப் பங்கை ராஜா சுமக்கிறான் என்பது எனக்கு நன்கு தெரிந்தது. மகிந்தாவும், ராஜாவும் கதைத்துச் சிரித்து விறகு கொத்திக் கொண்டே இருந்தார்கள்.

சிங்களவரே என்று நம்பக் கூடிய ராஜாவும், ஜனாதிபதி பிரேமதாச குண்டு பட்டுச் சிதறிச் சரிந்த போது விறகு காலைக்குள் ஒளிந்திருந் தான். அப்போதும் ஒருக்கால் எங்கள் பகுதி கொந்தளிப்புக்குள்ளானது.

காற்றிலும் மிகுந்த அச்சம் பரவியது.

ஆறு நாட்கள் நரக அமைதி தான் காத்தோம். முற்றத்தில் கயிற்றுக் கட்டில் போட்டுப் படுக்க மகிந்தாவால் முடியவில்லை. மழை சிணுங்கிக் கொண்டிருந்தது. எனவே உள் ஹோலில் மகிந்தா படுத்தான். ஓரளவு பயம் நீங்கியது. மற்றும் வீதியில் இராணுவமும் சுற்றித் திரிந்தது.

இம்முறை வீட்டிற்குக் கல்லெறி விழவில்லை. பியோன் அடக்கமாக இருந்தான். வேறு சிலரும் கூடத் துணியவில்லை. மகிந்தா பியோனிற்கு அடித்த கதை அவ்விடத்தில் பிரசித்தமாக இருந்தது.

அப்போதுகளில் அயலில் இருந்த ரோகினியும் எங்களுக்கு உதவி என்று தான் நான் கூறுவேன். புருசன் இறந்து விட்டார். ரோகினி தாயுடனும் தன் மகன், மகளுடனும் அவ்விடத்தில் வசித்தார். ரோகினி அந்த ஆறு நாட்களிலும் மரக்கறி, அரிசி வாங்கிக்கொண்டு வந்து தந்தார். அஞ்ச வேண்டாம் என்று அடிக்கடி கூறினார்.

அம்மாவிடம் எல்லோரையும் அணைத்துப் போகிற போக்கு இருந்தது. அது இப்போது ரோகினியால் வெளிப்பட்டது.

அம்மா தோசை சுட்டால், பின்னேரத்தில் வடை சுட்டால் ரோகினி வீட்டிற்கு ஒரு பெட்டி போகும். மகிந்தாவிற்கும் ராஜாவிற்கும் ஒரு பெட்டி போகும் என்பதை இவ்விடத்தில் நான் சொல்லத் தேவையில்லை.

தைப்பொங்கலுக்கு அயல் வீடுகள் யாவற்றுக் கும் பொங்கலும், வடையும், மோதகமும் அம்மா கொடுத்தார். பொன்சேகா மாத்திரம் அம்மா அனுப்பிய பெட்டியை அப்படியே திருப்பி அனுப்பினார். ''நாங்கள் இவைகளைச் சாப்பிடுவதில்லை'' என்றார்.

பொன்சேகா படித்தவர். வெள்ளை வேட்டி வெள்ளை நாசனலோடு காட்சி அளிப்பார்.



எங்கள் உறவை அவர் விரும்பியதில்லை என்பதை நாங்கள் அறிவோம். ஒரு போதும் அவர் எங்களை பார்த்து முறைத்ததே இல்லையென்றாலும் அறிமுகப் புன்னகையை யும் அவர் வெளிக்காட்டியதில்லை.

ஆனால் இப்படித் திருப்பி அனுப்புவார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

''தமிழர்களை நம்ப இயலாது. நஞ்சு வைத்தும் தருவார்கள்'' என்று பொன்சேகா கூறியதாக மகிந்தா கவலைப்பட்டு அம்மாவிற்குக் கூறினான். அப்போது மகிந்தாவின் முகத்தில் வேதனை அப்பிக் கிடந்தது.

ரோகினி இதனைக் கேள்விப்பட்டு மிகுந்த ஆத்திரம் கொண்டார். ''இவர்களால் தான் இந்த நாடு உருப்படாமல் போகிறது. தமிழரும், சிங்களவர்களும் சகோதரர்களாக எவ்வளவு ஒற்றுமையாக வாழலாம்'' என்று ரோகினி வெந்து வடிந்தார்.

இந்த யுத்தம் தொடர்வது பற்றியும் ரோகினி எப்போதும் ஆத்திரப்பட்டுக் கொண்டேயிருப் பார். ''எவ்வளவு சனம் வீணாகச் சாகிறது''

சில நேரங்களில் தான், ரோகினியின் முகத்தைப் பார்க்க முடியாத படி நாங்கள் தடுமாறினோம்.

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து அம்புலன்ஸ்கள் காயம் பட்ட இராணுவத்தி னரை ஏற்றி, சைரன் அடித்தபடி பறக்கும். அப்போது ரோகினியின் முகம் கறுத்தபடியே இருக்கும். நாங்கள் முகத்தை எப்படி வைப்பது என்று தெரியாமல் முழிப்போம். எங்கள் முகத்தை ரோகினி ஆராய்கிறாரோ என்று கூட நான் சந்தேகப்பட்டேன்.

மகிந்தா, ஒற்றை வரியில் ''தேவையில்லாமல் சாகிறார்கள்'' என்பான். ''இவர்களை யார் யுத்தம் செய்யப் போகச் சொன்னது?'' என்று ஒற்றை வினாவுடன் முடிப்பான்.

ரோகினியால் இவ்வாறு கூறமுடியவில்லை. அவர் தாயாக இருக்கிறார்.

தன் முலையால் பால் பருக்கி, தாலாட்டுப்பாடி, மடியில் தூங்க வைத்த குழந்தைகள் இன்று ஒரு குண்டில் மாய்வதென்றால், தாய் மன்துக்கு அது பொறுக்காது. ரோகினி தன் மகனை நினைத் திருப்பார்.

கண் பிதுங்கி, உடல் சிதறி, இரத்தக் குழம்பாக, வயிறு பிளந்து...

எந்தத் தாயால் அதனைக் கற்பனை பண்ண முடியும்?

இவ்வாறு தான் ஒரு சனிக்கிழமை காலையில் நான் வீட்டில் ஓய்ந்திருந்தேன். ஒரு கிழவி மகிந்தாவிடம் வந்தார். மகிந்தா என்னைக் கூப்பிட்டான்.

பூநகரி இராணுவ முகாமை புலிகள் அப்போது தாக்கிக் கொண்டிருந்த நேரம்.

விறகு காலைக்குப் போனான். கிழவி குந்திக் கொண்டிருந்தார். அந்த முகம் ஆயிரம் சோகத்தைச் சுமந்திருந்தது.

மகிந்தா சொன்னான். ''இவரின் மகன் இராணுவத்தில் இருக்கிறான். யாழ்ப்பாணத்தில் தான் அவனின் இராணுவ முகாம். இப்போது பூநகரியில் சண்டை நடக்கிறது தானே? இவரின் மகன் அங்கு தானோ என்று பயப்படுகிறார். மகன் இருக்கின்ற முகாமின் பெயரும் இவருக்கு ஞாபகமில்லை. அதுதான் உங்களிடம் கேட்பதற்கு வந்தார்...''

நான் கிழவியை பார்த்தேன். பார்க்கிற முகமாக அது இல்லை.

''தம்பி, யாழ்ப்பாண நகரத்தில் இருந்து பத்து மைல் போகவேண்டும். இடையில் கடலைக் கடந்து தான் போகவேண்டும். அந்த இராணுவ முகாமில்தான் எனது மகன் இருக்கிறான். அந்த முகாமின் பெயர் தெரியுமா?'' அக்கிழவி தடுமாறித்தான் கதைத்தாள்.

அவருக்கு கிழவிக்குரிய வயதல்ல. அது முகத்தில் தெரிந்தது. வறுமையும், இயலாமை யும், வேதனையும் அவரைக் கிழவியாக்கியது.

நான் பலவாறு யோசித்துப்பார்த்தேன். யாழ்ப்பாணத்திலிருந்து கடல் கடந்தால் வருவது மண்டைத்தீவு இராணுவ முகாம்தான். ஆனால் பத்து மைல் வராது. மூன்று மைல் இருக்கலாம். வேறு?

யாழ்ப்பாணத்திலிருந்து பத்துமைல் தொலைவில் கடல் தாண்டி வருகிற ஒரே இராணுவ முகாம் பூநகரி தான்.

இதனை என்னவென்று இக்கிழவிக்குச் சொல்வது?

புலிகள் மிக உக்கிரமாகப் பூநகரி மீது தாக்குதல் தொடுக்கிறார்கள். காலிவீதியில் ஒவ்வொரு நாளும் ஒரு மணித்தியாலத்திற்கு ஒருக்கா லாவது ஒன்றன் பின் ஒன்றாக அம்புலன்ஸ்கள் அலறிக் கொண்டு பறக்கின்றன. சிங்களவர் களின் முகம் இருண்டு போய்க் காணப் படுகிறது.

கல்கிசைச் சந்தியிலுள்ள சவப்பெட்டிக் கடைகளில் இராணுவ ட்ரக்கில் வந்து நிறைய சவப்பெட்டிகளைக் காவிச் செல்கிறார்கள். இராணுவ ட்ரக்கை எட்டிப் பார்த்த மகிந்தா நிறையச் சவங்கள் குவிந்து கிடப்பதாகக் கூறுகிறான். பதட்டமும் வேதனையும் படர சிங்கள மக்கள் அங்கும் இங்கும் அலை பாய்கிறார்கள். காற்றில் இம்முறை இறுக்கமே நிலவியது.

தமிழ்ப்பெண்கள் பொட்டை அழித்து விட்டு பஸ்களில் செல்கிறார்கள். நாங்கள் கல்கிசைச் சந்திப் பக்கம் எட்டிப் பார்க்கக்கூட இல்லை. எட்டிப் பார்க்க வேண்டாம் என்று தான் மகிந்தா கூறினான். மகிந்தா ராஜாவைக் கூட்டிச் செல்லாமல் தான் மட்டும் வண்டியைத் தள்ளினான்.

சிங்களக் கிராமங்கள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு ஒழுங்கையிலும் கூட சாவீடு நிகழும் என்றுதான் எனக்குப் பட்டது.

''பூநகரி இராணுவ முகாமில் தான் உங்கள் மகன் வேலை செய்கிறான்'' என்று எப்படி நான் அக்கிழவிக்குச் சொல்வேன்? சொன்னால் அவ்விடத்திலேயே அக்கிழவி உயிரை விடமாட்டாரா?

நான் சொன்னேன். ''யாழ்ப்பாணத்திலிருந்து கடல் தாண்டி பத்துமைல் தொலைவில் இருப்பதென்றால் அது மண்டைத்தீவு இராணுவ முகாம்தான்''

''மண்டைத்தீவு என்று மகன் எழுதவில்லையே, பூநகரி என்றுதான் மகன் எழுதியதாக ஞாபகம். ''உங்களுக்கு நன்றாகத் தெரியுமா?'' அக்கிழவி அழுது விடுமாப் போல கேட்டார்.

நானென்ன பதில் சொல்ல?

பொய்யை அழுத்திக் கூறுவோம். இப்போதைக்கு அதுதான் சரி.

''ஓம், எனக்கு நன்றாகத் தெரியும்''

''அப்படியென்றால் மண்டைத்தீவிலிருந்து பூநகரிக்கு இராணுவத்தினரை சண்டை பிடிப்பதற்காகக் கொண்டு போக மாட்டார்களா?'' விக்கி விக்கித் தான் கிழவி கேட்டார்.

இதற்கு நான் என்ன பதில் சொல்ல? இதற்கும் நான் அழுத்தமாகக் கூறினேன். மண்டைத் தீவிற்கும் பூநகரிக்கும் நிறையத்தூரம் வித்தி யாசம். அது மாத்திரமன்றி மண்டைத்தீவிலி ருந்து இராணு வத்தை எடுத்தால் மண்டைத்தீவு முகாமைப் புலிகள் தாக்குவார்கள். ஆகவே மண்டைத்தீவு முகாமிலிருந்து இராணுவத்தை எடுக்க மாட்டார்கள்...'' என்று உறுதியாக இராணுவ ஆய்வாளர் போலக் கூறினேன்.

நான் ஆசிரிர் படித்தவன். எனவே என்வார்த் தையை வரிக்கு வரி அக்கிழவி நம்பினார் என்றுதான் கூற வேண்டும்.

தள்ளாட்டத்துடன் கூடி நைந்து போன நடையைக் கிழவி எழுந்து போவதில் கண்டேன்.

''மாஸ்ரர், நீங்கள் இப்படிச் சொன்னது தான் சரி...' என்றான் மகிந்தா.

கிழவியின் மகன் இறந்திருப்பானோ? இறந்திருக்கக் கூடாது என்று என் மனம் அவாவுகிறது. அந்தக் கிழவியை நான் நேரில் கண்டேன். துயரை அப்படியே வரிக்கு வரி நான் புரிந்தேன். இலைக்கஞ்சி வார்த்து அவனை வளர்த்திருப்பாரோ? இனி உழைப்பிற்கு ஏது வழி என்ற கட்டத்தில் தான் அவனை இராணுவத்தில் சேர அனுமதி கொடுத்தாரோ?

இப்படித்தான் இந்த நாடு முழுவதும் ஆயிரமாயிரம் வயோதிபர்கள் வருந்துகிறார் கள். இந்த நாடு அவர்களை துயரத்தில் ஆழ்த்தி, கைகழுவி விடுகிறது.

கிழவியின் மகன் செத்திருக்கக் கூடாது என்று நான் மனதார விரும்புகிறேன்.

ஆனால் அப்படி விரும்ப எனக்கு என்ன உரிமை இருக்கிறது?

அவன் அப்படி உயிர்தப்புகிற கணத்தில், சுதந்திரத்தை நேசிக்கிற ஒருவர் இறந்து போகலாம்.

மனிதாபிமானமும் சுதந்திரமும் நேரெதிராக இயங்குவது இந்தத் தீவில் தான் சாத்தியமோ?

என் மனம் கேட்கவில்லை. நான் மகிந்தாவை அடுத்த நாள் விட்டுக்கலைத்தேன். கிழவியிடம் என்ன மாதிரி என்று கேட்டு வரச்சொன்னேன்.

கிழவியின் மகன் காரைநகர் இராணுவ முகாமில் வேலை செய்வதாக மகிந்தா வந்து கூறினான். 'அப்பாடா' என்றிருந்தது. காரை நகர் இராணுவ முகாம் என் ஞாபகத்திற்கு வராததிற்கு என்னை நான் நொந்தேன்.

இப்போதைக்கு அவன் மரணத்தின் பிடியிலிருந்து தப்பினான்.

—▷16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## தன்னையும் தன் சுற்றத்தையும் தற்காத்துக் கொள்வதை எப்படி கேள்விக்குள்ளாக்க முடியும்?

சரிநிகரின் இதழ் 112 இல் வெளியான ராதிகா குமாரசாமியின் கட்டுரையைப் படிக்க முடிந்தது. பதில் மடல் வரைய வேண்டும் என்கிற உந்துதலையே சிதைத்து சோர்வடையவைத்தது அக்கட்டுரை. பெண் சமத்துவம் தொடர்பாக ஆன்ம தெளிவில்லாத எந்தவொரு நபரும் இதுபோன்ற கருத்துக்களைத்தான் முன்வைக்க முடியும் என்பதைத் தெளிவாக்கியது அக்கட்டுரையின் கருத்துக்கள்.

புலிகள் தொடர்பாக எந்தவொரு கருத்தையும் முன்வைக்க முன்னர், அவ்வமைப்பு ஓர் தேசியவாத அமைப்பு, அதன் இலட்சியம் முற்றுமுழுதாக இதைச் சார்ந்தே இருக்கிறது. அவ்வமைப்பின் செயற்பாடுகள், இலக்குகள் அனைத்துமே அவ்விலட்சியத்தை நோக்கியதாகவே இருக்கும். இதில் அவர்கள் மிகுந்த இறுக்கமுடன் இருக்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களிடமிருந்தான சாத்தியமற்ற எதிர்பார்ப்புகள் தவிர்க்கப்பட்டு, எதிர்பார்ப்புகளின் எல்லைகளைக் கண்டு கொள்ள முடியும். பெண் விடுதலை, பெண் சமத்துவம் தொடர்பாக அவர்களின் கருத்துக்கள் தெளிவானதாகவும், சரியானதாகவும் இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. எதிர்காலத்திலும் இவை தொடர்பாக அவர்களது செயற்பாடுகள் எத்தகையதாக இருக்கும் என்பதற்கும், இன்று பெண் சம்பந்தமாக சமூகத்தில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்கள் நிரந்தரமானவையா இல்லையா என்பதற்கும் காலம் மட்டுமே பதிலளிக்க முடியும்.

பெண்கள் ஆயுதம் ஏந்துவது மட்டுமே அவர்களுக்கான முற்றுமுழுதான சமத்துவத்தை கருத்தியல் ரீதியாகப் பெற்றுத்தரும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவர்கள் ஆயுதம் ஏந்தக்கூடாது என்ற தொனியில் ஆயுதம் ஏந்துவதைக் கேள்விக்குள்ளாக்குவதும், 'வன்முறையோடு தொடர்பற்ற பெண்கள் வன்முறையாளர்களாக மாறுகிறார்கள்; மாற்றப்படுகிறார்கள்'' என்று கூறிக்கொள்வதும் வன்முறைக்கு எதிரானவர் என்று சொல்லிக் கொள்ளும் தனது வடிவத்தைக் காத்துக் கொள்ளவேயன்றி வேறொன்றாக இருக்க முடியாது. ஆயுதமேந்துவதும், வன்முறையைப் பிரயோகிப்பதும் பாதுகாப்பான தளத்தில் பதுங்கியிருந்து கொண்டு பத்தியெழுதும் நபர்களுக்கு தேவையற்றதாக இருக்கலாம். ஆனால் அங்குள்ள மக்களுக்கு அதுதான் நிர்ப்பந்தம். அவர்களின் இருப்புக்களை காத்துக் கொள்வதற்கான ஒரேயொரு வழியாகவும் அதுவே தான் இருக்கிறது.

எந்தவொரு உணர்வுள்ள ஜீவனும் தனக்கெதிரான தாக்குதல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தன்னால் முடிந்தவரை போராடுவதென்பது இயற்கை; இயல்பானது. அது அவர்களுக்கு உரிமையானதும் கூட. இதில் பெண், ஆண், 'என்கிற பேதம் தேவையற்றது; போலித்தனமானது. இருக்கின்ற வழிமுறைகளைப் பிரயோகித்து தன்னையும், தனது சுற்றத்தையும் காத்துக்கொள்கிற உரிமை பெண்களுக்கும் தாராளமாகவே இருக்கிறது. இதை கேள்விக்குள்ளாக்க வேண்டிய அவசியம் கிடையாது. கேள்வி எழுப்ப முற்படும் கட்டுரையாளரால் அங்கிருக்கக்கூடிய ஆயுதமேந்தாத சாதாரண பெண்களை அவர்கள் மீதான வன்முறைகளிலிருந்து இதுவரை காத்துக் கொள்ள முடிந்ததா இல்லை, இனித்தான் முடியுமா?

அதற்கான வழிமுறையாக அவர் எதைக் கூறுகிறார். சத்தமில்லாத சாவையா?

புலிகளின் பெண் தற்கொலைப் போராளிகளின் உடலின் சிதைவையிட்டு தனது கரிசனையைத் தெரிவித்திருந்தார். தம்முடலின் மீதான ஆதிக்கத்தையே தம்மகத்தே வைத்திருக்க முடியாத நிலையிலேயேதான் எமது சமூகத்தில் பெரும்பாலான பெண்கள் வாழ்கிறார்கள். அவர்கள் அன்றாடம் பல்வேறுபட்ட உடல் ரீதியான இம்சைகளுக்கு ஆளாகின்றனர். தவிர, இராணுவத்தால் உடன்பாடேயில்லாது பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு உருக்குலைந்து அமைதியாக அடங்கிப்போன- போகிற அப்பாவிப் பெண்களை இன்றைய சூழலில் நாம் கண்டு கொண்டிருக்கிறோம். (ஒரு வேளை இவர்களும் தம்மை காத்துக் கொள்ள கையில் ஏதேனும் ஆயுதத்தை எடுத்திருந்தால், ''வன்முறையைப் பிரயோகிக்கிறார்கள்'' என்று குரல் எழுப்புவாரோ, இல்லை சினிமா பாணியில் கை நகங்களைப் பயன்படுத்தலாம் அல்லது நமது பெண் தெய்வங்கள் போல் துப்பாக்கியை விடுத்து கத்தி, கோடரி, சூலம் இவற்றை எடுத்துக்கொள்ளலாம் என்றாவது சொல்வாரோ!) ஆனால், புலிகளின் பெண் போராளிகள் அவ்வாறல்ல. இயக்கத்தில் இணைவதற்கு முன்னரே, அவ்வமைப்பினுள் தமது செயற்பாடுகள் பற்றியும், தமது முடிவு (சாவு) பற்றியும் அவர்கள் நிறையவே தெரிந்து வைத்துள்ளார்கள். இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டுதான் இயக்கத்தில் சேர்ந்து கொள்கிறார்கள். எனவே, தம்மை தமது உடலைப்பற்றிய தீர்மானத்தை முதலில் அப்பெண்களே எடுக்கிறார்கள். தாம் ஏற்றுக் கொண்ட இலட்சியத்திற்காய் தம்மை பலியாக்கிக் கொள்வது அவர்களின் விருப்புடனேயே நிகழ்கிறது. இதில் கட்டுரையாளர் கவலைப்படுவதற்கு எதுவுமே கிடையாது. இதைவிட முன்பு குறிப்பிட்ட பெண்களின் உடலின் சீரழிந்து போகும் நிலைமைகளுக்காக நிறையவே பரிதாபப்படலாம். அத்துடன் புலிகள் அமைப்பினரின் குறித்தவோர் செயற்பாட்டுக்கான தற்கொலைப் போராளியின் தெரிவானது, அக்குறித்த செயற்பாட்டை திறம்பட

→19

15→

## மகிந்தாவின் சாவு...

ஆனால் மகிந்தாவின் சாவின் பிறகு தான் எனக்கு மரணத்தின் குரூரம் அப்பட்டமாகத் தெரிந்தது. சாவை நெருங்கிப் பார்த்தேன். மரணம் என் கைக்கெட்டும் தூரத்தில் இருந்தது.

பாடசாலை விட்டு மதிய நேரம், மகிந்தா இறந்ததை நான் கண்டேன்...

ராஜாவின் தமையன் இறந்து விட்டார் என்று ஒரு செய்தி. ராஜா நாவலப்பிட்டிக்குச் சென்றான். ஐந்தாறு நாட்களில் திரும்பி வந்தான். அண்ணன் இறந்த துயரிலும் பார்க்க அவனிடம் மனச்சுமை அதிகம் இருந்தது.

ராஜா திரும்பி வந்த போது மகிந்தா திரும்பவும் சந்தோசப்பட்டான். மகிந்தா தனியனாக விறகு காலையுடன் பட்ட அவலத்தை இந்த ஐந்தாறு நாட்களும் நாங்கள் அறிவோம்.

ஆனால் ராஜா வந்து சொன்ன சேதி அவ்வளவு உவப்பானதாக இல்லை. அம்மா தனிய. அண்ணரின் மனைவி, பிள்ளைகள் உழைப்பில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். நான் போய் அவர்களைப் பொறுப்பேற்க வேண்டும்.

மகிந்தாவிற்கு அது பெரும் அதிர்ச்சி. மகிந்தா அழுதான். காலைப் பிடித்துக் கெஞ்சியதாகக் கூட ராஜா கூறினான். ராஜாவைப் போக வேண்டாம் என்று கூறச் சொல்லி அப்பா அம்மாவிடமும் மகிந்தா சொன்னான். அப்பா அம்மாவிற்கு ராஜா சொல்வதும் நியாயமாகப் பட்டது.

மகிந்தா எதையோ இழந்தது போலத் தவித்தான். சாப்பாடு அவ்வளவாக உட்கொள்ளவில்லை. தாடி சாடையாக முளைத்தது. ராஜாவும் கலங்கிப் போய்த் தான் காணப்பட்டான்.

மூன்று நாளே இருந்தான் ராஜா. நான்காம் நாட்காலையில் அம்மாவிடம் மாத்திரம் சொல்லி ஒரு துண்டு கடிதம் எழுதி வைத்து விட்டு ஓடிவிட்டான்.

காலையில் அப்பாவும் வீட்டில் இல்லை. முதல் நாள் தான் ஒப்பிரேசன் ஒன்றிற்காக ஆஸ்பத்திரி சென்றார். ''நீங்களும் போனால் நாங்கள் யாருடன் இரவு கதைப்பது?'' என்று மகிந்தா கவலைப்பட்டான்.

அப்பாவை நான் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றேன். கூட்டிச் சென்ற போது மழை தூறத் தொடங்கியது.

தொடர்ந்தும் தூறிக்கொண்டுதானிருந்தது. மகிந்தா வந்து அம்மாவிடம் ''ராஜாவைக் கண்டீர்களா?'' என்று கேட்டான். அம்மா மனதறிந்து பொய் சொன்னார்.

திரும்பி வந்த மகிந்தா துண்டுக் கடிதத்தை அம்மாவிடம் காட்டி ''ராஜா ஓடி விட்டான்'' என்று வெம்பி அழத் தொடங்கினான். அம்மா கூடக் கலங்கினார்.

அன்றைக்கென்று மரக்குற்றிகளைக் கொண்டு லொறி வந்தது. மகிந்தா ஆறாயிரம் ரூபாவிற்கு ஓடித் திரிந்தான். அம்மாவிடம் கூடக் கேட்டுப் பார்த்தான். காசு கிடைக்கவில்லை. லொறி மரக்குற்றிகளைக் கொண்டு போய் விட்டது.

வெயில் சுட்டெரிக்காது மழை சிணுங்கிக் கொண்டிருந்த அன்று மதியம் நாங்கள் பாடசாலையிலிருந்து வந்தோம்.

வீட்டில் மாலினி வந்திருந்தார். ''அண்ணாவைக் கண்டீர்களா? இன்று முழுக்க அண்ணாவைக் காணவில்லை'' மாலினி அண்ணாவுக்குச் சாப்பாடு கொண்டு வந்தார்.

விறகுகாலையின் அறை பூட்டப்பட்டுக் கிடந்தது. மகிந்தா வெளியில் போவதென்றால் அறைக் கதவில் பூட்டுத்தொங்கும்.

எனக்கு ஏதோ ஒரு சந்தேகம் தொற்றியது. கதவைத் தள்ளிப் பார்த்தேன். அது உள்ளே பூட்டப்பட்டுக் கிடந்தது. தள்ளித்தள்ளிப் பார்த்தேன்...

அலவாங்கைக் கொண்டு தெண்டினேன். வன்மையற்ற கதவு பிரிந்து திறந்தது.

உள்ளே தலை தொங்கி, நாக்கு வெளியே தள்ளி, கழுத்தடியில் கறுத்திருக்க மகிந்தா தூக்கில் தொங்கினான்.

காலடியில் கதிரை உருண்டிருந்தது. பக்கத்து மேசையில் அரைப் போத்தல் சாராயத்தில் கால் வாசி குடித்தபடி கிடந்தது. பேப்பரில் சிங்களத்தில் ஏதோ எழுதி, பேனை மூடப்படாமல் இருந்தது.

மாலினி ''அண்ணா...'' என்று அலறினாள்.

எனக்குக் குரூரம் நிறைந்த அந்தச் சூழலை விபரிக்க வார்த்தைகள் போதாது. என் பையன்களை அந்தச் சித்திரத்தைப் பார்க்க வேண்டாமென்று தடுத்தேன். அயலவர் கூடினர். எங்கள் வீட்டில் சந்தேகப் பார்வை வீசினர்.

உழைப்புத் துணைக்கு ராஜாவும் இல்லாத பேச்சுத்துணைக்கு அப்பாவும் இல்லாத அந்த மழை தூறிய பொழுதில் மகிந்தா தூக்குப் போட்டுச் செத்துப் போனான்.

மகிந்தாவின் தற்கொலைக் கடிதம் பொலிசின் சந்தேகப் பார்வையிலிருந்து எங்களைக் காப்பாற்றியது. அதிலும் மேலாக மகிந்தாவின் குடும்பத்தினர் எங்கள் மேல் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர்.

மகிந்தாவின் குடும்பம் இனி என்ன செய்யப் போகின்றது என்பதுதான் என் மனதைக் குடைந்த கேள்வி. மகிந்தா இவற்றையெல்லாம் எவ்வாறு யோசிக்காமல் விட்டான்? பின்னால் இருக்கிற மூன்று தங்கைகளின் பொறுப்பு அவனை உலகத்தை விட்டுத் துரத்தியது. அப்படித் தானா? எப்படித் தற்கொலை செய்ய எண்ணினான்? இவைகள் என் மேலான கேள்விகள்.

ஆனால் இவ்வளவு கேள்விகளுக்கும் அப்பால் எனக்கு இன்னுமொரு கேள்வி காத்திருந்தது.

அம்மாவின் காது கேட்கும் படியாக ரோகினி பக்கத்து வீட்டுக்காரியிடம் சொல்லிக் கொண்டிருந்தார். ''ராஜாவை இந்தத் தமிழ்க் குடும்பம் தான் துரத்தியிருக்க வேண்டும். சிங்களவர்களுக்கு ஏன் உதவி செய்கிறாய் என்று கேட்டுத் துரத்தியிருப்பார்கள். எப்பொழுதும் தமிழர்களை நம்பக்கூடாது. அவர்கள் தங்கள் புத்தியைக் காட்டுவார்கள்'' ரோகினி அம்மாவை கடைக்கண்ணால் பார்த்தபடியும் தான் இதனைக் கூறினார்.

''ராஜா தான் மகிந்தாவின் ஆறாயிரம் ரூபா காசையும் கொண்டோடினான்...'' என்று பொன்சேகாவின் மனைவி கூறினார்.

''செத்தவன் இராணுவத்தில் சேர்ந்து புலிகளை அழித்து விட்டாவது செத்திருக்கலாம்'' என்றும் ரோகினி கூறினார்.

இதையெல்லாம் அம்மா தான் எனக்குக் கூறினார். எனக்கு நம்ப முடியவில்லை. ரோகினி இவ்வளவு விரைவாக மாறி விட்டாரா?

காலம் எல்லோரையும் எல்லாவற்றையும் தான் மாற்றுகிறது. இல்லை, அம்மாவின் காதும் பிழையாக இருக்கலாம். நான் அப்படித் தான் நம்ப விரும்பினேன்.

மகிந்தா சாமம் மட்டும் திரிகிற அந்த வீட்டில் அம்மா இருக்கப் பயந்தார். சாமத்தில் விறகு காலையிலிருந்து பயங்கரச் சத்தங்கள் வரலாயின. அறையில் கதவுகள் அடிபடுகிற சத்தங்கள் கேட்டன. மகிந்தா நடப்பது போல, மகிந்தா கதைப்பது போலச் சத்தங்கள் கேட்டதாக அம்மா அடித்துக் கூறினார். கதவைத் தட்டி மகிந்தா தண்ணீர் கேட்டான் என்று ஒரு நாள் சொன்னார். சாமம் மகிந்தா கூச்சலிட்டான் என்று வேறொரு நாள் அம்மா சொன்னார்.

எனவே அம்மா அங்கிருக்கப் பயந்தார். ''ராஜா, ராஜா...'' என்று ஓரிரவு மகிந்தாவின் குரல் கேட்டது. மகிந்தா இரத்தம் காண்பான் என்று அம்மா மேலும் பயமூட்டினார்.

என் பயமோ வேறுவிதமாக இருந்தது. மகிந்தா இல்லாத இந்த வீட்டில் நான் இருக்கப் பயந்தேன். என் குடும்பத்தை இந்தத் தேசத்தில் வருகிற சின்னச் சச்சரவுகளிலிருந்தும் காப்பாற்ற என்னால் முடியாது என்பது எனக்கு நன்கு தெரியும்.

நான் வேறு வீடு தேடியாக வேண்டும். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம் தேசமும் எதிர் காலமும்: ஓர் அறிமுகம்

**தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் வகிக்க வேண்டிய பாத்திரம் மிகக் கவனமாக அலட்சியம் செய்யப்பட்டு வருகின்றது. எங்கு ஒட்டு மொத்தமான ஒரு மக்கள் திரள் ஒடுக்குமுறைக்கும், அடக்குமுறைக்கும் உள்ளாகுமோ அங்கிருந்து புதிய போராட்டங்கள் கிளர்ந்தெழுவது யதார்த்தமாகும். சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கை அரசியல் தலைமைத்துவம் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளுக்குரிய எதிர்வினையை அது இன்று அனுபவிக்கின்றது. காலவோட்டத் தினூடே முஸ்லிம்களது தரப்பிலிருந்தும் சமகால நிகழ்வுகளின் தர்க்க ரீதியான விளைவாக மிகக் கடுமையான எதிர்ப்புணர்ச்சி வெடிக்கும் சாத்தியங்களையும் நாம் மறுக்க முடியாது.**

பிறாஜ் மஷ்ஹூர்

தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் வகிக்க வேண்டிய பாத்திரம் மிகக் கவனமாக அலட்சியம் செய்யப்பட்டு வருகின்றது. எங்கு ஒட்டு மொத்தமான ஒரு மக்கள் திரள் ஒடுக்குமுறைக்கும், அடக்குமுறைக்கும் உள்ளாகுமோ அங்கிருந்து புதிய போராட்டங்கள் கிளர்ந்தெழுவது யதார்த்தமாகும். சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கை அரசியல் தலைமைத்துவம் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளுக்குரிய எதிர்வினையை அது இன்று அனுபவிக்கின்றது. காலவோட்டத்தினூடே முஸ்லிம்களது தரப்பிலிருந்தும் சமகால நிகழ்வுகளின் தர்க்க ரீதியான விளைவாக மிகக் கடுமையான எதிர்ப்புணர்ச்சி வெடிக்கும் சாத்தியங்களையும் நாம் மறுக்க முடியாது.

ஒரு பல்லின தேசத்தில் சிறுபான்மை சமூகமொன்று எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினை அதன் தனித்துவ அடையாளம் மறுக்கப்படுவதாகும். புறத்தேயுள்ள கருத்தியல்கள், மனோபாவங்கள், ஐதீகங்கள் என்பன கபடமாக அதனை உள்வாங்க முனைகின்றன. இலங்கை முஸ்லிம்களது இன அடையாளம் (Ethnic identity) மறுக்கப்பட்டபோதே முஸ்லிம் தேசியவாதம் முளைவிடத் தொடங்கியது எனலாம். சிங்களப் பேரினவாதம் திணிக்க முனைந்த பௌத்த மேலாதிக்கக் கருத்தாக்கம் எவ்வாறு தமிழ் சமூகத்தில் ஜீரணமாகவில்லையோ, அதேபோன்று முஸ்லிம் சமூகத்திலும்- சற்றுத் தாமதமாகவே எனினும் - உணர்வு பூர்வமாக உள்வாங்கப்படவில்லை.

மற்றொரு சிறுபான்மையான தமிழ்த் தரப்பிலிருந்து மேற்கிளம்பிய சைவ- வேளாள சித்தாந்தம் முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ அடையாளத்தை தொடர்ந்தும் மறுத்தே வந்தது. தம்மீது ஆதிக்கம் செலுத்த முனைந்த இந்த இரு சக்திகளையும் புறந்தள்ளும் எதிர்க் குரல்கள் முஸ்லிம் சமூகத்துள் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கின. 80களின் பின்னரைத் தசாப்தங்களிலிருந்து தமிழ் ஆயுதக் குழுக்கள் கட்டவிழ்த்து விட்ட முஸ்லிம் விரோத நடவடிக்கைகளால் இந்த எதிர்ப்புணர்வு நன்கு ஆழம் பெற்றது. இந்தச் சூழலின் யதார்த்தம், நிறுவன ரீதியான கட்டமைப்புகளின் அவசியத்தை வேண்டி நின்றன. ஜிஹாத் குழுக்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இச்சந்தர்ப்பத்தில் தோன்றிய குறிப்பிடத்தக்க ஒழுங்கமைப்புகளாகும். தமிழ்த் தேசியவாதக் கருத்தியலை முன்னெடுத்த அணிகளிடமிருந்து கூட முஸ்லிம்களது இன அடையாளம் மறுக்கப்பட்டமை முஸ்லிம் முற்போக்கு சக்திகளுக்கு ஆழ்ந்த அதிர்ச்சியைத் தந்தது.

தமிழ்த்தரப்பில் முஸ்லிம்கள் தனியான தேசிய இனமா என்பது ஒரு விவாதத்துக்குரிய விடயமாக ஆக்கப்பட்டது. பெரும்பாலானோர் முஸ்லிம்களைத் தமிழ்த் தேசிய இனத்தின் ஓர் உட்பிரிவாகவே கருதினர். எனினும் முஸ்லிம்களது இனத்தனித்துவத்தை அங்கீகரிக்கும் நேர்மையான குரல்கள் சில மிக மெதுவாக ஒலித்தமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

அண்மையில் லண்டனிலிருந்து வெளிவரும் **'உயிர்ப்பு'** சஞ்சிகை முஸ்லிம் தேசம் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியிட்டது. நண்பர் ***பௌசர்*** தனது ***'மூன்றாவது மனிதன்'*** வெளியீட்டகத்தின் மூலம் அதை **'முஸ்லிம் தேசமும், எதிர்காலமும்'** என்ற தலைப்பிலான நூலாக மீள் பிரசுரம் செய்துள்ளார். இந்த நீண்ட ஆய்வுக் கட்டுரையை எழுதிய 'உயிர்ப்பு' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த விக்ரர் மேலோட்ட வாசிப்பினாலல்லாது நீண்ட கள ஆய்வை மேற்கொண்ட பின்பே இதை எழுதியுள்ளார் என்பதை நுட்பமாக வாசிக்கும் எவரும் கண்டு கொள்வர்.

இந்நூல் வெளிவந்தவுடனேயே அது ஒரு புதிய விவாதத்தைத் தொடக்கி வைக்கும் என்ற ஆழ்ந்த எதிர்பார்ப்பு எங்களிடமிருந்தது. தமிழ் - முஸ்லிம் முற்போக்கு அணிகளிடமிருந்து விரிவான கருத்துப் பரிமாறல்களை நாம் அவாவினோம். ஏனோ எமது எதிர்ப்பார்ப்புகள் ஏமாற்றமாகவே உள்ளன.

முஸ்லிம்கள் தொடர்பான ஆய்வுகள் முஸ்லிமல்லாதோரிடமிருந்து வெளிவருவது இதுவே முதற்தடவையல்ல. முஸ்லிம்கள் தம்மைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதில் காட்டும் அலட்சியம் மிகப் பெரிய வரலாற்றுத் தவறாகும்.




''இந்நூல் தமிழ்த் தேசியவாத நிகழ்ச்சி நிரலின் (Tamil Nationalist Agenda) ஒரு வேலைத்திட்டம்'' என கலாநிதி எம்.ஏ.நுஃமான் குறிப்பிட்டார். இதை நூலின் முன்னுரையும் தெளிவாகக் குறிப்பிடுகிறது: ''தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் இதுவரை பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்துள்ளது. சாதிய ஏற்றத் தாழ்வுகள், பிரதேச வேறுபாடுகள், வெகுசனப் படுத்தலின்மை, அராஜகம், பெண்களின் நிலை... என்பவற்றுடன் இப்போது முஸ்லிம் மக்களின் விடயமும் தீர்க்கமான விடயமாக முன்தள்ளப்பட்டுள்ளது.''

இந்நூல் 'வட -கிழக்கு முஸ்லிம்கள் ஒரு தனியான தேசம்' என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதோடு, ''வட கிழக்கில் - தமிழ் முஸ்லிம் மக்களிடையே இனிமேல், ஏற்படவிருக்கும் உறவுகள் சமத்துவமுள்ள இரு தேசங்களுக்கிடையிலான உறவுகளாகவே அமைய வேண்டும் என்ற முடிவை முன்வைப்பதாகவும் அமைகிறது'' என முன்னுரையில் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இக்கருத்து வைதீக தமிழ்த் தேசியவாதத்திலிருந்து ஒரு குறிப்பிடத்தக்க மீறலாகும். இந்த வகையில் தமிழ்த் தரப்பிலிருந்து வெளிவந்த நேர்மையானதும் ஆரோக்கியமானதுமான ஒரு குரலாகவே இதை நாம் கணிக்க வேண்டும். சிங்கள தேசம் தமிழ்த் தேசத்தை அங்கீகரிப்பது எவ்வளவு அவசியமோ அதேபோல் தமிழ்த் தேசம் முஸ்லிம் தேசத்தை அங்கீகரிப்பதும் அதேயளவு அவசியமானதாகும். இவ்வாறான பரஸ்பர அங்கீகாரத்தினூடாகவே பல்லின சமூகமொன்றில் சமநிலை பேணப்பட முடியும்.

இந்நூல் முஸ்லிம் சமூகத்திற்கு வெளியே நின்று புறவயமாக அதைப்புரிந்து கொள்ள முனையும் ஒரு முயற்சியாகும். நூலின் உள்ளடக்கத்தை ஆய்வு வசதி கருதி இரு பாகங்களாக வகுக்கலாம். 'பூர்வீகமும் தனித்துவமும்', 'குடிசனப் பரம்பலும் சமூகத் தன்மையும்', 'தெற்கு முஸ்லிம்கள்', '(வட) கிழக்கு முஸ்லிம்கள்', 'புதிய சமூகப் பிரிவினரால் ஏற்பட்ட பாதிப்புகள்' ஆகிய தலைப்புகள் உள்ளடக்கும் விடயங்கள் முஸ்லிம்கள் பறறிய ஒரு பொதுப் புரிதலுக்கான பின்னணியாக உள்ளது.

'கிழக்கு முஸ்லிம்களிடையே தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கங்கள்', 'கிழக்கில் தமிழ் - முஸ்லிம் வன்முறை மோதல்கள்', 'மத்திய கிழக்கு வேலை வாய்ப்புகளினால் கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட தாக்கங்கள்', 'ஊர்காவல் அமைப்பின் தோற்றம்', 'கிழக்கு முஸ்லிம்களின் தேசிய எழுச்சியும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும்' ஆகியன உள்ளடங்கிய அடுத்த பாகமானது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பின் தோன்றியதும் தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் கவனத்திலெடுக்க வேண்டியதுமான பல முக்கியமான விடயங்களை ஆராய்கிறது.

இந்நூல் முழு இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக முதலில் பேசுகிறது. தெற்கு முஸ்லிம்களுக்கும், வடகிழக்கு முஸ்லிம்களுக்கும் மத்தியில் பல்வேறு அடிப்படை உள்ளதெனவும் வடகிழக்கு முஸ்லிம்களை சில தனித்துவமான இயல்புகளாலும், சூழ்நிலைகளின் தேவைகளாலும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டியது தவிர்க்க முடியாதது எனவும் வலியுறுத்துகிறது. பின் கிழக்கு முஸ்லிம்கள் பற்றியே விரிவாகப் பேசுகிறது. வடக்கு முஸ்லிம்கள் கிழக்கு முஸ்லிம்களைப் பல்வேறு விடயங்களில் ஒத்திருப்பதால் கிழக்கு முஸ்லிம்கள் பற்றிப் பேசியுள்ள பல விடயங்கள் வடக்கு முஸ்லிம்களுக்கும் பொருந்தும் என நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

இந் நூலில் குறிப்பிடப்படும் பல்வேறு விடயங்களில் நமக்கு அபிப்பிராய பேதங்கள் உள்ளன. ஆயினும் அவ்வபிப்பிராய பேதங்கள் நூலின் முக்கியத்துவத்தை எந்தளவுக்கும் குறைத்து விடாது. ஏனெனில், இந்நூல் எல்லா விடயங்களையும் பக்கச் சார்பின்றி புறவயமாக ஆராய்கிறது. கருத்துக்களை சுதந்திரமாக முன்வைப்பதோடு தமிழ் - முஸ்லிம் அரசியல் தலைமைகளும், ஏனையோரும் செய்த / செய்துகொண்டிருக்கும் வரலாற்றுத் தவறுகளை மிக நேர்மையாக ஆய்வுக்குட்படுத்துகிறது.

தமிழ் விடுதலை இயக்கங்களின் அராஜகங்களையும் அவை முஸ்லிம் மக்கள் மீது திட்டமிட்டு செய்த இன சுத்திகரிப்பு மற்றும் வன்முறை நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டிக்கிறது. பாரம்பரிய தமிழ்த் தலைமைகளின் சந்தர்ப்பவாத அரசியலை ஆழ்ந்த கேள்விக்குட்படுத்துகிறது.

மறுபுறம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தோற்றம், படிமுறை, வளர்ச்சி முஸ்லிம்களது தேசிய உணர்வின் வடிகாலாக அது மாறியமை, பின்னர் அஷ்ரஃப் என்ற தனிநபர் மீதான வழிபாடாகவும் கேள்விக்கு படுத்த முடியாத அதன் தலைமைத்துவம் மீதும் அதன் சந்தர்ப்பவாத அரசியல் குறித்தும் மிக விரிவான ஒரு ஆய்வை முன்வைக்கிறது.

தமிழ் - முஸ்லிம் உறவைப் பாதித்த பல்வேறு காரணிகளை நூலாசிரியர் அடையாளம் காட்டியுள்ளார். இரு சமூகங்களுக்கும் வெளியேயிருந்து இனக் குரோதங்களை வளர்த்த சக்திகள் பற்றியும் இந்நூல் பேசுகிறது. மேலும் முஸ்லிம் தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் மாற்றுத் தலைமைகள் படித்த முஸ்லிம் முற்போக்கு சக்திகளிலிருந்து உடனடியாகத் தோற்றம் பெறுவது காலத்தின் தேவை எனவும் வலியுறுத்துகிறது.

இந்நூல் குறிப்பிடும் மற்றொரு முக்கிய அம்சமான சமூகத்தளைகளிலிருந்து விடுபட்டு தேசிய உணர்வுடையவர்களாக முஸ்லிம் பெண்கள் மாறியமை வெறுமனே ஒரு சாதாரண விடயமல்ல. இந்த வகையில் - அது தனது தேசிய உணர்வுக்கு வடிகாலாக தேர்ந்தெடுத்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் என்ற பாதை தவறாக இருந்த போதிலும் - இந்த மாற்றம் வரவேற்கத்தக்கதே.

இந்நூலின் இறுதியில் ஒரு நீண்ட முடிவுரை உள்ளது. வடகிழக்கு முஸ்லிம்கள் தமிழ் ஈழத்தில் அடங்கும் ஒரு தேசிய சிறுபான்மையினர், மற்றும் வடகிழக்கு முஸ்லிம்கள் வளர்ந்து வரும் ஒரு தேசம் போன்ற மரபுவழிக் கருத்துக்களை நிராகரித்து அவர்கள் தனியான ஒரு தேசம் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. மேலும் இந்த முடிவு குறித்து விவாதிப்பதினூடாக பொதுவான புரிதலை எட்டுவதற்கும் அழைப்பு விடுக்கிறது.

தமிழ் - முஸ்லிம் முற்போக்கு சக்திகளிடையே ஒரு கூட்டிணைவை அது வேண்டி நிற்கிறது. ''வடகிழக்கில் தமிழ், முஸ்லிம் என இரண்டு தேசங்கள் நிலவுகின்றன என்பதையும், அவையிரண்டும் அரசியல் ரீதியில் சமத்துவமானவை என்பதையும் ஒரு தேசத்தின் உரிமைகளில் தலையிடுவதற்கு இன்னொரு தேசத்திற்கு எதுவித உரிமையும் கிடையாது என்பதையும் தமிழ் முற்போக்கு ஜனநாயகப் பிரிவினர் உணர்ந்து கொள்ள வேண்டும்'' என்ற கருத்தை வலியுறுத்துகிறது. மேலும் ''தமிழ்த் தேசம் தன்னுடைய ஜனநாயகத் தன்மையையும், முஸ்லிம் தேசத்தை தான், சமத்துவமாகக் கருதுவதையும் அரசியல் ரீதியில் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்'' எனவும் வேண்டுகிறது.

மொத்தத்தில் இந்நூல் குறிப்பிடும் எல்லா விடயங்களையும் நாம் ஆழ்ந்த ஆய்வுக்குட்படுத்த வேண்டும். இதன் கருத்துகள் குறித்து நம்மிடையே சுதந்திரமான விவாதங்கள் (Open Debates) நிகழ வேண்டும். இதைப் பல்வேறு ஆய்வுப் பட்டறைகளினூடாக - பத்திரிகைகளினூடாக நாம் முன் கொண்டு செல்லலாம். தேசியவாதம் தொடர்பான விவாதம் முற்றுப் பெறாத ஒரு சூழலில் முஸ்லிம் தேசியம் பற்றிய விவாதம் இன்னும் ஆரம்பிக்கப் படாமலிருப்பது மிகப் பெரிய அவலமாகும். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அடூர் கோபாலகிருஷ்ணனின் 'கதாபுருஷன்'

கே.எஸ்.சிவகுமாரன்

அடூர் கோபாலகிருஷ்ணன் மலையாளத்திரைப்பட உலகில் மட்டுமன்றி இந்தியா பூராவும், ஏன் உலகத் திரைப்பட விழாக்கள் இடம்பெறும் நாடுகளிலும் நன்கு தெரிந்த ஒரு நேர்த்தியான திரைப்பட நெறியாளர் இவர் நெறிப்படுத்திய 'ஸ்வயம் வரம்' என்ற மலையாளப் படத்தை 60களின் நடுக்கூறில் கொழும்பிலேயே பார்த்து மகிழும் வாய்ப்புக்கிட்டியது. பின்னர் 1990ல் பூனே திரைப்படத் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்தில் திரைப்படத் திறனாய்வு தொடர்பாக றுவாரகால பயற்சி பெற்றபொழுது, அங்கு அவர் விரிவுரையாளராக இருந்த வேளையில் அவருடன் நேரிற்பேசி விடயங்களை அறிந்துகொள்ளவும் முடிந்தது. அவருடைய வேறுபல படங்களையும் இந்திய மா நகரங்கள் நடைபெறும் திரைப்பட விழாக்களிலும் பார்த்துக்கணிக்க முடிந்தது.

அடூர் கோபாலகிருஷ்ணனின் புதிய படம் 'கதாபுருஷன்' திருவனந்தபுரத் திரைப்படவிழாவில் இதுவும் இடம்பெற்றது. ஆயினும் இப்படம் 1995லேயே தயாரிக்கப்பட்டு விட்டது. 107 நிமிடங்கள் ஓடும் இந்த வண்ணப்படத்தின் கதையையும் எழுதியிருப்பவர் நெறியாளரே.

கதை நிகழும் காலம் 1937-47 நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பின் படிநிலை மாற்றம் ஏற்பட்டு வரும் பின்னணியிலே, குஞ்சுண்ணி என்ற கேரள மைந்தன் ஒருவனின் அரசியல் ஈடுபாட்டைப் படம் சித்திரிக்கிறது.

குஞ்சுண்ணியின் பெற்றோர் பிரிந்து தான் வாழ்ந்தனர். ஆயினும் அவன் அன்பையும் ஆதரவையும் பெற்றுத் தன் தாயுடனும், பாட்டியுடனும் வாழ்ந்து வந்தான். அவன் தாய் நோய்வாய்ப்பட்டிருந்தாள். அவன் சொத்துக்களின் நிர்வாகியும் அவனைக் கருணையுடன் நடத்தி வந்தான். அவர்கள் வீட்டிலே வேலைக்காரி ஒருத்தியும் வசித்து வந்தாள். அவளுக்கு குஞ்சுண்ணியையொத்த வயதுடைய மகளும் உண்டு. சிறுவர்கள் இருவருமே எந்தவித பேதமுமின்றி ஒன்றாக விளையாடி அன்பாய் இருந்தனர். அந்தச் சிறுமியின் பெயர் மீனாக்ஷி.

குஞ்சுண்ணி வளர்ந்ததும் பட்டதாரியாகிறான். பொதுவுடமைக் கட்சியின் சித்தாந்தங்கள் அவனுக்குப் பிடித்தனவாகின்றன. நிலப்பிரபுத்துவச் சூழலின் விளை பொருளாகிய அவன் மார்க்சிய வழியில் சிந்திப்பது அக்காலத்தில் புரட்சிகரமாகக் கருதப்பட்டது. சமுதாயத்தின் அனைத்துக் குறைபாடுகளையும் கொம்யூனிஸமே துடைத்தெறியக் கூடியது என்று அவன் தீவிரமாக எண்ணத் தொடங்குகிறான்.

கதை நிகழும் காலத்தைக் கருத்திற் கொண்டு பார்த்தால், அக்கால கட்டத்தில் மாஓ சிந்தனைகள் அவ்வளவு தூரம் இந்தியாவில் செல்வாக்கு செலுத்தின என்று கூற முடியாது. ஆயினும் நமது கதாபுருஷன் (கதையின் நாயகன்) மாஓ கொம்யூனிஸ்ட் கட்சியிற் சேர்ந்து தீவிர போராளியாக மாறுகிறான். வன்செயலையும், தீவிரவாதப்போக்கையும் வலியுறுத்தி பிரசுரங்களை வெளியிட்டு வந்த குஞ்சுண்ணியை, அவன் அச்சகத்தில் வைத்து பொலிஸார் கைது செய்கின்றனர். வழக்குத் தொடரப்பட்டுப்பின்னர் அவன் விடுதலையாகிறான்.

அவன் இலட்சியங்கள் சிதறுண்டதை அறிந்து அவனுக்கே தன் இலட்சியங்களில் சந்தேகம் எழுகின்றது. முன்னரைக் காட்டிலும் அவன் இப்பொழுது முதிர்ச்சியடைந்துள்ளான்.

தனது இளமைத்தோழி மீனாக்ஷியைத் தேடிக்கண்டுபிடித்து அவளையே திருமணஞ் செய்து கொள்கிறான். தனது பரம்பரை வீட்டிலேயே அவன் குடிபுகுந்து வாழ்கிறான்.

வாழ்க்கை அவனுக்கு நிறையப் பாடங்களைக்கற்றுத்தந்துள்ளது. அவன் தன் சிந்தனைகளை அனுபவங்களை எழுதத்தொடங்குகிறான். இதுதான் கதை.

கதா புருஷன் படம் மூலம் நெறியாளர் எதனைக் கூற வருகிறார்? நெறியாளரே விளக்குகிறார்.

''இக்கதாநாயகன் தனது கூண்டுக்குள் ஒளியாமல் வெளியே வந்து தனது எதிர்ப்புக் குரலை ஒலிக்கச் செய்கிறான். அவனுடைய நடவடிக்கைகள் அரச நிர்வாகத்தை அசைக்க வைக்கின்றன. அவன் நீதிக்காகப் போராடுகிறான் என்பதை விளக்க இதுவே போதுமானது''

அப்படியானால், கதாபுருஷன் ஓர் அரசியல் வரலாற்றுப்படம் எனக் கூறலாமா? அதுவும் சரியில்லை. ஏனெனில், தனது படம் ''உணர்ச்சி வெளிப்பாட்டின் வரலாறு'' என்கிறார் கோபாலகிருஷ்ணன்.

[redacted]

என்னைக்கேட்டீர்கள் என்றால் கதாபுருஷன், படம் திரைப்படம் என்ற முறையில், தொழில்நுட்பக் கலை வெளிப்பாடு என்ற வகையில் அலட்டிக்கொள்ளாமல் பார்க்கக் கூடியது. ஆயினும் உள்ளடக்க ரீதியாக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

இருந்தபோதிலும் ஒரு படைப்பின் ஆக்ககர்த்தா என்ற முறையில் நெறியாளரின் விளக்கத்தையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

அடூர் கோபாலகிருஷ்ணன் கூறுகிறார்: தனிநபர் ஒருவரின் சுதந்திரச் சிந்தனைகளுக்குத் தடையாக ஆளும் நிறுவகம் கொண்டுவரும் அடக்குமுறைகள், ஒதுக்கப்படுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடித் தனது ஆதிக்கத்தைப் பதிவு செய்ய முனையும் மனித ஆன்மாவின் நித்திய போராட்டத்தின் இறுதிக்கட்டமாக கதாபுருஷனின் வாழ்க்கையைச் சித்திரிக்க முனைந்துள்ளேன்.''

காலமும் வரலாறும் பின்னிப்பிணைந்துள்ளதை எடுத்துக்காட்டும் நெறியாளர், கேரளத்தின் 40 வருட வரலாறு, கட்டங்கட்டமாக மாற்றத்துக்கு உட்பட்டது என்றும காலத்தினூடே எழுந்த உணர்ச்சிப் பெருக்கைத் தமது படம் காட்டுவதாகவும் குறிப்பிடுகிறார். தமது கதாநாயகன் விட்டுக்கொடுக்காதவன். அவ்வாறே விட்டுக்கொடுக்காதவர்களே சமுதாயத்தில் மாற்றத்தைக்கொண்டு வரலாம் என்று திட்டவட்டமாகக்கூறும் அடூர் கோபல. கிருஷ்ணனின் கருத்து என்னளவில் விவாதத்திற்கு உட்பட்டது.

அடூர் கோபலகிருஷ்ணனுக்கு 56 வயதாகிறது. நாடகமேடை அனுபவத்தைப்பெற்ற கோபலகிருஷ்ணன் அடூர் என்ற கேரளக்கிராமத்தில் பிறந்தவர். பொருளாதாரப்பட்டதாரியான அவர் சிறிது காலம் அரசாங்கப் பதவி வகித்தார். 1962 முதல் 1965 வரை திரைநாடகம் எழுதுதல் திரைப்பட நெறியாள்கை ஆகியவற்றில் பயிற்சிபெற்று வெளியேறினார்.

கேரளத் தலைநகர் திருவனந்தபுரத்தில் 1965ஆம் ஆண்டு சித்ரலேகா திரைப்படச் சங்கத்தை ஏற்படுத்தினார். இதுவே கேரள மாநிலத்தின் முதலாவது திரைப்படச் சங்கமாகும். அதுமாத்திரமல்ல. இந்தியாவிலே திரைப்படத் தயாரிப்பு, வினியோகம், படக்காட்சி ஆகியவற்றிற்காக ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கூட்டுறவு நிறுவனமும் கோபலகிருஷ்ணன் ஆரம்பித்தது தான். இவற்றிலிருந்தே கேரள சினிமாவுக்கு அடூர் கோபால கிருஷ்ணன் ஆற்றிய பங்களிப்பு தெரியவரும்.

இந்தியாவிலே, தலைசிறந்த திரைப்பட நெறியாளர் விருது கோபால கிருஷ்ணனுக்கு நான்கு தடவை வழங்கப்பட்டுள்ளன. அவருடைய 'எலிப்பத்தாயம்' படத்திற்கு பிரிட்டிஷ் திரைப்பட நிறுவகம் பரிசளித்திருக்கிறது. 1984ல் பத்ம ஸ்ரீ பட்டமும் அடூர் கோபாலகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்டது.

'கதாபுருஷன்' படத்தின் ஒளிப்பதிவு, ரவிவர்மா இசை, தமிழ்ப் படங்களுக்கும் அந்நாட்களில் இசையமைத்த விஜய பாஸ்கர். விஸ்வநாதன், மினி, அரண்முல பொன்னம்மா, ஊர்மிளா உன்னி, டி.எஸ். ராஜு போன்ற நமக்குப் பழக்கப்படாத நடிக நடிகையர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

கதாபுருஷன் நாம் அவசியம் பார்த்து விமர்சிக்கவேண்டிய உயர்தர திரைப்படம்.



அடூர் கோபாலகிருஷ்ணன்

## நண்பனுக்கு

ஏய்
என் இனிய நண்பனே
நீ என்னை
அறிந்ததாகக் கூறினாய்
எப்படி என்றேன்
ஆத்திரப்பட்டாய்
உன்னிடத்தில் - என்னை
சமப்படுத்திப் பார்த்தாய் - பின்
பறவாயில்லை புத்திசாலி என்றாய்
அறிவென்றாய் - கூடவே
அழகென்றாய்
எதை எதற்காகச் சொன்னாய்
இல்லை
உன்னால் என்னை அறிய
முடியவில்லை
பெண் என்பதைத் தவிர

ரஞ்சினி

கோடை முடிந்து கொடு மழை
பின்னர் இது முடியப்
பனிக்காலம்

ஓயாதவேலை
ஒரு பொழுதும் ஒழியாத நேரம்
சாகாத கனவுகளுடன்
காணாமற் போகும் நண்பர்கள்
உருக்குலைந்து போன எம்மியக்கம் போல்
அழிந்து கொண்டிருக்கும் எம் தேசம்
சிதைந்து கொண் டிருக்கும் அறிவு

தாய் நாடும்
தாய் முகமும்
காணாமற் கடந்தன
பத்தாண்டுகள்

என்னுள்ளோ
அணையாதிருக்கிறது
சிறு நெருப்பு!

24.08.96 கூடல சங்கம தேவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மே தினம்: இடதுகளின் கூட்டு!

"தனியார் மயத்துக்கு, யுத்தத்துக்கு, அரச அடக்குமுறைக்கு, வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரிப்புக்கு எதிராக அணிதிரள்வோம்" என்ற கோஷங்களுடன் இடதுசாரிக்கட்சிகள், தொழிற்சங்கங்கள் உட்பட பல 14 அமைப்புகள் இணைந்து இம்முறை மேதினத்தை நடத்தின. கொழும்பில் நடந்த பல மேதினக் கூட்டங்களில் கவனத்திற் கொள்ளத்தக்க மேதினக் கூட்டமாக இது காணப்பட்டது.

இம்மே தினத்துக்கான ஆர்ப்பாட்ட ஊர்வலம் பிற்பகல் 1.00 மணிக்கு கொம்பனித் தெருவிலுள்ள டிமெல் பூங்காவிலிருந்து புறப்பட்டு மீண்டும் அதே இடத்தை வந்தடைந்து கூட்டத்தை நடத்தின.

இதில் முக்கிய அம்சம் என்னவெனில் பல்வேறுபட்ட காரணங்களால் தனித் தனியாக பிரிந்து சென்று இயங்கிவந்த இடதுசாரிக் கட்சிகள், இத்தனை காலம் பொது எதிரியான அதிகார வர்க்கத்துக்கு எதிராக இயங்குவதிலும் பார்க்க தமக்குள் மோதுண்டு வந்த பல இடது சாரி இயக்கங்கள், மே தினத்தை மையமாக வைத்து சில பொது உடன்பாடுகளின் பேரில் ஒன்றிணைந்ததாகும். மேதினத்துக்காகவே இக்கூட்டு அமைக்கப்பட்ட போதும், தாம் உடன்படக்கூடிய பொதுவான விடயங்களில் இணைந்து செயற்படலாம் என அவை உடன்பட்டுள்ளன.

நவ சமசமாஜக்கட்சி உட்பட, புதிய ஜனநாயகக்கட்சி, சோஷலிச மக்கள் கட்சி, மாவோயிச இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தியெச கல்வி வட்டம், தேசிய காணி, விவசாய சீர்திருத்த இயக்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், "வலையத்தில் நாங்கள்" இயக்கம், மக்கள் விவாத கேந்திரம், அரசாங்க ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், அரசாங்க லிகிதர் சேவை சங்கம் உட்பட இன்னும் சில அமைப்புகள் இக்கூட்டில் உள்ளன.

### இடதுசாரிகளின் கூட்டு முயற்சி

இவை அனைத்தும் கடந்த சில தினங்களுக்கு முன் இவ்வாறான கூட்டு ஒன்றை ஏற்படுத்தி இயங்குவதன் அவசியத்தை வலியுறுத்தி பேச்சுவார்த்தை நடாத்தி வந்தன. இம்முயற்சிக்கு முக்கிய பங்காற்றியது நவசமசமாஜக் கட்சியாகும். ஆனாலும் இதில் ட்ரொஸ்கிச மாவோயிச சித்தாந்த முரண்பாடுகள் தொடர்ந்தும் தடையாகவே இருந்து வந்தன. குறிப்பாக மாவோ இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சண்முகதாசனின்)யின் பொதுச்செயலாளர் அஜித் ரூபசிங்க (இவர் தேசிய சமாதானப் பேரவையின் தேசிய அமைப்பாளராக உள்ளார்) மாவோயிச கட்சிகள், குழுக்கள், தனிநபர்கள் என்போரை மாவோயிச அணியின் கீழ் ஓரணி திரட்டுவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தார். ட்ரொஸ்கிஸ்டுகளை விமர்சித்தும் வந்தார். ஆனால் அவரது முயற்சி போதிய அளவு சாத்தியமளிக்கவில்லை. "மாவோயிச அணி" எனும் பேரில் புரட்சிகர முன்னெடுப்புகளை குறுக்கத் தேவையில்லை என்பதே பலரது கருத்தாக இருந்தது. இந்நிலையிலேயே விரிந்த தளத்தில் ஆனால் பொதுவாக உடன்படக்கூடியவற்றுள் இணைந்து செயற்படுவோம் என சில அமைப்புகள் பேசி வருகையில் அவர்களுடன் இணைந்து பேச தயாரானது.

மே தினத்தன்று, இவ்வாறு கூட்டு சேர்ந்து பல குழுக்களுடனும் பேசிப்பார்த்த போது, எல்லா அமைப்புகளிடமுமே பொதுவாக மேதினத்தின் பின்பு இக்கூட்டையே தக்கவைத்து, மேற்கொண்டு இயக்குவதற்கான ஆவலும், எதிர்பார்ப்பும் தாகமும் இருந்ததைக் காண முடிந்தது.

### தியெச குழு: புதிய சிந்தனை

இக்கூட்டில் இணைந்துள்ள 'தியெச' கல்வி வட்டத்தினரால் ஒரு துண்டுப்பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டிருந்தது. அதனை தயாரித்திருந்தவர் அக்குழுவைச் சேர்ந்த அஹிங்சக பெரேரா என்பவர். அவர் இக்கூட்டு குறித்து இப்படிக் குறிப்பிடுகிறார்.

*"...இடது சாரி சக்திகளுக்குள்ளேயே இருக்கும் தவறான போக்குகளை களைந்து ஐக்கியமாக போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே யுத்தம் தனியார்மயம், அரச அடக்குமுறை என்பவற்றுக்கு எதிராகவும், தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வுக்காகவும் சகல இடதுசாரிக் மற்றும் முற்போக்கு சக்திகள் இனவாதத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக பரந்த அடிப்படையில் ஐக்கியப்படல் மற்றும் ஐக்கியப்படுத்தலின் அவசியத்தை இந்த தினத்தில் வேண்டி நிற்கிறோம். ...நிச்சயமாக இத்துடன் நாம் திருப்தியடைந்துவிட முடியாது. இது ஆரம்பத்துக்கான அத்திவாரம் மட்டுமே. இதனை மேலும் விரிவடையச் செய்வதே எம்முன் உள்ள பணி..."*

"தியெச" குழுவானது ஒரு அரச சார்பற்ற நிறுவனமாக(NGO) இயங்கி வருகிறது என்ற போதும் நிதியுதவிகளை தமது அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் ஆரம்பகர்த்தாக்கள் ஜே.வி.பி.யின் முன்னாள் மாவட்டத் தலைவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. குறிப்பாக வசந்த திசாநாயக்க, பெட்ரிக் பெர்ணாண்டோ என்போர் 1971 ஏப்ரல் கிளர்ச்சியில் முக்கியமானவர்கள். இவர்கள் சிறைக்குள்ளேயே நடந்த "கிளர்ச்சி" பற்றிய விவாதத்தின்போதே இவர்கள் பிரிந்து சென்றனர். விடுதலையானதன் பின் "ஜனதா சங்கம" எனும் அமைப்பை நடத்தி வந்தனர். பின்னர் அதுவும் சிதைந்ததன் பின் "தியெச" எனும் இந்நிறுவனத்தை இயக்கி வருகின்றனர். ஜே.வி.பியை குறித்த பல விமர்சன நூல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். இவர்களால் எழுதப்பட்ட நூல்களே இன்றும் முக்கிய நூல்களாக உள்ளன. தொடர்ச்சியாக பல கருத்தரங்குகளையும் நடாத்தி வருகின்றனர். "தியெச" எனும் இரு மாதங்களுக்கொருமுறை ஒரு



சஞ்சிகையையும் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக வெளியிட்டு வருகின்றனர். அந்த சஞ்சிகையானது நவீன மார்க்சீய சிந்தனைகள் குறித்த விவாதத்தை நடாத்தி வருகிறது. அமைப்பியல்வாதம், பின்நவீனத்துவம் குறித்து குறிப்பிடத்தக்க அளவு அக்கறை செலுத்தி வருகின்றனர்.

இது தவிர சிறு சிறு குழுக்களாகவும் இயங்கி வரும் பல குழுக்கள் இந்த இடதுசாரி ஐக்கிய அணி குறித்து மிகுந்த ஆர்வத்துடனும், அவதானித்து வருகின்றனர். கடந்த கால சகப்பான அனுபவங்கள் காரணமாக ஒரேயடியாக போய் இணைந்து செயற்பட சிறிது தயக்கமும் காட்டி வருகின்றனர்.

### அரசுடன் உள்ள இடதுகள்

அரசாங்கத்துடன் இணைந்திருக்கிற இடதுசாரிகளைப் பொறுத்தவரை (கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி (வைபி.டி.சில்வா தலைமையிலான), நவ சம சமாஜக் கட்சி (வாசுதேவ நாணயக்கார அணி) அவை அனைத்துமே வெறும் பெயர்ப்பலகையுடன் இருக்கின்ற, மரபார்ந்த, மக்களிடமிருந்து அந்நியப்பட்டுள்ள கட்சிகளாகவே உள்ளன. இவை அனைத்தும் தொழிலாளர்களுக்கெதிரான அரசின் நடவடிக்கைகள் அனைத்துக்கும் துணைபோவனவாகவே உள்ளன. அரசாங்கத்தின் பல அடக்குமுறைகளை எதிர்த்து செயற்படுவனவாக இல்லை. அரசாங்கத்தை கவிழாமல் பாதுகாக்க வேண்டும் எனும் நிலைப்பாட்டில் தொடர்ந்தும் இருக்கின்றன. குறிப்பாக தொழிலாளர்களையும், சிறுபான்மை சமூகங்களையும் அடக்குவதற்காக அரசு பாவித்துவரும் கருவியான அவசரகால சட்டத்துக்கு இன்னும் ஆதரவு தெரிவித்து வருகின்றன. புதிய தலைமுறையினரை இக்கட்சிகளில் காண்பதே அரிது. இன்னமும் அக்கட்சிகள் தாம் இருப்பதை உணர்த்தி வரும் காரணி எதுவெனில் நாற்பது வருடத்துக்கு முன்னர் ஆற்றிய அரசியல் பங்களிப்பே. அதைச் சொல்லியே இது வரை கடத்தியாகிவிட்டது. இனி...?

### எதிரிகள் யார்? நட்பு சக்திகள் யார்?

இது தவிர மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கை முற்போக்கு முன்னணி என்பன மரபுசார் இடதுகளாகவும் பேரினவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவையாகவுமே உள்ளன. ஏனைய இடது சாரிக்கட்சிகள் அனைத்தையுமே எதிரிகளாகக் காண்பவர்கள். நட்பு சக்தியாக எதனையும் இனங்கான மறுப்பவர்கள். இந்த அடிப்படையிலேயே ஜே.வி.பியானது ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைக்க மறுத்து வருகிறது. ம.ஐ.மு. மற்றும் இ.மு.மு. ஆகியவை இனவாத அமைப்புகளுடன் மட்டும் கூட்டணி அமைத்து இயங்கி வருபவை.

இந்த பின்புலங்களுடன் தான் மே.தின "இடதுசாரி கூட்டணியை நோக்க வேண்டும். கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக இடதுசாரி இயக்கங்கள் பல, துண்டுதுண்டாக சிதறுவதும், பின்னர் கூட்டணி அமைப்பதும், பின்னர் மீண்டும் உடைவதுமான போக்கானது வரலாற்றில் புதியதொன்றல்ல. ஆனால் கூட்டணி அமைக்கும் போது இருக்கும் வேகம், இலக்கு, சித்தாந்த அர்த்தப்பாடு என்பவை, சிதறும்போது அதே அளவு சித்தாந்த அர்த்தப்பாடு, லட்சியம் என்பவை இருந்ததில்லை என்பதே கடந்தகால வரலாறு.

### புதிய நம்பிக்கை?

இந்நிலையில் ஐக்கிய இடதுசாரிகள் மே தினத்தை முன்னிட்டு மீண்டும் ஒரு "ஐக்கிய இடது கூட்டணி" ஒன்றை கட்டியெழுப்பும் இம்முயற்சியானது பல முற்போக்கு சக்திகளை அவதானிக்கச் செய்துள்ளது என்றால் அது மிகையில்லை. தற்போதைக்கு இணைந்துள்ள அமைப்புகளின் பின்னணியைப் பார்க்கையில் பல கவனிக்கத்தக்க பொதுப்பண்புகளை காணமுடிகிறது. குறிப்பாக இப்படிக் கூறலாம் (பெரும்பாலும்).

*1.மரபுசார் பார்வையை கேள்விக்குள்ளாக்குதல், அதனை உடைக்கவும் தலைப்படுதல்*

*2.இனப்பிரச்சினைக்கு: தமிழ் மக்கள் தனியாக பிரிந்து செல்லக்கூடியவகையிலான சுயநிர்ணய உரிமை இருப்பதை அங்கீகரிப்பவர்கள்.*

*3) புதிய மார்க்சீயசித்தாந்தங்களை விவாதிக்கவும் அதனை ஓரளவு முற்கொண்டும் செல்பவர்கள்.*

*4.ஏனைய இடது சாரி இயக்கங்களை - தமது சித்தாந்தத்துடன் முரண்பட்ட போதும்- நட்பு சக்திகளாக நோக்குபவர்கள்.*

*5.அரசின் மோசமான நடவடிக்கைகளை எதிர்த்து நிற்பவர்கள். கணிசமான அளவு எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருபவர்கள்.*

மரபுப்பார்வையிலிருந்து முறித்துக்கொண்டு செயல்பட எத்தணிக்கும் இப்போக்கு முக்கியமாக நோக்கத்தக்கது.

இதுவும் தொடர்ந்து நிலைக்குமா? இன்றைய முக்கிய பணிகளை நிறைவேற்றுவதில் எந்தளவு முன்னேறப்போகிறது? ஏனைய சமூக சக்திகளை எப்படி தம்முடன் இணைத்துக்கொள்ளப் போகிறது? ஜே.வி.பி.யின் அணிதிரட்டல்களுக்கு முன்னால் எப்படி நின்று பிடிக்கப் போகிறது? அரசின் நடவடிக்கைகளை எப்படி எதிர்கொள்ளப்போகிறது? மையப் பிரச்சினைக்கு அவை வழங்கப் போகும் முக்கியத்துவம் என்ன? சமூகப் போராட்டங்களை எவ்வாறு இணைத்துக் கொள்ளப்போகிறது? என்பதே இன்று எம்முன் உள்ள கேள்வி.

**- கோமதி**

## குறிப்பேடு...

கவனத்தைக் கோரியிருந்தது. இந்நாடகத்திற்கு அனுசரனை வழங்கும் 'தேசிய சேமிப்பு வங்கி' சர்ச்சையான சில விடயங்களை தவிர்த்து ஒளிபரப்புவதாகவும், இனிவரும் தொடர்களிலுள்ள ஆட்சேபனையான விடயங்களைக் குறிப்பிட்டுச் சொல்லுமாறும் கூறி நாடகத்தின் வீடியோ பிரதியினை அவ்வமைப்பிற்கு வழங்கியது. முஸ்லிம் வெகுஜனத் தொடர்பு அமைப்பின் அங்கத்தவர்களும் ஏனைய சிலரும் அந்நாடகத்தின் ஐந்து தொடர்களை பார்வையிட்டனர். நாடகத்தை முழுமையாகப் பார்க்காமல் முடிவுகளை எடுக்க முடியாது என்பதாலோ என்னவோ இது எழுதும்வரை அவ்வமைப்பின் நாடகம் தொடர்பான தீர்மானங்களை அறியமுடியவில்லை. குறித்த தொடர்களைப் பார்த்த ஒரு நண்பர் 'இன முரண்பாடுகளை வளர்க்கும் எதனையும் முற்றாகத் தவிர்ப்பதே நல்லது' என்றார். எனினும் நாடகம் இன்னும் ஒளிபரப்பாகிக்கொண்டிருக்கிறது.

1915ம் ஆண்டின் சிங்கள - முஸ்லிம் கலவரத்திற்கான காரணியே இந்நாடகத்திலும் வடிவங்கொள்கிறது. அதாவது முஸ்லிம்களின் வர்த்தகத்துறைசார் நிலைப்பாடும், அதனால் ஏற்படும் விளைவுகளுமே அன்றிலிருந்து, இன்று வரையான முஸ்லிம் எதிர்ப்புணர்வுக்கான பிரதான காரணியாக உள்ளது.

அன்றைக்கும் இன்றைக்குமான முஸ்லிம்களுக்கெதிரான சிங்கள பௌத்த நிலைப்பாட்டுக்கு கீழ் வரும் குறிப்பை உதாரணமாகக் காட்டலாம்.

*''அந்நியரான முகமதியர் ஷைலொக்கிய வழிமுறைகளால் யூதர்கள் போன்று செல்வந்தராய் மாறினர். 2358 வருடங்களாக அந்நிய முற்றுகைகளில் இருந்து நாட்டைக்காப்பதற்காக இரத்தத்தை ஆறு போல் பெருக்கிய மூதாதையரைக் கொண்ட மண்ணின் மைந்தரான சிங்களவர் பிரித்தானியரின் கண்களில் நாடோடிகளாய்த் தெரிகின்றனர். தென்னிந்திய முகமதியர் இலங்கைக்கு வந்து, வியாபாரத்தில் எத்தகைய அனுபவமுமற்ற, உதாசீனம் செய்யப்பட்ட கிராமவாசியைக் காண்கிறான். இதன் விளைவு முகமதியன் முன்னேறுகிறான். 'மண்ணின் மைந்தன்' பின்தள்ளப்படுகிறான்.'*

**– இலங்கை இன, வர்க்க முரண்பாடுகள்.**

இன முரண்பாடுகள் இலங்கையில் எல்லாவகையிலும் வடிவத்திலும் விரிசலுற்றுக்கொண்டே போகிறது ஊடகங்களும் இதற்கு உற்ற துணை புரிந்து கொண்டிருக்கின்றன.

குமாரி ஜயவர்த்தனா தன் நூலின் இறுதியில் இவ்வாறு சிலவற்றைக் குறிப்பிடுகிறார்.

*''பத்திரிகைகள் எல்லாம் இனவாதமும் பகட்டான தேசியக் கொள்கையும் கொண்டவையாக - உள்ளன...''*

*''... போராட்டம் நீண்டதாகவும் கடுமையானதாகவும் இருக்கும்...''*

*''நீதி விரைவாகவோ அல்லது சிறிது காலம் தாழ்த்தியோ நிலைபெறும் என நம்புகிறேன்...''*

அவரின் 87ம் ஆண்டு நம்பிக்கை இன்னும் ஈடேறவில்லை.

## தன்னையும்...

நிறைவேற்றுவதற்கான ஓர் ஆற்றலுள்ள நபர் என்ற அடிப்படையில்தான் நடைபெறுகிறதேயொழிய பெண் என்ற அடிப்படையிலல்ல. மேலும் கட்டுரையாளரின் ''ஆயுதமேந்திய கன்னிகள்'' என்ற பதம் பொருளற்றது.

தமது செயற்பாடுகளுக்கு இடைஞ்சலில்லாது இலகுவாகவும் சௌகரியமாகவும் இருப்பதற்கு தலைமுடியை வெட்டிக்கொள்வதையும், உடைகளை தேர்ந்தெடுத்துக் கொள்வதையும் ''பாலற்ற நிலை'', ''ஆண்மையை நோக்கிய நிலை'' என்று கூறும் கட்டுரையாளரின் கருத்தினது மழலை நிலையை என்னவென்று சொல்வது! பெண்களுக்கான அடையாளங்கள் என அவர் கூறும் அடையாளங்கள் அனைத்துமே ஆண்களின் வடிவமைப்புகள் என்பதை அவரால் இன்னமும் உணர முடியாமல் இருப்பது வருந்தத்தக்கது. பெண்மையின் இயல்பென அவர் கூறிக்கொள்ளும் இரக்க சுபாவம், சாந்தம், சகிப்புத் தன்மை, சமூகவுறவு என்கிற உயர்ந்த பண்புகள் மானுடத்தின் ஒவ்வொரு நபரிடமும் இருக்கும் உயர்ந்த பட்ச எதிர்பார்ப்புக்களாகும். ஆனால் சமூகம் அதைப் பெண்களிடம் மட்டும் வற்புறுத்துகிறது. ''பெண் என்றால் இப்படி இப்படித்தான் இருக்கவேண்டும்'' என்று இந்த ஆணாதிக்க சமூகம் வடிவமைத்துக் கொடுத்துள்ள பெண்மக்கான தோற்றத்திலிருந்து விடுபடாத நிலையையே அவர் இவற்றைச் சுட்டிக் காட்டும் போது காணமுடிகிறது. பெண்களை மகாத்மா ஆக்குவது போன்றும், தெய்வப்பதவி தருவது போன்றும் ஒரு பிரமையை உண்டுபண்ணி, அதனூடாகத் தமது தேவைகளை கச்சிதமாக நிறைவு செய்து கொள்ளும் ஆணாதிக்கத்தின் அடிவருடித்தனத்தைத்தான் இதில் காணமுடிகிறது. சமூக நடைமுறைகளிலிருந்தும், கலாசார வரையறைகளிலிருந்தும் மீண்டு கொள்ளாது அதன் விளிம்பு வழி நின்று கொண்டு அவர் முன்வைக்கும் பெண் சமத்துவம் தொடர்பான கருத்துக்கள் பல்லாயிரம் முறை கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியவை. எல்லோரையும் போலவே ஒவ்வொரு பெண்ணும் மனித ஜீவியாக, மனுசியாக தம் இயல்பண்புகளுடன் சுயமாகவும் சுதந்திரமாகவும், அவளாகவும் வாழ உரித்துடையவள் என்ற அடிப்படையை மறந்துவிட்டு பெண் சமத்துவம் பற்றிப் பேசிக்கொள்வதில் வேடிக்கையைத் தவிர வேறொன்றுமில்லை.

புலிகள் தொடர்பான நிறைகுறைவான விளக்கம், வன்முறையை எதிர்ப்பவர் எனச்சொல்லிக்கொள்ளும் தனது வடிவத்தை காத்துக் கொள்வதற்கான பிரயத்தனம், ஆணாதிக்க சமூகத்தால் உருவாக்கப்பட்ட கலாசார வரையறைகளிலிருந்து விடுபடாது அதனோடு அலைக்கழிக்கிற நிலை, இவையெல்லாம் சேர்ந்து ராதிகா குமாரசாமியின் கட்டுரையை சிறப்பிழந்து குறைவிருத்தி நிலையில் தந்துள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

*வனஜா*
*கொழும்பு - 6*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka

திருமலை:
மூதூர்-தோப்பூர்

# கப்பம் கேட்டு வரும் கடிதங்கள்!

திருமலை மாவட்ட மூதூர், தோப்பூர் பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம்களிடம் புலிகள் கப்பம் கோரி வருகிறார்கள். அத்துடன் மாணவர்களைப் பணயம் வைத்துப் பணம் பெறும் நடவடிக்கைகளும் தோப்பூரில் இடம் பெறுவதாகத் தெரியவருகிறது.

மூதூரில் அண்மையில் இடம்பெற்ற ஒரு வைபவத்திற்காக (புஹாரி கந்தூரி - சன்மார்க்கக் கடமையல்லாத இது இலங்கையின் சில பிரதேசத்து முஸ்லிம்களால் ஒரு உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது) காட்டில் மரம், விறகுகள் வெட்டச் சென்ற சுமார் 25 வண்டில்களைப் புலிகள் பிடித்து வைத்து ஒவ்வொன்றுக்கும் ரூபா 500 பெற்ற பின்னரே மீள ஒப்படைத்துள்ளனர்.

மூதூர் பிரதேசத் தொழிலாளர்கள் முதலாளிகள் எனப் பலருக்குப் புலிகளிடமிருந்து கப்பம் கோரிக் கடிதங்கள் வந்துள்ளன. சுண்ணாம்பு வியாபாரிகள், இறைச்சிக்கடை முதலாளிகள் எனப் பலருக்குக் கடிதம் வந்து, அதில் சிலர் பணமும் வழங்கியுள்ளனர். ஆகக் குறைந்த கப்பக் கோரிக்கை ரூபா ஐயாயிரமாக இருக்க ஒரு இறைச்சிக்கடை முதலாளியிடம் 25 ஆயிரம் கோரப்பட்டிருந்தது. குறித்த தொகையை அவர் புலிகளுக்கு வழங்கி விட்டார் என்ற சந்தேகத்தில் இராணுவத்தினர் அவரைக் கைது செய்து விசாரித்து விடுதலை செய்திருக்கின்றனர்.

கொடுத்தால் இராணுவம் விடாது, கொடுக்காவிட்டால் புலிகள் விடாது என்ற இருதலைக் கொள்ளி எறும்பு நிலைக்கு இப்பிரதேச முஸ்லிம்கள் ஆளாகியிருக்கின்றனர். இவ்வாறானதொரு 'கப்பக் கடிதம்' மூதூர் பிரதேச சபைத் தலைவருக்கும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூதூர் பிரதேசத்தை விட தோப்பூர் பிரதேசம் புலிகளுக்கு அண்டி இருப்பதால் அவர்களால் மாணவர்களை கடத்திச் சென்று கப்பம் கோரவும், ஊரை அண்டிய பகுதிகளில் நடமாடவும் முடிகிறது. தோப்பூரில் 30-40 பேரடங்கிய புலிகள் கோஷ்டியொன்றைக் கண்டு பயந்தோடிய ஒரு பெண்ணை அழைத்து 'ஏன் ஓடுகிறீர்கள், நாங்கள் என்ன மிருகங்களா... உங்களை மாதிரி மனிசர்கள் தானே...'' என்று கூறியிருக்கிறார்கள்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் தோப்பூரைச் சேர்ந்த தனியார் தொலையழைப்பு நிறுவன உரிமையாளர் ஒருவருக்கு காலக்கெடு விதித்து ஐம்பதாயிரம் கோரி கடிதம் வந்திருந்தது. காலக்கெடு முடிந்து பணம் கிடைக்காததால் அவரின் அடையாளத்தைச் சொல்லி கொன்று விட்டு வருமாறு சிலரை அனுப்பியுள்ளனர். அவர்கள் வந்த போது குறித்த நபர் அங்கிருக்கவில்லை. அவர் பணத்தை கொடுத்தனுப்புவதற்காக வெளியே சென்றிருந்தாராம். வந்தவர்கள் குறித்த இடத்தில் அதேமாதிரியான அடையாளத்துடன் இருந்த வேறொரு நபரைச் சுட்டுவிட்டுச் சென்றுள்ளனர். அவர் கொடுத்தனுப்பிய பணம் பின்னர் புலிகளைச் சென்றடைந்துள்ளது.

இச்சம்பவத்தின் பின்னர் இப்பிரதேசவாசிகளைப் பயம் பீடித்துள்ளது. இராணுவத்திற்கு தெரியாமலேனும் சிலர் கப்பம் கொடுத்திருப்பதாகவும், கப்பம் கொடுக்க இருப்பதாகவும் தெரியவருகிறது. இது சம்பந்தமாக எவரும் பொலிஸில் முறைப்பாடு செய்யாதது, கொடுக்கமாட்டோம் என பகிரங்கமாக மறுக்காதது புலிகளின் அச்சுறுத்தலின் உக்கிரத்தையே காட்டி நிற்கிறது. தற்போது மாணவர்களையும் கடத்தத் தொடங்கியிருப்பது மக்களிடத்தில் இன்னும் என்றுமில்லாத பீதியை ஏற்படுத்தியிருக்கிறது.

இச்சம்பவங்கள் ஒரு புறம் சாதாரணமாக நடந்துகொண்டிருக்க மறுபுறம் சில முகமூடிக்காரர்கள் இரவுக் கொள்ளையிலும் ஈடுபட்டுவருகிறார்கள். இது மூதூர்ப் பகுதியில் இடம் பெற்று வருகிறது. இது புலிகளல்ல. உள்ளூர்க் கள்ளர்கள் தான் என ஊர் மக்களில் பலர் கூறுகின்றனர். இவ்வாறான சம்பவத்துக்குப் புலிகள் தான் கதவு திறந்து விட்டிருக்கிறார்கள் என்பதும் ஊராரின் கருத்தாகும்.

சில காலமாக எல்லா வகையிலும் சுமுகமடைந்திருந்த உறவுகள் பயம் விதைக்கப்பட்டு விரிசலுற்றுக் கொண்டு போகின்றன. கடிதங்கள் கிடைக்கப்பெற்றவர்கள் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாத நிலையில் உள்ளார்கள்.

புலிகள் தான் இது தொடர்பான நடவடிக்கைகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். எல்லைப் புறத்தைச் சேர்ந்த சிலரின் வேலை இது என்று வாழாவிருந்து விடாது தங்களின் நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டுமென்பதே அனைவரதும் விருப்பமாகும்.

● பாதுஷா

# வெளியேறுமாறு பணிப்பு!

-லக்பிம

வவுனியா - கிளிநொச்சி பெருந்தெருவை அண்டியுள்ள இடங்களில் குடியிருந்த மக்களை உடனடியாக அப்பிரதேசத்திலிருந்து அகலுமாறு புலிகள் இயக்கம் உத்தரவிட்டுள்ளதாக, கொழும்பிலிருந்து வரும் சிங்கள வாரப்பத்திரிகையான 'லக்பிம' செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புப் படைக்கு எதிராகப் பெருந்தாக்குதலொன்றை நடத்துவதற்காகவே அப்பிரதேசத்திலிருந்து மக்களை புலிகள் அகற்றுவதாக வடபகுதித் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது,

வவுனியா - கிளிநொச்சி பெருந்தெருவைப் பிடிக்கப் பாதுகாப்புப் படையினர் முன்னேறி வருவார்கள் என எதிர்பார்த்தே புலிகள் இயக்கம் இவ்வாறு தாக்குதலுக்குத் தயாராவதாகத் தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்போது புலிகள் உறுப்பினர்கள் அப்பாதையின் இருபுறமும் பாரிய பதுங்கு குழிகளை அமைக்கத் தொடங்கியுள்ளனர்.

அவர்கள் தமது வாகனங்களில் அப்பதுங்கு குழிகளுக்கு ஆயிரக் கணக்கான மோட்டார் குண்டுகளைக் கொண்டுபோவதாகவும், இப்பாதையைப் பாதுகாப்பதற்காக ஆயிரக்கணக்கில் தமது இயக்கத்தில் சேருமாறு கோரி வடபகுதி இளைஞர், யுவதிகளிடம் பிரச்சார இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் தகவல் வட்டாரம் தெரிவிக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்த புலிகள் இயக்க நிர்வாகக் காரியாலயத்தையும், அங்குள்ள ''மாவீரர் குடும்பங்களையும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கொண்டு செல்வதற்குப் புலிகள் இயக்கத் தலைமை தமது உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதேசமயம் பாதுகாப்புப் படை வன்னிப் பிரதேசத்தில் யுத்தத் தயாரிப்பைப் பலப்படுத்தி வருவதாக அறியக்கிடைக்கிறது.

இராணுவச் சிப்பாய்கள் பெருந்தொகையினர் கனரக வாகனங்களுடன் யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து வன்னிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வட முனையில் காங்கேசன்துறை வரையான பிரதான பாதையில் இப்போது பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாதது, வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையே அமைந்துள்ள 73கி.மீ. நீளமான பாதை மட்டுமேயாகும்.

காங்கேசன்துறையிலிருந்து, ஆனையிறவு வரையிலான பாதை 1995 ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட சூரியக்கதிர் நடவடிக்கையினூடாகவும் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி வரையான பாதை 1996 செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட சத்ஜய 3 நடவடிக்கையினூடாகவும் பாதுகாப்புப் படையினரால் பிடிக்கப்பட்டன.

வவுனியாவுக்கும் - கிளிநொச்சிக்கும் இடையிலான பாதையும் பாதுகாப்புப் படையினரின் கைகளுக்குட்பட்டால் கொழும்பிலிருந்து, யாழ்ப்பாணம் வரையும் நிலப்பரப்பினூடாகச் செல்லமுடியுமென்பதால் வடபகுதி இராணுவத்துக்குத் தேவையான இராணுவ தளபாடங்களை வழங்க மிகவும் இலகுவாக அமையும்.

இது வடபகுதி யுத்தத்தைத் தீர்மானகரமான விதத்தில் பாதிக்குமெனவும், போர்க்களத்தில் பலச்சமநிலையில் பாரிய மாற்றமொன்று ஏற்படுமெனவும் சிந்திக்கும் புலிகள் இயக்கம், வவுனியா - கிளிநொச்சி பெருந்தெரு இராணுவத்தின் கைகளில் வீழ்ந்து விடுவதைத் தடுப்பதற்காகக் கடும் பிரயத்தனம் மேற்கொள்வர் எனத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப் பாதையைப் பிடிப்பதற்காக இராணுவம் முயற்சி செய்தால் தமது இயக்கம் உயிரைத்துச்சமாக மதித்து முழுப் பலத்தையும் பாவித்து அதனைத் தடுக்குமெனப் புலிகள் இயக்கம் இதற்கு முன்பு தெரிவித்திருந்தது.

பிரதான இராணுவ நடவடிக்கை எத்திசையிலிருந்து, எத் திசையை நோக்கி நடத்தப்படுமெனப் புலிகள் இயக்கம் அறிந்து கொள்ள முடியாத விதத்தில் ஒரே நேரத்தில் பல பாதைகளில் நடவடிக்கைகள் பலவற்றை நடத்தலாமென்பது இராணுவத்துடன் சேர்ந்து செயற்படும் தமிழ் இயக்கங்களின் கருத்தாகவுள்ளது.

இதன்படி மன்னார், பூநகரிக்கிடையிலான பாதையிலும் இராணுவ நடவடிக்கையொன்று நடத்தப்படலாமென்ற பீதியில் அப்பாதைக்கு அண்மையில் குடியிருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வந்த அகதிகள் மீளவும் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

# பெயர் மாற்றம் முட்டாள் தனமான முடிவு!

-யுக்திய

இலங்கையில் இனப்பிரச்சினை நிலவுகின்ற ஒரு சூழலில், மிகப் பெரியளவிலான யுத்த நடவடிக்கையின் பின் கைப்பற்றப்பட்ட பாரம்பரிய தமிழ்க் கிராமமொன்றிற்கு சிங்களப் பெயரொன்று சூட்டப்படுவதை எவ்வாறு விளங்கிக் கொள்வது?

இவ்வாறான பெயர் மாற்றத்துக்குள்ளாகும் கிராமமொன்றில் வசிக்கும் மக்கள் இதனை எப்படி விளங்கிக் கொள்வர்?

வவுனியா-மன்னார் பெருந்தெருவில் அமைந்திருக்கும் பறையனாலங்குளம் என்ற கிராமத்தின் பெயர் "சப்புமல்புர" என்று பெயர் மாற்றப்படுவது தொடர்பாக, இரண்டு மாதங்களுக்குமுன் யுத்தப்பிரதானிகளால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாகவே நாம் இந்தக் கேள்வியை எழுப்புகின்றோம்.

பறையனாலங்குளம் என்பது ஒரு பாரம்பரிய தமிழ்க் கிராமம் ஆகும். அக்கிராமத்தின் பெயரை சப்புமல்புர என்று மாற்றுவதற்கு யுத்த பிரதானிகள் முனைந்தற்கு காரணம் அங்கு இராணுவ முகாமொன்றை அமைப்பதற்காகவே என்று முன்பு பேசப்பட்டது.

யாழ்ப்பாணம் இலங்கை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின் ஜெனரல் ரத்வத்த அவர்களை "சப்புமல் இளவரசன்" என்ற வரலாற்றுப் பெயர் கொண்டு ஒரு சிலர் அழைக்கத் தொடங்கியிருந்தனர். இதைப் பார்க்கும் போது இவ்வாறானதொரு பாரம்பரியக் கிராமத்திற்கு இவ்வாறு பெயரிடப்படுவது தூர நோக்கற்ற ஒரு செயல் மட்டுமல்லாமல் முட்டாள் தனமான ஒரு செயலுமாகும்.

இவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் தமது எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளன. இனப்பிரிவினை உணர்வு மேலோங்கியுள்ள இன்றைய சூழலில், யுத்தமொன்றுக்குப் பின் தமிழ்க் கிரமமொன்றுக்கு சிங்களப் பெயரிடுவதன் மூலம் இனப்பிரிவினை உணர்வை மேலும் அதிகரிக்கச் செய்வது மட்டுமல்ல ாமல், அநீதிக்கு உள்ளாகும் இனத்தை மனோரீதியான வேதனைக்கு உள்ளாக்கவுமே முடியும்.

பின்தங்கிய சிறிய கிராமமொன்றின் பெயரை சிங்களத்தில் மாற்றஞ்செய்வது ஒரு முக்கிய விடயமில்ல என்றும், அது பொருட்படுத்தக்கூடிய அளவுக்கு பெரிய விடயமல்ல என்றும் கூறப்படும் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளாதது மேற்கூறிய அடிப்படையிலேயே ஆகும். இனங்களுக்கிடையேயான ஒற்றுமை மிகவும் அவசியமான ஒன்றாகும். மிகவும் கவனமாகக் கையாளப்படவில்லையாயின் மிகச் சிறிய ஒரு விடயம் கூட மிக மோசமான பாதிப்பினை ஏற்படுத்தி விடக்கூடும்.

பறையனாலங்குளம் சப்புமல்புர ஆக்கப்பட்டதுபோல் இன்னொரு தமிழ்க் கிராமமும் சிங்கள பெயர் மாற்றத்துக்கு உள்ளாகாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இந்நாட்டுத் தமிழ் மக்களின் இனரீதியான பிரச்சினைகள் நியாயமானது என ஏற்றுக்கொள்ளும் சந்திரிகா அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைக்கு இடம் கொடுப்பது ஏன்? இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் போது, அரசியல் தீர்வில் அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்ளும்என நாம் எவ்வாறு நம்புவது?

தமிழ் மக்கள் எழுப்பும் கேள்வியும் இதுதான். சிங்கள புத்திஜீவிகளும், அதிகாரிகளும், கொள்கை வகுப்பாளர்களும் இப்பிரச்சினை தொடர்பாக கவனமாக செவி மடுத்தல் வேண்டும். இத்தவறைத் திருத்துவதுடன் மீண்டும் இடம்பெறாவண்ணம் கவனம் எடுத்தலும் வேண்டும்.

சமாதான அரசியல் தீர்வு காண்பதற்கான வெறுமனே யோசனையை முன்வைப்பதுடன் மட்டும் நில்லாது அதை நடைமுறைப்படுத்துவதற்கேற்ற அரசியல் சூழ்நிலையையும் கலாசாரத்தையும் ஏற்படுத்துதலும் வேண்டும். மாறாக தூர நோக்கற்ற பெயர் மாற்றுவது போன்ற செயல்களால் இவ்வாறான நிலைமை உருவாகப் போவதில்லை.

(யுக்திய ஆசிரியர் தலையங்கம்)

---

கருத்தரங்கு

**'இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை'**

**இடம்:**
தெகிவளை, எஸ்.டி.ஜயசிங்க மண்டபம்
**காலம்:** 11.05.1997
**நேரம்:** 5 மணி
*தலைமை:* ரி.பாஸ்கரன்
*விரிவுரையாளர்கள்:*
1. கலாநிதி.ஜெகான் பெரேரா
2. திரு.சுமணசிறி லியனகே
3. திரு.சுரேஷ் பிரேமசந்திரன்
4. கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து
5. பேராசிரியர்.பத்மநாதன்

(அனைத்து உரைகளுக்கும் மொழிபெயர்ப்பு உண்டு)

---

கலந்துரையாடல்

**பெண்களுக்கெதிரான வன்முறை**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட அறிக்கையாளர்
ராதிகா குமாரசுவாமி
உடன்
அவரது 1997ம் ஆண்டு அறிக்கை பற்றிய கலந்துரையாடல்

**இடம்:**
மார்கா நிறுவனம்,
19/10, துட்டுகைமுனு வீதி
கிருலப்பனை, கொழும்பு-
**காலம்:** 09.05.1997
**நேரம்:** மு.ப.10.00 – 12.30 வரை
(கலந்துரையாடலை மும்மொழியிலும் மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய வகையில் வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன)

ஏற்பாடு:
பெண்கள் தொடர்பூடகங்களுக்கான கூட்டமைப்பு

---

தெருக்கூத்து

**'சமுதாயத்தில் பெண்கள் நிலை'**

பாடசாலை மாணவர்களுக்கு கிட்டக்கூடிய நிகழ்ச்சியாக சிங்கள நிகழ்ச்சியானது குருநாகல் ஜனதா வேதிகா நாட்டிய குழுவினராலும் தமிழ் நிகழ்ச்சியானது பூச்சியம் கலை வட்ட குழுவினராலும் தயாரிக்கப்பட்டுள்ளது

**இடம்:**
பம்பலப்பிட்டி, சென்ற் போல், மிலாகிரிய ஆலய மண்டபத்தில்
**காலம்:** 09.05.1997
**நேரம்:** பி.ப.1.30க்கு
(நிகழ்ச்சியின் முடிவில் கலந்துரையாடல் நடைபெறும்)
ஏற்பாடு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

---

**"தண்டே லூ கினி"**
**(தீப்பொறி)**

விபவி மாற்றுக் கலாசார மையத்தின் மாதாந்த சினிமாவும் கலந்துரையாடலும்

97.05.10
பி.ப. 2.30 – 6.00
97.05.11
காலை 9.00 – 12.00
நண்பகல் 12.00 – 200

**இடம்:**
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
58, தர்மராம வீதி
கொழும்பு – 06
ஏற்பாடு: "விபவி" மாற்று கலாச்சார மையம்
51/7, ராஜகிரிய வீதி, ராஜகிரிய.

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன். 18/2. அலோ சாலை, கொழும்பு ... 334. காலி வீதி. இரத்மலானை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்